உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 29 ஞாயிற்றுக்கிழமை (15-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:19

### கட்சியின் வருடாந்தக் கூட்டத்தில் பிரதமர் எச்சரிக்கை:

# அர்த்தமற்ற யுத்தமா? அபிவிருத்தியா? தீர்மானிக்கும் இறுதிக் கட்டத்தில் நாடு!

## வாய்ப்பைத் தவறவிட்டால் பேரழிவைத் தடுக்கமுடியாது

கொழும்பு,டிசெ.15

அர்த்தமற்ற யுத்தமா அல்லது நாட்டின் அபிவிருத்தியா என்பதை தீர்மானிக்கும் இறுதிக் கட்டத்தில் நாம் இருக்கின்றோம். இந்தத் தடவை சந்தர்ப்பத்தை தவறவிட்டால் நாட்டில் ஏற்படும் பேரழிவை எவராலும் தடுக்க முடியாது.

- இவ்வாறு எச்சரிக்கை கலந்த தொனியில் தெரிவித்திருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஐக்கிய தேசியக் கட்சியின் 48 ஆவது வருடாந்த மாநாடு நேற்றுக் காலை கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவீர தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக்கு தலைமை வகித்து பிரதமர் உரையாற்றினார்.

நாட்டின் பல பாகங்களில் இருநது சுமார் ஒரு லட்சம் பேர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் அமைச்சர் பெ.சந்திரசேகரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் பிரதி அமைச்சர் முத்துலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரைகளை வழங்கினர்.

மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சரும் கொழும்பு மாவட்ட ஐ.தே.க. அமைப்பாளருமான எம்.எச். முஹம்மது வரவேற்புரையை நிகழ்த்தினார்.

ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சர்கள் உட்பட பிரதேச சபைகள், மாகாண சபைகள் என்பனவற்றின் உறுப்பினர்களும், அமைச்சர்களும் பெருமளவில் சமுகமளித்திருந்தனர்.

அங்கு தலைமை உரை நிகழ்த்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாவது:-

இரண்டுபட்ட நாட்டையும் வங்குரோத்து நிலையில் இருந்த பொருளாதார சிக்கல்களையும் கொண்ட அரசையே நான் பொறுப்பேற்றேன். அரசு இன்றோ நாளையோ செத்து மடியும் ஒரு கொடிய நோயாளியைப் போலவே

(17ஆம் பக்கம் பார்க்க)

### இயல்பு நிலை திரும்புவதற்கு தடையாக உள்ள

# உயர் பாதுகாப்பு வலய விவகாரத்துக்கு இந்த மாத இறுதிக்குள் தீர்வு வேண்டும்!

## இன்றேல் உபகுழு கூட்டத்தை புறக்கணிப்போம் எனப் புலிகள் நேற்று திட்டவட்டமாகத் தெரிவிப்பு!

முகமாலை,டிசெம்பர்15

**குடாநாட்டில் இயல்புநிலை திரும்புவதற்குப் பெரும் தடையாக இருக்கும் உயர்பாதுகாப்பு வலயங்கள் விடயத்தில் அரசு இம்மாத இறுதிக்குள் உருப்படியான நடவடிக்கைகளை எடுத்து மக்கள் அங்கு மீளக்குடியமர வழி செய்யவேண்டும்.**

**அவ்வாறு செய்யாமல் தட்டிக்கழிக்கும் பட்சத்தில் அடுத்த உபகுழுக் கூட்டத்தில் பங்குபற்றாமல் அதனைப் புறக்கணிப்போம்.**

**நேற்று முகமாலையில் நடைபெற்ற பாதுகாப்பு தொடர்பான உபகுழுவின் கூட்டத்தில் புலிகள் இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர்.**

குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களாக ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்தி பூரணமான இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதில் அரசு அக்கறை காட்டுவதாக இல்லை. இந்த விவகாரத்தில் உருப்படியான நடவடிக்கைகள் எதனையும் எடுக்காமல் அரசு தட்டிக்கழித்து வருவது எமக்குப் பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது.

இந்த நிலையில் உபகுழுக் கூட்டங்களைக் கூட்டி வெறுமனே கூடியிருந்து பேசிவிட்டு கலைவதில் அர்த்தமில்லை என்று புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

நேற்று முகமாலை சூனியப் பிரதேசத்தில் நடந்த பாதுகாப்பு விவகாரங்களுக்கான உபகுழுவின் கூட்டத்தின் முடிவில் புலிகள் தரப்புக்

(18ஆம் பக்கம் பார்க்க)



முகமாலையில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு உப குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு வெளியேறும் கேணல் கருணா தலைமையிலான விடுதலைப் புலிகள் தரப்புக் குழுவினர்.

# யாழ். குடாநாட்டில் இருந்து ஈ.பி.டி.பி. வெளியேறவேண்டும்

## முகமாலைக் கூட்டத்தில் கருணா வலியுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.குடாநாட்டில் இருந்து ஈ.பி.டி.பி.யினர் வெளியேறவேண்டும், என்று முகமாலையில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.

மட்டு.அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதியும் புலிகளின் சமாதானக் குழு உறுப்பினருமான கேணல் கருணா இத்தகவலை தெரிவித்தார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

ஈ.பி.டி.பியினர் யாழ்.குடாநாட்டிலிருந்து வெளியேற வேண்டும் என்று நாம் கூட்டத்தில் கோரினோம். அவர்களை கண்டிப்பாக வெளியேற்றியாக வேண்டிய அவசியம் குறித்தும் அரச தரப்புக்கு நாம் விளக்கினோம்.

நெல்லியடியில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகவும் நாம் கூட்டத்தில் பிரஸ்தாபித்தோம். அங்கு மக்கள் மீது ஈ.பி.டி.பியினர் கிரனேட் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். எனவே உடனடியாக அங்கிருந்து அவர்களை வெளியேற்றவேண்டும்.

நெல்லியடியில் இடம்பெற்ற சம்பவங்களில் காயமடைந்தவர்கள் பொதுமக்களே. அவர்களில் எமது இயக்கத்தைச் சேர்ந்த எவரும் இல்லை. அங்கு கிரனேட் தாக்குதலை ஈ.பி.டி.பியினர் தான் நடத்தியுள்ளனர்.

பேச்சுக்களை குழப்ப விரும்பும் வேறு சக்திகள் திட்டமிட்டு ஈ.பி.டி.பியைத் தூண்டிவிட்டுள்ளன. இந்த சக்திகளுடன் அரசும் உடன்பட்டு செயற்படுமானால் சமாதானப் பேச்சுக்கள் குழம்புவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன.


ஈ.பி.டி.பியினர் ஜனநாயக சக்தியாக இருந்தால் மக்கள் அவர்களை விரும்பியிருப்பார்கள். ஆனால், மக்கள் அவர்களை விரும்பவில்லை என்பது தெளிவு. ஜனநாயகத்திற்கு விரோதமான சக்தியாக இருப்பதால் தான் அவர்களை வெளியேறுமாறு மக்கள் கேட்கின்றனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கிரிக்கெட்

## நியூஸிலாந்து தொடர்: இந்திய அணி மண் கௌவியது



இந்திய வீரர் வீரேந்தர் ஷேவாக்கின் விக்கெட்டை வீழ்த்திய மகிழ்ச்சியில் நியூஸிலாந்து பந்து வீச்சாளர் ஷேன் பொன்ட்

வெலிங்டன்,டிசெ.15

இந்திய அணிக்கும் நியூஸிலாந்து அணிக்கும் இடையே வெலிங்டனில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து அணி 10விக்கெட்டுகளால் பெருவெற்றியீட்டியது.

கடந்த வியாழக்கிழமை தனது முதல் இனிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி நியூசிலாந்து வீரர்களின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்கமுடியாது முதலாவது நாளிலேயே அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 161 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. ராகுல் ட்ராவிட் மட்டும் ஓரளவு சிறப்பாக ஆடி 76 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி தனது முதலாவது இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது. ரிட்சட்ஸன் 89 ஓட்டங்களையும், நதன் அஸ்ரல் 41 ஓட்டங்களையும் குவித்தனர்.

டெஸ்டின் மூன்றாம் நாளான நேற்றுக்காலை தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி படுமோசமாகத் துடுப்பெடுத்தாடியது. 121 ஓட்டங்களுக்குள் தனது சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் இரு இனிங்ஸிலும் சேர்த்து நியூஸிலாந்து அணியை விட இந்திய அணி 35 ஓட்டங்களை மட்டுமே அதிகமாகப் பெற்றிருந்தது.

36 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி விக்கெட் இழப்பின்றி இலக்கை அடைந்தது. 10 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது. இதனால் 5 நாள் டெஸ்ட் போட்டியானது 3 நாள்களில் முடிவடைந்தது. ஆட்ட நாயகனாக நியூசிலாந்து அணியின் ரிட்சட்ஸன் தெரிவுசெய்யப்பட்டார்.

ஸ்கோர் விவரம்:- இந்தியா-161/10, 121/10 நியூஸிலாந்து - 247/10, 36/0

(ம-10)



இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலியின் விக்கெட் வீழ்ந்த மகிழ்ச்சியில் நியூஸிலாந்து அணித் தலைவர் ஸ்ரிபன் பிளமிங் (வலது) மற்றும் விக்கெட் காப்பாளர் ரொப்பி ஹார்ட்.

## தென்னாபிரிக்கா வெற்றி!

தென்னாபிரிக்க அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையே நேற்றுமுன்தினம் ஈஸ்ட் லண்டனில் நடைபெற்ற 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 62 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 47.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 182 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. அந்த அணி சார்பில் டிப்பென்னர் 47 ஓட்டங்களையும் சிமித் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பாகிஸ்தான் அணியின் சார்பில் அக்தர் 3 விக்கெட்டுக்களையும், அக்ரம், வக்கார், சக்லைன் முஸ்தாக் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இலகுவான இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி தென்னாபிரிக்க வீரர்களின் பந்து வீச்சுக்களுக்கு முகம்கொடுக்க முடியாது 36.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 120 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அந்த அணியின் சார்பில் வேகப்பந்து வீச்சாளர்கள் மட்டுமே அதிக ஓட்டங்களைப் பெற்றனர். அக்ரம் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும், வக்கார் 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.



மத்தியஸ்தரிடம் முறையிடும் சொஹைப் அக்தர். இந்தப் போட்டியில் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தென்னாபிரிக்க அணியின் சார்பில் பொலக் 3 விக்கெட்டுக்களையும், நிறினி, அலன் டொனால்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் தென்னாபிரிக்க அணி 2 - 1 என்ற விகிதத்தில் முன்னணியில் உள்ளது. (ம-10)













நேற்று முகமாலையில் இடம்பெற்ற பாதுகாப்பு உப குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. கொட்டும் மழைக்கு மத்தியிலும் தற்காலிக கூடாரத்தில் சளைக்காது பேச்சுக்கள் இடம்பெற்றன. வெளியே புலிகளின் உறுப்பினர்கள் குடைகளைத் தாங்கியவாறு தீவிர பாதுகாப்பு வழங்கி வருவதை முதலாவது படத்தில் காணலாம். நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் (மத்தி), போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொன்ட் புருஹோவ்டே (வலது), கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஆகியோர் கூட்டம் முடிந்து வெளியேறுவதை இரண்டாவது படத்திலும், புலிகளின் சமாதானச் செயலணிச் செயலர் புலித்தேவன் (வலது), பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுடன் உரையாடிக்கொண்டிருப்பதையும் அருகே அரசுதரப்புப் பிரதிநிதிகள் நிற்பதையும் மூன்றாவது படத்திலும் கடற்புலிகளின் பிரதித் தளபதி லெப்.கேணல் செழியன் மற்றும் புலிகள் தரப்புப் பிரமுகர்கள் பேச்சு மேசையில் அமர்ந்திருப்பதையும் அரசு தரப்புப் பிரதிநிதிகளையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: தேவராஜன்)

# தேவையைப் பொறுத்தே உபகுழுக்கூட்டம் கூடுகிறது

## நோர்வேத் தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.15

பாதுகாப்புத் தொடர்பான உப குழுக் கூட்டம் தேவையைப்பொறுத்தே கூட்டப்படுகிறது. அந்தத் தேவை தொடரும்போது உபகுழுக் கூட்டத்தில் அல்லது பேச்சுக்களில் அத்தேவைகள் குறித்து ஆராயப்படும் என்று நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்பேர்க் தெரிவித்தார்.

அடுத்த உபகுழுக் கூட்டத்தில் தாம் பங்குபற்றுவதில் அர்த்தமில்லை என்று புலிகளின் தரப்புத் தலைவர் கேணல் கருணா நேற்றைய கூட்டத்தில் தெரிவித்ததாக கூட்டத்தின் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும் - அவர் தெரிவித்தார்.

மாவட்ட மட்டத்தில் பல பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டன. அந்த விடயங்களில் பலவற்றில் இணக்கம் ஏற்பட்டது. சிலவற்றில் இணக்கம் ஏற்படவில்லை. அவை தொடர்பாக தொடர்ந்தும் பேசி வருகிறோம்.

முழுமையாக சகல விடயங்களிலும் இணக்கம் ஏற்படாவிட்டாலும் அந்த விடயங்களில் தீர்வு காணக்கூடிய நல்ல அடிப்படை ஏற்பட்டுள்ளது - என்றார் அவர்.

குடாநாட்டில் ஈ.பி.டி.பியினர் செயற்பாடு தொடர்பாகக் கேட்டபோது, அது தொடர்பாக ஏனைய அரசியல் கட்சிகள் புலிகளுடன் கூடி ஆராய்ந்து முடிவு செய்யலாம் என்றார். (ம-3)

### 5 வருடங்களின் பின்னர் மயானம் மக்கள் பாவனைக்கு!

யாழ்ப்பாணம், டிசெ.15

அரியாலை சித்துபாத்தி மயானம் ஐந்து வருட இடைவெளிக்குப் பின் மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படவிருக்கின்றது.

இப்பகுதியில புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதை அடுத்து அரியாலை இளைஞர்களும் சரஸ்வதி சனசமூக நிலையத்தினரும் இணைந்து இன்று அந்த மயானத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யவிருக்கின்றனர். மரச் ...ளும் நடப்படவிருக்கின்றன. (ம-3)

# முகமாலையில் நேற்று 7 மணி நேரப் பேச்சு!

யாழ்ப்பாணம்,டிசெ.15

முகமாலையில் நேற்று நடந்த பாதுகாப்புத் தொடர்பான உபகுழுக் கூட்டத்தில் குடாநாட்டில் அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக கடும் விவாதம் இடம்பெற்றுள்ளது. உணவு நேரம் உட்பட 7 மணி நேரம் பேச்சு இடம்பெற்றது.

நான்கு அமர்வுகளாக இடம்பெற்ற இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட பிரச்சினைகள் குறித்தே முக்கியமாக ஆராயப்பட்டன.

அதியுயர் பாதுகாப்பு வலயம், ஈ.பி.டி.பியின் வெளியேற்றம், நெடுந்தீவு, நெல்லியடி சம்பவங்கள் முக்கியமாக ஆராயப்பட்டன.

விடுதலைப் புலிகளின் சமாதானக் குழு உறுப்பினர் கேணல் கருணா தலைமையில் புலிகள் தரப்பு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். கேணல் ஜெயம், கேணல் தீபன், கடற்புலி லெப்.கேணல் செழியன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக், மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அமிர்தாப், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், புலிகளின் சமாதானச் செயலணிச் செயலாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையிலான அரச குழுவில் யாழ். மாவட்ட தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, அரச சமாதானக் குழு உறுப்பினர் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, வடபிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் பிரேமரத்தின ஆகியோர் பங்குபற்றினர். (ம-3-8)

## சினிமா பாணியில்
# தீவிரவாதிகள் சென்ற காரை டில்லி பொலீஸ் மடக்கியது!

புதுடில்லி,டிசெ.15

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்றுக் காலை காரில் சென்று கொண்டிருந்த பாகிஸ்தான் தீவிரவாதிகள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர்.

சினிமா பாணியில் காரை பின்தொடர்ந்து துரத்திச் சென்ற பொலீஸார் வீதியில் வைத்தே இருவரையும் கொன்றனர் என்று ஏஜென்ஸி செய்திகள் அறிவித்தன. சினிமாவில் வருவதுபோல் வேகமாக விரைந்து சென்ற காரையும் பொலீஸ் வாகனத்தையும் கண்டு நகரவாசிகள் மிரண்டனர்.

டில்லியிலுள்ள துக்ளகாபாத் கோட்டை அருகே காரில் சென்று கொண்டிருந்த தீவிரவாதிகளைச் சுமார் 30 நிமிட துப்பாக்கிச் சண்டைக்குப் பின் பொலீஸார் சுட்டுக்கொன்றனர்.

இச்சம்பவத்தில் குறைந்தபட்சம் ஒரு தீவிரவாதி தப்பி ஓடி விட்டார். இத்தகவலை டில்லி மாநகர பொலீஸ் துணைக் கமிஷனர் அசோக் சந்த் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:-

"டில்லி துக்ளகாபாத் கோட்டை அருகே தீவிரவாதிகள் காரில் சென்று கொண்டிருந்ததாக வந்த தகவலையடுத்து அவர்களைத் துரத்திப் பிடிக்க முயன்றோம். ஆனால், இரு தீவிரவாதிகள் எங்களை நோக்கி ஏ.கே.47 ரக துப்பாக்கியால் சுட்டனர். ஆனால், ஒரு தீவிரவாதி தப்பி ஓடிவிட்டான், இருவரை மட்டும் சுட்டுக்கொன்றோம்.

அவர்கள் என்ன திட்டமிட்டிருந்தார்கள் என்பது தெரியவில்லை. ஆனால், அவர்கள் காரில் சென்று கொண்டிருந்த தகவல் மட்டுமே கிடைத்தது - என்றார். (ஐ)



அப்கானிஸ்தானின் தலைநகரை குளிர் வாட்டி எடுக்கிறது. அங்குள்ள இடிந்த கட்டடம் ஒன்றில் தங்கியிருக்கும் அகதிக் குழந்தைகள் தடித்த சாக்கினாலான குளிர் தடுப்பின் உள்ளே நின்றவாறு துவாரங்கள் வழியே வெளியே எட்டிப்பார்க்கின்றனர்.

கடும் பனியில் சிக்கியுள்ள ஆப்கான் அகதிகளில் பெரும் எண்ணிக்கையானோர் அங்குள்ள வசதியீனங்களை அடுத்து பாகிஸ்தான் நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர். (ஐ)

# வீரப்பனைப் பிடிக்க ஏற்பாடுகள் தீவிரம்
# கிராமங்களில் மாலையில் நடமாடத் தடை!
## அடுத்து கர்நாடக மடாதிபதியை கடத்துவதற்கு வீரப்பன் திட்டமாம்

மேட்டூர்,டிசெ.15

கர்நாடகப் பகுதியில் உள்ள வீரப்பனின் சொந்த ஊரான கோபிநத்தம், கோட்டையூர் உள்ளிட்ட ஊர்களில் மாலை 6 மணிக்கு மேல் மக்கள் நடமாட தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இது தமிழக எல்லையை ஒட்டியுள்ள கொங்கர்பட்டி, யாமனூர் பகுதிகளிலும் அமுல்படுத்தப்படுகிறது.

காவிரியில் இரவில் மீன்பிடிக்கச் செல்லவும் பயிர்களைக் காக்க வயல்களில் இரவில் தங்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. வனப்பகுதிக்குள் விறகு, பறவைகளை சேகரிக்கச் செல்வோர் சந்தேகப்படும் விதத்தில் யாரையாவது பார்த்தால் அதிரடிப்படையினருக்குத் தகவல் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வீரப்பனின் இஷ்டதெய்வமான ஒசோடப்பன் ஆலயத்துக்கு செல்லவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.



வீரப்பன் வழிபட வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பால், இப்பகுதி தீவிரமாகக் கண்காணிக்கப்படுகிறது.

தண்டாவில் உள்ள முகாமில் கூடுதல் எண்ணிக்கையில் அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

முகாமில் அதிரடிப்படை வீரர்களைச் சந்தித்து, பொலீஸ் அதிகாரி ராஜேந்திரன் தீவிர ஆலோசனை நடத்தினார்.

கர்நாடக வனப்பகுதியில் வீரப்பன் சுற்றி வளைக்கப்பட்டதாக வெள்ளிக்கிழமை பிற்பகல் வதந்தி பரவியதையொட்டி பரபரப்பு ஏற்பட்டது.

கத்திரி மலைப் பகுதியில் சடலம் கிடப்பதாக தகவல் வெளியானது. ஆனால் இதுவும் வதந்தி எனத் தெரியவந்தது.

நாகப்பாவை மீட்பதற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா ஒத்துழைப்புத் தரவில்லை என்று கர்நாடக காங்கிரஸ் தலைவர் அல்லம் வீரபத்ரப்பா கூறினார்.

செய்தியாளர்களுக்கு அவர் வெள்ளிக்கிழமை அளித்த பேட்டியில் இதைத் தெரிவித்துள்ளார்.

என்னைக் கடத்துவதற்கு சந்தனக்கடத்தல் வீரப்பன் சதி செய்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என்று சுத்தூர் மடாதிபதி சிவராத்திரி தேசிகேந்திர ஸ்சுவாமிகள் கூறினார். மைசூரில் செய்தியாளர்களுக்கு வெள்ளிக்கிழமை அளித்த பேட்டியில் அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

நாகப்பா மறைவு துரதிர்ஷ்டவசமானது; அவரை வீரப்பன் கொன்றிருக்க மாட்டார் என்று கொளத்தூர் மணி கூறியிருக்கிறார்.

மைசூர் நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கு விசாரணைக்காக வெள்ளிக்கிழமை மணி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். விசாரணையை டிசெம்பர் 27ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

நீதிமன்றத்திலிருந்து அழைத்து வரப்பட்ட மணியிடம் நாகப்பா மரணம் குறித்து கேட்டபோது அவர் இதைத் தெரிவித்தார்: நாகப்பா கொலையில் எனக்குத் தொடர்பு இருப்பதாக வரும் வதந்திகளில் உண்மையில்லை. சிறையிலுள்ள எனக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? என்றார் மணி. (ஐ)

## தற்கொலைப்படை உறுப்பினருக்கு பயிற்சி

பெஷாவர்,டிசெ.15

பாகிஸ்தான் வடமேற்கு பகுதியில் உள்ள பலூகிஸ்தான் மாகாணத்தில் தற்கொலைப்படை உறுப்பினர்களுக்கு 'அல்கொய்டா' அமைப்பு பயிற்சி வழங்கி வருவதாக இந்தியப் பத்திரிகைகள் தெரிவித்திருக்கின்றன.

பாஜோர், மல்ஷேரா ஆகிய நகரங்களில் பின்லேடனின் 'அல்கெய்டா' அமைப்பினால் நடத்தப்பட்டு வரும் பயிற்சி முகாம்களில் தற்கொலைப் படையினருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

தற்கொலைப்படையைச் சேர்ந்தவர்கள் இறந்தால் அவர்களது குடும்பத்தினருக்கு 25 லட்சம் ரூபா (இந்தியப் பணப் பெறுமதி) வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருக்கிறது.

இவர்கள் ஆப்கானிஸ்தானில் தாக்குதல் நடத்தவே பயிற்றுவிக்கப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது. (ஐ)



ஸ்டாக்ஹோமில் இந்த ஆண்டு நோபல் பரிசு பெற்றவர்கள் இடமிருந்து (அமர்ந்திருப்பவர்கள்) சிட்னி பிரென்னர், கொய்சி டனாகா, ஜிம்மி கார்ட்டர், ரிகார்டோ கியாகோனி, வெர்னான் ஸ்மித், (நிற்பவர்கள்) ஜான் சுல்ஸ்டன், டேனியல் கானேமேன், குர்ட் வைதிரிச், ரேமாண்ட டேவிஸ் ஜூனியர், மசாடோஷி கோஷிபா, ராபர்ட் ஹோர்விட்ஸ், இம்ரே கெர்ட், ஜான் பென் என்ற அறிஞர் மட்டும் அங்கு வரவில்லை. (ஐ)

## கர்நாடக சட்டமன்ற உறுப்பினர் தகவல்:
# ஐயப்பன் பக்தர்கள் வேடத்தில் அதிரடிப்படை நுழைந்தது!
## ஆனால் நாகப்பாவை மீட்கமுடியவில்லை

பெங்களூர்,டிசெ.15

வீரப்பன் பதுங்கி இருக்கும் இடத்தை அறிந்துகொண்ட அதிரடிப்படையினர் ஐயப்பன் பக்தர்கள் போன்று வேடமிட்டு காட்டுக்குள் நுழைந்துள்ளனர். நாகப்பாவை மீட்டு வருவதே அவர்களது திட்டமாக இருந்தது. ஆனால், துப்பாக்கிச் சண்டையில் நாகப்பா கொல்லப்பட்டுவிட்டார்.

கர்நாடக சட்டப் பேரவையின் ஜனதாதளம் கட்சித் தலைவர் பி.ஜி.ஆர். சிந்தியா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

நடந்திருக்கும் சம்பவங்களைப் பார்க்கும்போது நாகப்பாவை வீரப்பன் கொன்றிருக்க வாய்ப்பில்லை; வீரப்பனுக்கும், அதிரடிப்படைக்கும் இடையே நடந்த சண்டையில் நாகப்பா கொலை செய்யப்பட்டிருக்கலாம்.

நாகப்பாவை மீட்கும் நோக்கத்தோடு நடந்த சண்டையில் நாகப்பா மீது குண்டு பாய்ந்து அவர் இறந்திருக்கலாம். அங்கு கைப்பற்றிப்பட்டிருக்கும் தடயங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன.

அது தமிழக அல்லது கர்நாடக அதிரடிப்படையாகவோ அல்லது இரு மாநிலப் படைகளும் கூட்டாக மேற்கொண்ட நடவடிக்கையாகவோ இருக்கலாம். முதல்வர் கிருஷ்ணாவுக்குத் தெரிந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்; தகவல் தெரிவிக்காமல் நடக்கவும் வாய்ப்புள்ளது.

எனக்குக் கிடைத்த தகவல்படி, வீரப்பன் பதுங்கி இருக்கும் இடத்தை அறிந்து அதிரடிப்படை பொலீஸார் ஐயப்ப பக்தர்கள் போல வேடம் போட்டுக் கொண்டு சென்று காட்டிற்குள் புகுந்துள்ளனர்.

வீரப்பனைக் கொன்று நாகப்பாவை மீட்டு வரவேண்டும் என்பது அவர்களது நோக்கமாக இருந்திருக்கும். ஆனால், அவர்களது திட்டம் தவறாகி விட்டது. துப்பாக்கிச் சண்டையில் நாகப்பா கொல்லப்பட்டுவிட்டார்.

இச்சம்பவத்தில் பல்வேறு சந்தேகங்கள் உள்ளன. எனவே, சி.ஐ.பி. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.

நாகப்பா பிரச்சினையில் கர்நாடக, தமிழக மத்திய அரசுகள் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதாக அவரது குடும்பத்தினர் கருதுகின்றார்கள். உண்மை வெளிவர வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள் - என்றார் சிந்தியா. (ஐ)

## யுத்தநிறுத்தம் முறியும் ஆபத்து
# பிரெஞ்சு படைகளுடன் மோத ஐவரி தீவிரவாதிகள் ஆயத்தம்!

அபிஜான்,டிசெ.15

அமைதிகாப்போம் என்று கூறிக்கொண்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இறங்கியிருக்கும் பிரெஞ்சுப் படைகளுடன் மோதுவதற்கு தாங்கள தயார் என்று ஐவரிக்கோஸ்ட் நாட்டின் பிரதான கெரில்லா இயக்கம் தெரிவித்திருக்கிறது.

ஐவரிகோஸ்ட் நாட்டில் இடம் பெற்றுவந்த மோசமான உள்நாட்டுச் சண்டைகளின் பின்னர் தற்போது அங்கு அரசுக்கும் தீவிரவாதக் குழுக்களுக்கும் இடையே யுத்தநிறுத்தம் பேணப்படுகிறது. அமைதிகாக்கும் படை என்ற பெயரில் பிரெஞ்சுத் துருப்புகள் அங்கு நிறுத்தப்பட்டுள்ளன.

தற்போது பிரான்ஸ் அங்கு தனது துருப்புகளின் எண்ணிகையை அதிகரிப்பதிலும், பல பிரதேசங்களில் தனது துருப்புகளை நிறுத்தும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதிலும் ஈடுபடுவதாக பிரதான தீவிரவாத இயககமான எம்.பி.சி.ஐ. (Patriotic Movement of Ivory Coast) குற்றஞ்சாட்டியிருக்கிறது.

பிரெஞ்சுப் படைகளின் இந்த நடவடிக்கை நிறுத்தப்படாவிட்டால் தாங்கள் அவர்களோடு சண்டையை ஆரம்பிக்கத் தயாராக இருப்பதாக எம்.பி. சி.ஐ.இன் தலைவரும் சமாதான முயற்சியாளருமான குலாமி சோரா எச்சரித்திருக்கிறார்.

முன்னாள் பிரெஞ்சு காலனி நாடான ஐவரிகோஸ்ட்டில் தற்போது ஆயிரத்து 200 பிரெஞ்சுத் துருப்புகள நிலைகொண்டுள்ளன. மேலும் ஒரு தொகுதி படையினர் நேற்று விமானம் மூலம் அங்கு இறக்கப்பட்டனர். (ஐ)

# 'ஜோர்ஜ் வாஷிங்டன்' திருப்பி அழைக்கப்பட்டது!

வாஷிங்ரன்,டிசெ.15

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் வாய்ப்பு அருகிவருவதை அடுத்து மத்திய தரைக் கடற்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்க யுத்தக் கப்பலான ஜோர்ஜ் வாஷிங்டன் அங்கிருந்து திரும்பியது.

ஈராக் மீது தாக்குதல் நடத்தும் வாய்ப்பு தற்போதைக்கு இருக்காது என்பதால் விமானம் தாங்கி கப்பலான ஜோர்ஜ் வாஷிங்டனை அமெரிக்காவின் நோர்த் போல் துறைமுகத்துக்கு திரும்புமாறு உத்தரவிடப்பட்டது. கடந்த ஆறு மாதகாலமாக மத்தியதரைக் கடல் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தது. (ஐ)

# உளங் கனிந்த நன்றிகள்

நெல்லியடியில் நடைபெற்ற அசம்பாவிதங்களின் போது பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்காகவும் அப்பாவிப் பொது மக்களுக்காகவும் குரல்கொடுத்த சகல அமைப்புக்களுக்கும், பொது மக்களுக்கும், வணிகர் கழகங்களுக்கும், தக்க தருணத்தில் சமுகமளித்து, நெல்லியடி வர்த்தகர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வுகாண உதவிய இந்து கலாசார அமைச்சர் கௌரவ தி.மகேஸ்வரன் அவர்களுக்கும் எமது உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-25417) **நெல்லியடி வாணிபர் கழகம்.**


## குடியிருப்புக்களில் வெள்ளம்

கொழும்புத்துறை,டிசெ.15

கொட்டடி, சோலையூரம் பகுதியில் உள்ள குடியிருப்புக்கள் தற்போதைய மழையினால் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்குடியேற்றப்பகுதி மிகவும் தாழ்ந்த நிலமாக இருப்பதும் வெள்ளம் ஓடக்கூடிய வடிகால்கள் இல்லாமல் இருப்பதாலேயே நீர் தேங்கிநிற்பதற்கு காரணம். (ஐ-30)


# விசேட அவசர கலந்துரையாடல்

இடம் :- உதயன் கேட்போர்கூடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

காலம் :- இன்று (15.12.2002) ஞாயிறு பி.ப. 2மணி

முக்கியமான விடயங்கள் ஆராயப்படவிருப்பதால் எல்லா இன்ரறக்ட் - றோட்டறக்ட் கழக அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

றோட்டறிக் கழகம்,
யாழ்ப்பாணம்.

(C-25414)


## புராண நூல் வெளியீடு

கவிஞர் சி.பொன்னம்பலம் எழுதிய 'ஆண்டிகேணி ஐயனின் அற்புத வரலாறும் ஆண்டி முனிவர் புராணமும்' எனும் நூல் வெளியீடும் கௌரவிப்பும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.45 மணியளவில் ஈழத்துச் சிதம்பர வசந்தமண்டபத்தில் நடைபெறவுள்ளன.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசியுரையை ஈழத்துச் சிதம்பர பிரதம குரு சிவஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்கள் வழங்குவார்.

நூல் வெளியீட்டுரையை யாழ்பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி, ப. கோபாலகிருஷ்ண ஐயரும், நூல் ஆய்வுரையை 'செஞ்சொற்செல்வர்' ஆறு.திருமுருகனும் நிகழ்த்துவர். (ஐ-73)

## ஒளிவிழாவும் பரிசளிப்பும்

ஆனைக்கோட்டை, உயரப்புலம் ஐக்கிய சனசமூக நிலையத்தினால் வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் ஒளிவிழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அடைக்கலநாயகி கலையரங்கில் நடைபெறும். புனித அடைக்கல நாயகி ஆலய பங்குத்தந்தை ஆர்.எக்ஸ்.நேசராஜா அடிகளார் இந்நிகழ்வுக்கு தலைமை வகிப்பார். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கும் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கும் இந்நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படும். (எ)


# General Information Technology - GIT

Drive Your IT on GIT

Syllabus Covers "London A/L" Computing

O/L முடித்த A/L மாணவர்களுக்கான கணனி வகுப்புகள்

No Scholarships!
But Less Charges!!
Gain International Standard!!!

- GIT
- MS Office
- Internet
- கணனியூடான A/L என்பவற்றை உள்ளடக்கியது

ஆரம்பம் 18-12-2002

பதிவுகளுக்கு STP Computer World (Pvt.) Limited.
54A, Palaly Road, Kantharmadam, Jaffna

Branch
Sankaththanai, Chavakachcheri



# தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சைனீஸ் உணவு விடுதி ஒன்றை அமைப்பதற்குரிய வீடு அல்லது அதற்கு அமைவான கட்டடங்கள் நீர் மற்றும் சுகாதார வசதிகளுடன் தேவை.

முகவரி :
விளம்பர இல. 1722
உதயன்,
யாழ்ப்பாணம்.

(11805)



# உறவுகளைப் பலப்படுத்துவோம்!






★ நத்தார் ★ புதுவருடம் ★ தைப்பொங்கல்
பண்டிகைகளை முன்னிட்டு
எமது கையடக்கத் தொலைபேசியின்

## மொத்த விலைக் குறைப்பு

எமது வாடிக்கையாளர்களுக்கு
நாளை (16.12.2002) திங்கட்கிழமை முதல்
ஒருமாத காலத்துக்கு இந்தச் சலுகை வழங்கப்படும்.
(KIT இலவசமாக வழங்கப்படமாட்டாது)

SAGEM MC 3000

| | புதிய விலை | பழைய விலை |
|---|---|---|
| ALCATEL | 10,950/= | 12, 950/= |
| SAGEM | 9,450/= | 12,950 /= |

★ அரச/அரசசார்பற்ற நிறுவனங்கள் (5) ஐந்துக்கு மேற்பட்ட தொலைபேசிகளை வாங்கினால் மேலதிக விலைச் சலுகைகள் வழங்கப்படும்.

★ தனியாகவும் இணைப்புக்கள்(SIMCARD) வழங்கப்படும்.



இது உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

கவர்ச்சிகரமான சலுகைகள்:
1) இரண்டு வருட உத்தரவாதம்
2) உள்வரும் அழைப்புகள் அனைத்துக்கும் 1 நிமிடம் இலவசம்
3) குறுந் தகவல் சேவை(S.M.S.)
4) சர்வதேச அழைப்புகள்(IDD)
5) உள்வரும் அழைப்புகளின் இலக்கங்களை அறியும் C.L.I. வசதிகள் என்பன.

தொடர்பு கொள்ளுங்கள்

DIAL LINKS

THE PHONE SHOP

204, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி இல. : 0777 736469
222 5485

(C/25415)

☞ சாவகச்சேரி, புலோலி, சங்கானை, காரைநகர் ஆகிய இடங்களில் புதிய கோபுரங்கள் அமைக்கப்பட்டு மிக விரைவில் குடாநாடு முழுவதும் அலைவரிசை விஸ்தரிக்கப்படும்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர்திரு. வ.சந்திரசேகரம்**
(கிராமசேவை உத்தியோகத்தர்,
கந்தர்மடம்)

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

*ஊரெழு கிழக்கு,*
*ஊரெழு.*

(11802)

இ.மன்மதராசன்
இ.ராதா



# விற்பனைப் பிரதிநிதி தேவை

யாழ். மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் கடமையாற்றக்கூடிய விற்பனைப் பிரதிநிதி தேவை. பிரபல நிறுவனங்களில் கடமையாற்றி முன்அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும். தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் எழுத, வாசிக்க, பேசக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். தகுதியானவர்கள் உரிய ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

*முகவரி :* **A.M.T. Transport Service,**
**Point Pedro Road,**
**Irupalai Junction, Kopay.**

(11804)


# மரண அறிவித்தல்

## சின்னக்குட்டி துரைசிங்கம்

(சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ. சங்கம்)

மயிலணி வடக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னக்குட்டி துரைசிங்கம் அவர்கள் நேற்று (14.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னக்குட்டி - லட்சுமி தம்பதியரின் அன்புமகனும் பாஸ்கரவதி அவர்களின் அன்புக்கணவரும் ஆறுமுகம், ஜயாத்துரை, மாணிக்கம், பசுபதி ஆகியோரின் அருமைச்சகோதரரும் சுபாஜினி, சுகிர்தா, கவிதா, பவானி(ஜேர்மனி), சரிதா ஆகியோரின் அன்புத்தந்தையாரும் சுதன், ரகு(ஜேர்மனி), சிவா ஆகியோரின் அன்பு மாமனாரும் பூஜாவின் அருமைப் பேரனாரும் சவுந்தரராஜன்(சுவிஸ்), கருணைராஜா(பிரான்ஸ்), விஜயராஜா (சுவிஸ்), செல்வராஜா(ஜேர்மனி), தயாகரன்(சுவிஸ்), பிரதாபன்(சிற்றி பெயின்ற் ஹவுஸ், சுன்னாகம்), கிருசா(சுவிஸ்) ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.12.2002) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிரதாபன்(மைத்துனர்)
(சிற்றி பெயின்ற் ஹவுஸ், சுன்னாகம்)

*மயிலணி வடக்கு,*
*சுன்னாகம்.*

(11803)

உதயன்

## அமைதி முயற்சிகளை குழப்பும் திட்டம்....!

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்துக்கு அமைதித் தீர்வுகாணும் நல்லதொரு முயற்சி நடந்துகொண்டிருக்கின்றது. சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இந்தவேளையில் தனது சுயரூபத்தை - சுயபுத்தியை - வெளிக்காட்டத் தொடங்கியிருக்கின்றது பிரதான எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு புலிகளுடன் சமரசம் பேசி, சமாதான முயற்சிகளை முன்னெடுத்து, அமைதித் தீர்வைக் கண்டுவிட்டால் அந்த முன்னணியின் அரசியல் எதிர்காலம் ஸ்திரமாகிவிடும்; தமது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என்ற அச்சம் பொ.ஐ.முன்னணிக்கு.

1994இல் சமாதானத்துக்கான மக்கள் ஆணையைப் பெற்று ஆட்சிபீடமேறியது பொ.ஐ.முன்னணி. ஆனால், அதன் தலைவியின் 'சமாதானத்துக்கான போர்' என்ற குளறுபடிக்கொள்கையால் ஆட்சியையும் கோட்டைவிட்டு சமாதானம் - அமைதியையும் இழந்து நடுவீதிக்கு வந்தது அந்தக் கட்சி.

இப்போது ஐ.தே.முன்னணி தற்போதைய அமைதி முயற்சிகள் மூலம் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்திவிட்டால் தனது அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என்ற பயத்தில் அமைதி நடவடிக்கைகளைக் குலைத்து, குறுகிய அரசியல் லாபங்களுக்காக நாட்டைக் குட்டிச் சுவராக்க முயற்சிக்கின்றது பொ.ஐ.முன்னணி.

"அன்றாடப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசாதீர்கள். அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றியும் பேசுங்கள். அரசியல் தீர்வுக்கான திட்டவட்டமான பேச்சுக்களை ஆரம்பியுங்கள். ஒத்துழைப்புத் தருகின்றோம்" என்று பொ.ஐ.முன்னணி முன்னர் கூறிவந்தது.

'அரசியல் பிரச்சினை குறித்துப் பேசுவதற்குப் புலிகளுக்குப் பயம். அதை அவர்கள் பேச முன்வரமாட்டார்கள்' - என்ற எண்ணம் பொ.ஐ.முன்னணிக்கு.

ஆனால், அதன் எதிர்பார்ப்பை எல்லாம் முறியடித்து ஒஸ்லோ பேச்சுக்களில் அரசியல் தீர்வு குறித்தும் புலிகள் பேசினர். திட்டவட்டமாக முன்னேற்றம் காணப்பட்டது. அரசியல் தீர்வுக்கான அடிப்படைக் கட்டமைப்பு என்னவென்பதில் உறுதியான முடிவு எடுக்கப்பட்டது. அது பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது.

எதிர்பாராத இந்தத் திடீர் திருப்பம் பொ.ஐ.முன்னணியை அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டது. புலிகள் இவ்வளவு தூரம் நம்பிக்கையுடனும் இதயசுத்தியுடனும் பேச்சுக்களில் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்காத பொ.ஐ.மு. தலைவர்களுக்கு அந்த அதிர்ச்சியில் இருந்து மீள சுமார் ஒருவாரம் பிடித்தது.

இவ்வளவு தூரம் முன்னேறியுள்ள சமாதான முயற்சிகளை முளையோடு கிள்ளி எறிவதற்கு தற்போதைய அதிர்ச்சியில் இருந்து மீண்டு, புதிய ஆயுதத்தோடு வந்திருக்கின்றார்கள் அவர்கள்.

"புலிகள் ஆயுதங்களைக் கைவிடும்வரை சமாதான முயற்சிகளுக்கு ஆதரவில்லை" - என்ற புதிய கோசம் தான் அது.

வழமைபோல, அமைதி முயற்சிகளை குழப்புவதற்கான தமது புதிய கொள்ளைப் பிரகடனத்தை தமிழர்களின் 'கோடரிக் காம்பான' கதிர்காமர் மூலமே பொ.ஐ.முன்னணி வெளியே கக்கியிருக்கிறது.

இலங்கைத் தமிழர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகாலமாகத் தமது உரிமைகளுக்காகப் போராடி வருகின்றார்கள் - முதல் இருபத்தியைந்து ஆண்டுகள் அஹிம்சை வழியில். கடைசி இருபத்தியைந்து ஆண்டுகள் ஆயுதங்களும் ஏந்தி.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஈழத்து காந்தி தந்தை செல்வா சமஷ்டி ஆட்சியைத்தான் கேட்டார்; தரமறுத்தார்கள்.

திம்புவில் தொடங்கி, டில்லி, கொழும்பு, யாழ்ப்பாணம் என்று நடைபெற்ற சமாதான பேச்சுக்களில் எல்லாம் சுயநிர்ணய உரிமைக்காகத் தமிழர்கள் குரல் எழுப்பினார்கள்; அதையும் நிராகரித்தார்கள்.

இப்போது தாய்லாந்து, நோர்வே பேச்சுக்களில் சுயநிர்ணய உரிமை, தாயகக்கோட்பாடு, சமஷ்டி எல்லாவற்றுக்கும் கொள்கையளவிலாவது இணங்கியிருக்கின்றார்கள். இதற்குக் காரணம் என்ன?

ஆயுதபலம், படைப்பலம் என்ற சக்திகளோடு தமிழர் தரப்பு பேச்சுக்குப் போனதுதான் சிங்களத் தரப்பு இறங்கி வரவும் தமிழர்களின் உரிமைகளை அங்கீகரிப்பதற்கு இணங்கவும் காரணம்.

அந்தப் பலங்களைத் துறந்துவிட்டு, ஆயுதங்களைக் களைவதற்கு புலிகள் இணங்கினால்தான் தீர்வுபற்றிய பேச்சுக்கு ஒத்துழைப்புத் தரமுன்வருவோம் என்று இப்போது 'புதுக்கதை' விடுகிறது பொ.ஐ.முன்னணி.

இது தமிழர்தரப்பின் தலையில் மிளகாய் அரைக்கும் வேலையேயன்றி வேறில்லை.

தங்களது உரிமைகளை வழங்குகின்ற - அபிலாஷைகளை நிறைவு செய்கின்ற - சமாதானத்தீர்வு கிட்டும்வரை தமிழர்தரப்பு, தனது பலமாக அமைந்திருக்கும் ஆயுதங்களைக் கைவிடாது என்பது சிங்களவர் தரப்புக்கு நன்கு தெரியும்.

தீர்வு எட்டமுன்னர் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்று கோருவது நியாயமற்றது; பொருத்தமற்றது; யதார்த்தத்தில் சாத்தியமற்றது - என்பதெல்லாம் உலகுக்கே நன்கு தெரிந்த விடயங்கள்.

தெரிந்தும் - புரிந்தும் - அதை வலியுறுத்துவது சமாதான முயற்சிகளைக் குழப்பவேயன்றி வேறெதற்குமல்ல.

# கைதாகும் சிறுவர்கள் விடயத்தில் சிறுவர் அமைப்புக்கள் பாராமுகம்!

யாழ்ப்பாணம்,டிசெ.15

குடாநாட்டில் சிறுவர்கள் துன்புறுத்தப்படுதல் மற்றும் கொடுரமான முறைகளில் தண்டனைக்கு உட்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றுக்கு எதிராகக் குரல் கொடுப்பதில் இங்கு இயங்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த சிறுவர் உரிமைபேணும் அமைப்புக்கள் பின்னிற்கின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

'சிறுவர்களின் நலன்களில் அக்கறை காட்டுங்கள்', 'அவர்களுக்கான உரிமைகளை வழங்குங்கள்', 'சிறுவர்களை சுயமாகச் சிந்திக்க வழிவிடுங்கள்' எனப் பல்வேறு வகையிலும் விளம்பரம் செய்தும், அறிக்கைகளை வெளியிட்டும்வரும் நிறுவனங்கள் பலவும் சிறுவர்கள் கொடூரமான வழிகளில் துன்புறுத்தப்படும் சந்தர்ப்பங்களில் மௌனமாய் இருப்பது தமக்கு வேதனையைத் தருவதாக சம்பந்தப்பட்ட சிறுவர்களின் பெற்றோர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்படும் சிறுவர்கள் விடயத்திலும் சிறுவர் உரிமைபேணும் அமைப்புக்கள் தலையிடுவதில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அண்மையில் நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து பாடசாலை மாணவனான சற்குணலிங்கம் ஜனார்த்தனன் என்ற சிறுவன் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு, காயமடைந்த நிலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டான்.

சிறுவர் உரிமைபேணும் சட்ட விதிகளுக்கு முரணாக குற்றக் கைதிகளுடன் அச்சிறுவனையும் ஒன்றாக விளக்கமறியலில் வைக்கப்பட்டபோதும் - அச்சிறுவன் பின்னர் கை, கால்கள் விலங்கிடப்பட்ட நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போதும் -

சிறுவர் உரிமைபேணும் நிறுவனங்கள் எந்தவகையிலும் அதற்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்த முயலவில்லை என்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சிலர் சுட்டிக்காட்டினர்.

சிறுவர்கள் குற்றச் செயல்களில் சம்பந்தப்படுவதும், தடுத்து வைக்கப்படுவதும் சித்திரவதை செய்யப்படுவதும் அதிகரித்திருப்பதால் சிறுவர் உரிமைபேணும் அமைப்புகள் நேரடியாகத் தலையிட்டு அவர்களின் நலன்களைக் கவனிப்பதுடன் அவர்களது பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும்.

- இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். (ஐ-எ-86)

## கிளிநொச்சியில் அமையவிருக்கும்
# தொழில்நுட்பக் கல்லூரிக்கு 52 கோடி ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,டிசெ.15

கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சொந்தக் கட்டடம் அமைப்பதற்கு 52 கோடியே 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகப் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர் என்.யோகராஜன் தெரிவித்தார்.

புதிய கட்டடம் ஏ-9 வீதியில் - கிளிநொச்சி 153ஆம் கட்டைப் பகுதியில் - அமைக்கப்படவுள்ளது. இதற்கென 15 ஏக்கர் காணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் மின்சாரவசதி, தொலைபேசி வசதி போன்றவற்றுடன் புதிய கட்டடத்தை அமைக்குமாறு மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் ஹபீர் ஹாசிம் உத்தரவிட்டிருக்கிறார்.

கட்டடப் பணிகள் அடுத்த ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டுவிடும் என்றும் -

2005ஆம் ஆண்டுக்குள் பூர்த்தியடையும் வகையில் வேலைகள் முன்னெடுக்கப்படும் என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

# கொழும்பு லயன்ஸ் கழகம் ஊன்றுகோல்களை வழங்கும்

கொழும்பு,டிசெ.15

ஒருதொகை ஊன்றுகோல்களையும் கைத்தடிகளையும் யாழ்ப்பாணத்தில் இலவசமாக வழங்க 'இன்னர் கொழும்பு லயன்ஸ் கழகம்' நடவடிக்கை எடுத்துவருகிறது.

ஏற்கனவே பாவிக்கப்பட்ட இந்த ஊன்றுகோல்களையும் கைத்தடிகளையும் 'இன்னர் கொழும்பு லயன்ஸ் கழகம்' வெளிநாடுகளில் இருந்து அன்பளிப்பாகப் பெற்றிருந்தது.

இவை தேவையானோர், இவற்றை வாங்குவதற்கு வசதியற்றோர் ஆகியோருக்கே இவற்றை லயன்ஸ் கழகம் வழங்கும்.

விண்ணப்பதாரர்கள் பெயர், விலாசம், வயது, உயரம் தேவைக்கான காரணத்துடன் லயன்ஸ் கழக உறுப்பினர் அல்லது சமாதான நீதிவான் அல்லது குருவானவர் அல்லது அரச அதிகாரி ஆகியோரின் சிபாரிசுக் கடிதம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரர்களுக்கான ஊன்றுகோல் மற்றும் கைத்தடி ஆகியவற்றை 'இன்னர் கொழும்பு லயன்ஸ் கழகம்' ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளது. விண்ணப்பிக்கவேண்டிய விலாசம் வருமாறு:-

The President, Lions Club of Inner Colombo, 19-3/2, Station Road, Colombo-06. (ஐ)

## கசிப்பு வைத்திருந்த வழக்கில்
# தண்டப்பணம் செலுத்த மறுத்தவருக்கு சிறைத்தண்டனை

யாழ்ப்பாணம்,டிசெ.15

நீதிமன்றினால் தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்ட நபர் ஒருவர் அதனைச் செலுத்த மறுத்தமையினால் அவருக்கு யாழ்.நீதிமன்றத்தினால் 6 மாத கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்து 500 மில்லி. லீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கல்வியங்காடு, செங்குந்த பாடசாலை வீதியைச் சேர்ந்த கணேசு பாலசிங்கம் என்பவரை 3 ஆயிரம் ரூபா தண்டப்பணமாகச் செலுத்துமாறு யாழ்.நீதிமன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், குறிப்பிட்ட நபர் பணத்தைச் செலுத்த மறுத்ததை அடுத்து யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ச.இளங்கோவன், அவருக்கு 6 மாத கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார். (எ-10)

### நாளை

மார்கழி 01
திங்கட்கிழமை
(16.12.2002)
திதி : துவாதசி
முன்னிரவு 9.16வரை.
நட்சத்திரம்: பரணி
பின்னிரவு 1.41வரை.
சுபநேரம் : 12.22 - 1.52
ராகுகாலம் : 7.52 - 9.22
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

காலையில் சிரிக்காதவன் நண்பகலிலும் சிரிக்க மாட்டான். அதிகம் சிரிப்பவனின் இதயம் இருள் அடையும்.

# புனர்வாழ்வுப் பணிகளில் இருபாலை புறக்கணிப்பு

## இடம்பெயர்ந்தோர் அதிருப்தி

நல்லூர்,டிசெ.15

புனர்வாழ்வுப் பணி நடவடிக்கைகளில் தமது பிரதேசம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக இருபாலை தெற்கு, இருபாலை கிழக்கு கிராமசேவகர் பிரிவு மக்களும் கோப்பாய் தெற்கு கிராம சேவகர் பிரிவில் ஒருபகுதி மக்களும் தெரிவித்துள்ளனர்.

2000ஆம் ஆண்டு மே மாதம் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து கணிசமான காலப்பகுதியில் நண்பர்கள், உறவினர் வீடுகளிலும் பொதுக் கட்டடங்களிலும் தங்கியிருந்துவிட்டு மீளக்குடியமர்ந்த இம்மக்கள் தமக்குப் போதுமான இழப்பீடுகளோ புனர்வாழ்வு உதவிகளோ வழங்கப்படவில்லை என்று அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இதே காலப்பகுதியில் இடம்பெயர்ந்த தென்மராட்சி பகுதி மக்களுக்கு கொடுப்பனவுகள் வழங்குவதற்குரிய சகல நடவடிக்கைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ள நிலையில் தமக்கும் இவ்வாறான கொடுப்பனவுகள் வழங்க உரியநடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ளவேண்டும் என்று தெரிவித்துள்ளனர். (ஐ-ரி)

# காரைநகர் இறங்குதுறையில் சைக்கிள் ஒன்று திருட்டு

ஊர்காவற்றுறை,டிசெ.15

காரைநகர் இறங்குதுறையில் உள்ள பயணிகள் தங்குமிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று அண்மையில் திருடப்பட்டுள்ளது.

பயணிகள் தங்குமிடத்தில் ஒரு பகுதியில் கடற்படையினர் இருந்தும், திருடர்கள் துணிகரமாக சைக்கிளைத் திருடிச் சென்றுள்ளனர் எனக் கூறப்பட்டது.

காரைநகரில் இருந்து ஊர்காவற்றுறைக்கு வந்து செல்லும் வர்த்தகர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோர் மேற்படி தங்குமிடத்தில் தமது சைக்கிள்களை நிறுத்தி வைத்துவிட்டுச் செல்வது வழமையாகும். (எ-16)

# எழுவைதீவு பகுதிக்கு மின் இணைப்பு வழங்குக!

## எரிபொருள்துறை அமைச்சரிடம் கோரிக்கை

ஊர்காவற்றுறை,டிசெ.15

நீண்டகாலமாக மின்சார வசதியின்றி இருளில் மூழ்கியுள்ள எழுவைதீவு பிரதேசத்துக்கு மின்சார வசதிசெய்து தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

எழுவைதீவு பத்திமா சனசமூக நிலையத்தினர் இது குறித்து கடிதம் ஒன்றை மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் கருஜெயசூரியவுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுமார் 180 குடும்பங்களை சேர்ந்த 690 பேர் வசிக்கும் இத்தீவிற்கு, கடந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலின்போது மின் இணைப்பு வழங்குவதாகக் கூறி இலங்கை மின்சாரசபையினால் மின் கம்பங்கள் நடுகை செய்யப்பட்டன.

அதன்பின்னர் ஒருவருடமாகியும் இதுவரை எதுவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-16)

# சின்னமடு பகுதி வீடுகளுள் வெள்ளம் புகும் அபாயம்!

ஊர்காவற்றுறை,டிசெ.15

தற்பொழுது தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழைகாரணமாக, ஊர்காவற்றுறை சின்னமடு கிராமத்திலுள்ள பல வீடுகளுக்குள் வெள்ள நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இதுவரை சுமார் 45 குடும்பங்கள் வரை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனவென இப்பகுதியைச் சேர்ந்த பொது அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இப்பகுதியில் தேங்கும் வெள்ளநீர் வழிந்தோட முடியாதவாறு தேங்கி நிற்பதால் இப்பகுதியெங்கும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றது என்றும் -

வருடாவருடம் மழை காலங்களில் தாங்கள் இத்தகைய நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் -

இப்பகுதியில் இருந்து வெள்ளநீர் வழிந்தோடுவதற்கு ஏற்ற வசதிகளை சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை செய்துதரவில்லை என்றும் -

இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ. 16)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

56... தொடரிலக்கமுடைய LITE ACE 2C TOYATA எஞ்சின் பொருத்துப் பட்ட AC வளமுள்ள வான் மற்றும் 94 ஸ்ரீயைக் கொண்ட CD 125 TWINமோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: நல்ல சமாரியன் காரியாலயம், கோண்டாவில் கிழக்கு. T.P.No.: 021-222 2488, 021-222 3820 (11660)

இரண்டு மாதம் வளர்ச்சியடைந்த சிவப்புப் பேட்டுக் கோழிக்குஞ்சுகள் (100நாள்களில் முட்டையிடக்கூடியவை) விறபனைக்குண்டு. தொடர்பு: மான்ஸ பாடசாலை வீதி, உடுவில். (11701)

நல்ல நிலையிலுள்ள 15 குதிரை வலு (H.P.) கொண்ட மீன்பிடி வள்ளத்துக்கான யமகா (Yamaha) வெளி இணைப்பு இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: சின்னமச்சான் தர்மன், 79, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (11711)

வீட்டுப்பாவனையிலுள்ள Sisil, Singer குளிர்சாதனப்பெட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 'நில்கந்தா', யாழ்.வீதி, மானிப்பாய் (நாயகபாலன் ஸ்ரோர்ஸ்'க்கு முன்பாக). (11710)

20x22 Sony T.V. Black &White T.V., Sisil Refrigerator, Vespa Scooter P 150X விற்பனைக்குண்டு. தொடர்பு: 32, அரசடி வீதி, யாழ்ப்பாணம். T.P 2293. (11728)

வீட்டுத்தளபாடங்கள் - நல்ல நிலையிலுள்ள கோல் செற்றி, சாப்பாட்டுமேசை, அலுமாரி, கட்டில்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: மைக்கேல், 160, பழையபூங்கா வீதி, சுண்டுக்குளி. (11760)

Broiler மற்றும். இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை) தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11714)

நல்ல நிலையிலுள்ள வீட்டுத் தளபாடங்கள், நீர் இறைக்கும் இயந்திரம் (வுஸ்லி), வாட்டப்பம்பில் செய்த ஜெனரேற்றர் மற்றும் எலெற்றிக் பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.275, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (11776)

மிகவும் நல்ல நிலையிலுள்ள Deef Freezer 4'x2" (singer), Sony T.V. 2192 (Made in Japan) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.507, ஸ்ராண்லி வீதி, யாழ்ப்பாணம். (அத்தியடி தபால் கந்தோருக்கு அருகில்) (11770)

Pedigreed Great Dane& Pedigreed Dobermann Pincher அழகான பல நிறங்களில் 8 கிழமை நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்(11771)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஒஸ்ரின் கேம்பிறிஜ் Flour Bord கியர் கார் A 60 மொடல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 1229/5, பூநாறிலேன், கொக்குவில் T.P 222 2074. (11739)

## காணி விற்பனைக்கு

மானிப்பாயில் உள்ள யாழ் வீதியுடன், மகளிர் கல்லூரிக்கு அருகாக அமைந்துள்ள சதுரக்காணி இருபக்கம் 6 அடி மதில்களுடன் (Double Gate) பூங்கிணறு, 5பரப்பு மலிவான விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P: 687702 (கொழும்பு). (சி-25409)

கோண்டாவில் பஸ்டிப்போவுக்கு அண்மையில் பலாலி வீதியோரம் வீடு கட்டுவதற்கு ஏற்ற 30 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்புகொள்ளவும். பரமானந்தராஜா, 218, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (11756)

## வீடும் காணியும் விற்பனைக்கு

3ப பரப்புக்காணியில் நன்னீர்க் கிணற்றுடன், அமைந்துள்ள வீடும், 2ப பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 193, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P. 01728912 (11764)

## தேவை

இறைச்சிக் கோழிகள் Broiler சேவல், பேடு தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11769)

## A/L கணித வகுப்பு

A/L கணித மாணவர்களுக்கு தனியாகவோ அல்லது குழுவாகவோ இணைந்த கணிதம், Engineering Graduate ஆல் பிரத்தியேகமாக (Personal) கற்பிக்கப்படும். தொடர்பு: 0777-240541 (ந.நந்தன்) (11677)

## ஆங்கில வகுப்புகள்

O/Lஇற்குத் தோற்றிய மாணவர்களுக்கும் A/L மாணவர்களுக்குமான ஆங்கில வகுப்புகள் ஆரம்பம். 16-12-2002 அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். தொடர்பு: நாகேந்திரம் 82/24(பழையது34/4) செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (11709)

## வகுப்புகள்

Maths, English O/L பரீட்சையில் A,B,C பெறுபேறடையவும் ஆண்டு 6,7,8,9,10 விசேட பெறுபேறடையவும் ஆங்கிலம் A/L, G.A.Q., பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கற்பிக்கப்படும். 85, சிவன் கோயிலடி, சிவன்கோயில்மேற்கு வீதி, திருநெல்வேலி. (11725)

## வீடு வாடகைக்கு

கௌரவமான ஒருசிறிய குடும்பம சொற்ப காலத்துக்கு வசிக்க வீடு (மிருசுவில் கண்டி றோட், தபால்கந்தோர் அண்மையில்) உண்டு. நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: சி.எம்.எஸ்.நாதன், 2 ஆம் குறுக்கு ஒழுங்கை, மிருசுவில். (11726)

## வாடகைக்கு

244, K.K.S. வீதியில், பிளோட் போட்ட, சுருக்குக் கதவுள்ள மாடிக கடை வாடகைக்குண்டு. தொடர்பு: 201,K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.(11736)

## கோழிக்குஞ்சுவிநியோகம

தரமான Prima Broiler குஞ்சுகள 35/= அதிவிஷேட Prima பேட்டுக் குஞ்சுகள் 26.12.2002 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும் தொடர்பு இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரை சந்தையடி, நல்லூர். (11768)

## உதவிக்குறிப்புகள்

சித்திரமும் வடிவமைப்பும் நுண்கலை பட்டப்படிப்பு நுழைவுத் தேர்வுக்கான உதவிக்குறிப்புகளை யாழ். பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (11722)

## மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971ஆம் ஆண்டு பிறந்த, லக்கினத்தில் செவ்வாயுள்ள, லண்டனில் சுப்பர்மார்க்கட் உரிமையாளர் மணமகனுக்கு படித்த, அழகிய, உயரமான நற்பண்புள்ள மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளார். தொடர்பு: V.குமார், 49, ஸ்ராண்லி வீதி, யாழ்ப்பாணம். (11646)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, மூலநட்சத்திரம், 31 வயதுடைய, நிரந்தர அரச பணியாற்றும், சைவபோசன மணமகனுக்கு தமைபண தகுந்த மணமகளை எதிர்பார்கின்றார். தொடர்பு: இராசநாதன் சிறீதரன், ஊரெழு வடக்கு, சுன்னாகம். (11021)

## மணமகன் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1967ஆம் ஆண்டு பிறந்த, அவிட்டம் 4இல் செவ்வாய், பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு மணமகன் தேவை. சீதனம் வழங்கப்படும். தொடர்புக்கு கோ.சிவசுந்தரமூர்த்தி, பொன்பதி, கோண்டாவில் வீதி, கோப்பாய் தெற்கு. (11731)

## திருமண சேவை

1978, பூரம், செவ்வாயற்ற, கிரக பாவம் கூடிய பட்டதாரி மணப்பெண்ணுக்கும் 1969, உத்திரட்டாதி ஆசிரியருக்கும் P.R.உடைய மணமக்கள் வெளிநாட்டில் தேவை. துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (11614)

## தவறிவிட்டது

11.12.02 அன்று யாழ்ப்பாணத்திற்கும் கொக்குவிலுக்கும் இடையில் பெறுமதி மிக்க தங்கச் சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல.23, சங்குவேலி, மானிப்பாய் என்ற முகவரிக்கு அறியத்தரவும். (11732)

CB - 125 மோட்டார் வாகனத்தின் (இல.140 - 3475) காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் ஆகிய ஆவணங்கள் ஆனைக்கோட்டைக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கேதீஸ் களஞ்சியம், கல்வியங்காடு என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (11745)

# கண்ணீர் அஞ்சலி

## உரும்பிராய் கற்பக விநாயகர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம்



*எமது சங்கத்தின் வளர்ச்சிக்காகப் பெரும் பங்காற்றிய சங்கத்தின் முன்னாள் உப தலைவி*

திருமதி

**யோகலட்சுமி இராஜரட்ணம்**

அவர்களது மறைவுக்கு வருந்துவதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய கற்பக விநாயகரைப் பிரார்த்திக் கின்றோம்.


அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

(11755) உரும்பிராய் கற்பக விநாயகர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவு சங்கம்

# முதலாவது ஆண்டு நினைவுகளில்

மண்ணுலகில் 1962 - 03 - 22



விண்ணுலகில் 2001 - 12 - 15

## அமரர் மாணிக்கம் பரமானந்தம் (பரா)

திதி:15-12-2002

உணர்வுக்குள் உன் நினைவெரிய  
நெஞ்சோடு நீளமாய் ஒரு மாரி  
நேற்றுப் போல  
காற்றோடு வந்தொரு சேதி  
காதைச் சுட்டதுவும்  
கொட்டுமொரு மழையில் உன்  
கட்டுடலைக் காணாது கதறி அழுகிறோம்!  
எங்களை எல்லாம் தவிக்கவிட்டு  
எங்கு சென்றாய் பரா?  
நெஞ்சத்தில் நினைவாகி நின்றவனே!  
நாங்கள் இறக்கும் வரை  
நெஞ்சோடு நீயிருப்பாய்!

*முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை.* (11761) உன் நினைவுகளோடு தவிக்கும்: அம்மா குடும்பத்தினர்

# மணி விழாவும் மலர் வெளியீடும் (15-12-2002)

## சித்தத்தில் சிவம் காட்டும் தீரர்

"சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி" என்பது ஔவையின் அருள்வாக்கு; சிவலிங்கச் சித்தம் - வெளிப்படும்போது அருள் அருவியாயும், அந்த அருவி சிவநெறியைப் பேசவைக்கும்; அப்படிப் பேசுகின்ற நிலையடைத்தவர் என் அன்புக்குரிய கவிமணி சி.பொன்னம்பலம் அவர்கள்.

'ஆண்டிகேணி ஐயனாரின் அற்புத வரலாறும் ஆண்டி முனிவர் வரலாறும்' என்னும் நூல், கவிமணி சி.பொன்னம்பலம் அவர்களின் சித்தத்தில் சிவம் காட்டும் சிறந்த நூலாக வருகிறது. மிக முக்கியமான இந்நூல் பாலர் முதல் விருத்தர்வரை படித்து - ஈழத்துச்சிதம்பரத் தலத்தின் பூர்வ வரலாற்றை அறியவைக்கும் பொக்கிஷமாய் அமைந்துள்ளது.

இந்நூலைப் படிப்போர் கேட்போர் இந்நூலாசிரியர், வெளியிடும் தொண்டர்கள் யாவரும் எம்பெருமான் கருணைபெற்றுச் சகல சுகங்களும் பெறுவார்களாக என வாழ்த்துகின்றேன்.

அன்பின் அருட்கவி சீ.விநாசித்தம்பி.



## அறிவிற் சிறந்த ஓர் ஆசான்

கவிஞர் பொன்னம்பலம் அவர்களின் மணிவிழா தொடர்பாக நூல்வெளியீடும் கௌரவிப்பும் இடம்பெறுவதையிட்டு பெரிதும் மகிழ்வடைகின்றேன். ஆசிரியராக அதிபராக இலங்கையின் பலபகுதிகளில் கடமையாற்றி சிறப்பெய்திய இவர், முப்பத்தொரு வருடங்கள் ஆசிரியர் - அதிபர் சேவைகளாற்றி இப்போது ஓய்வுபெற்றுள்ளார். அத்துடன், அறுபது அகவையை அடைந்து மணிவிழாக் காணும் இவர் தொடர்ந்து சமூக, சமயப் பணிகள் ஆற்றவும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சிறந்த நல்வாழ்வு கிடைக்க வேண்டும் என எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

*சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள் (காரைநகர்)*

# கவிஞர் திரு.சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம்

## மகத்தான சேவையாற்றிய மகானுக்கு இன்று மணிவிழா

காரைநகர் சயம்பு வீதியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதிகளிற்கு 1942ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 17ஆம் திகதி பிறந்த பொன்னம்பலம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை இலகு, சைவத் தமிழ் பாடசாலையிலும் உயர்கல்வியை, காரைநகர் இந்துக் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் கற்றுத்தேறி 1971ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 13ஆம் திகதி ஆசிரியர் சேவையில் தன்னை இணைத்துக்கொண்டார்.

அவர் தொடர்ந்து பட்டதாரியாகவும் பயிற்றப்பட்ட ஆசானாகவும் சிறந்து விளங்கினார். இவர் தனது ஆசிரியர் சேவையிலுள்ளபோது பல்வேறு சமய, சமூகப் பணிகளிலும் ஈடுபட்டார். அத்துடன் கவிதைகள் இயற்றியதுடன் பல்வேறு நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

கவிஞரான இவர் சுந்தரத் தமிழ்மாலை, திண்ணபுரக் கவிமலர், வாணிமலர், திண்ணபுர திருச்சதகம், ஐயனார் கவசம் முதலானவற்றை யாத்து, நூல்வடிவில் வெளியிட்டார். அத்துடன் புலமைப் பரிசில் பரீட்சை, சாதாரண தரப்பரீட்சை, உயர்தரப் பரீட்சை மற்றும் கலைமுதர் தேர்வு, கலைமாணி பரீட்சை மாணவர்களுக்கான பாடநூல்களையும் இவர் எழுதி வெளியிட்டமை இவரது புலமையை எடுத்துக்காட்டுகிறது.

காரைநகர் இந்துக் கல்லூரியில் அதன் ஸ்தாபகரான சயம்பருக்கு 1976ஆம் ஆண்டு சிலையமைத்த பெருமையும் இவரையே சாரும். இவர் 32 ஆண்டுகளாக இலங்கையின் பல பாகங்களிலும் ஆசிரியராகக் கடமையாற்றி பின் காரைநகர் பாடசாலைகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் பணிபுரிந்து 17.11.2002இல் ஓய்வுபெற்றார். இவர் பல்வேறு சமய, சமூகப் பணிகளைப் புரிந்து நீண்ட ஆயுளுடன் வாழவேண்டும் என ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானினதும் ஆண்டிகேணி ஐயனாரினதும் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

☞ கவிஞர் உயர்திரு.சி.பொன்னம்பலம் அவர்களின் ஆண்டிக்கேணி ஐயனின் அற்புத வரலாறும் 'ஆண்டி முனிவர் புராணம்' என்னும் நூல் வெளியீடும் கௌரவிப்பும் இன்று (15-12-2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் காரைநகர் யாழ்ரன் கல்லூரி அதிபர் திரு. ந.பரமசிவம் B.A. அவர்களின் தலைமையில் ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் இடம்பெறும். அன்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

- விழாக் குழுவினர் *(காரைநகர்)*

# மு.காங்கிரஸ் முற்றாக விலகினாலும் ஐ.தே.மு. அரசுக்கு ஆபத்தில்லை!

**முஸ்லிம் காங்கிரஸில் உட்கட்சிப்பூசல் காரணமாக அக்கட்சியைச் சேர்ந்த ஒரு பிரிவினர் அல்லது ஒட்டுமொத்தமாக அரசை விட்டு விலகி எதிரணியில் சேர வாய்ப்புக்கள் இல்லாமலில்லை. தாங்கள் அரசமைப்பதற்கு இதையே பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பியும் எதிர்பார்த்தவண்ணம் உள்ளன. ஆனால், அப்படி ஏதாவது நிகழ்ந்தாலும் அரசு வீழ்வதற்கு சாத்தியமில்லை என்பதற்கான காரணங்களை இக்கட்டுரை ஆராய்கிறது.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்குள் உட்கட்சிபூசல் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. அக்கட்சியின் தலைவர் யார் என்ற விவகாரம் நீதிமன்றம் வரை சென்றது. ஹக்கீம் தலைவராகத் தொடர நீதிமன்றம் அனுமதித்து விட்டது. ஆயினும், அதாவுல்லா தலைமையிலான குழுவினரும் ஹக்கீம் தலைமையிலான குழுவினரும் இனிமேல் ஏட்டிக்குப் போட்டியாகவே செயற்படுவர் என்று நம்பப்படுகிறது. நீதிமன்றில் அதாவுல்லா தரப்பினருக்காக ஸ்ரீலங்கா பத்திரிகைக் கவுன்சிலின் முன்னாள் தலைவர் விஜேதாச ராஜபக்ஷ ஆஜரானார். இவர் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு மிகவும் நெருக்கமானவர்.

தான் விரும்பிய சட்டத்தரணி ஒருவரைத் தனது தரப்பின் சார்பில் வாதாடத் தேர்ந்தெடுக்கும் உரிமை அதாவுல்லாவுக்கு உண்டு. அதேபோல அதாவுல்லா தரப்பினருக்காக ஆஜராவதில் விஜேதாச ராஜபக்ஷவுக்கு தடைகள் ஏதுமில்லை. ஆனால், நடந்த சம்பவங்களை அவதானிக்கும்போது அதாவுல்லாவுக்கு குறித்து அனுராவும் அவரது அணியினரும் தீவிரமாகத் திட்டமிட்டு வருகின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸில் நிலவும் உட்கட்சிப்பூசல் வலுவடைந்து கட்சி உடையுமாயின் அல்லது முஸ்லிம் காங்கிரஸில் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் அரசிலிருந்து வெளியேறின் அரசு வீழும் என பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பியும் நினைக்கின்றன.

நாடாளுமன்றத்திலுள்ள மொத்த ஆசனங்கள் 225 ஆகும். ஆகக்குறைந்த பெரும்பான்மையுடன் ஆட்சி நடத்த வேண்டுமாயின் ஆளுங்கட்சிக்கு 113 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

தற்போது ஐ.தே. முன்னணி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கூட்டுக்கு நாடாளுமன்றத்தில் 116 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுண்டு. எதிர்க்கட்சியில் பொ.ஐ.முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, அஷ்ரப் அணி என மொத்தம் 109 உறுப்பினர்கள் உள்ளனர்.

அரசை ஆதரிக்கும் 11 முஸ்லிம்

## எதிரணியின் கனவு பலிக்காது

ஜே.வி.பி.மற்றும் ஸ்ரீ.ல.சு. கட்சியின் ஒத்துழைப்புக் கிடைத்ததை அவதானிக்க முடிந்தது. இருப்பினும், ஐ.தே. முன்னணி அரசுக்குத் தான் தொடர்ந்து ஆதரவு வழங்கப்போவதாக அதாவுல்லா தெரிவித்துள்ளார். ஆனால், ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தைக் கலைப்பது அல்லது ஸ்ரீ.ல.சு. கட்சி ஜே.வி.பி. ஆகியன அதாவுல்லா பிரிவினரின் ஆதரவைப் பெற்று புதிய அரசு ஒன்றை அமைப்பது என்பது குறித்து அனுராவும் அவரது அணியினரும் தீவிரமாகத் திட்டமிட்டு வருகின்றனர்.

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 4 உறுப்பினர்கள் அரசுக்கு அளித்துவரும் ஆதரவை விலக்கினால் நாடாளுமன்றத்தில் அரசு பெரும்பான்மையை இழக்க நேரிடும். அதாவது அரசுக்கு 112 நாடாளுமன்ற உறுப்பினரின் ஆதரவும் எதிர்க்கட்சிகள் தரப்பில் 113 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருப்பர்.

இவ்வாறான ஒரு நிலைமை உருவாகும் என பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பி.யும் எதிர்பார்த்த வண்ணமுள்ளன. ஆனால், சமாதான முயற்சிகள் அரசால் முறிக்கப்படும்வரை அல்லது கைவிடப்படும்வரை அவர்களின் இந்தக்கனவு நனவாக வாய்ப்புகள் இல்லை. பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பியும் போட்டுள்ள இந்தக்கணக்கு அவர்களைப் பொறுத்தவரை மிகவும் சுலபமான கணக்காகும். ஆனால், அவர்கள் எதிர்பார்ப்பதுபோல் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து அதாவுல்லா குழுவினர் வெளியேறி அல்லது ஹக்கீம் குழுவினரை வெளியேற்றி அரசில் இருந்து விலகி எதிரணியில் சேரும்போதுதான் அவர்கள் போட்ட கணக்கு மிகவும் சிக்கலாக மாறும்.

வழமைபோல ஏதாவதொரு காரணத்தைக் காட்டி ஒட்டுமொத்தமாக முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் 11பேரும் அரசிலிருந்து வெளியேறினால் அரசு தரப்பில் 105 பேரும் எதிர்த்தரப்பில் 120 பேரும் இருக்கும் நிலைமை உருவாகும். ஆனால், புதிய திருப்பம் அந்த வேளையில் உருவாகும். அரசு வீழ்ச்சியடையும் நிலைமை உருவானால் தனது கட்சி அரசுக்கு ஆதரவு கொடுக்கும் எனத் தமிழர் கூட்டமைப்பின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக விலகினாலும் தமிழர் கூட்டமைப்பு 16 உறுப்பினர்கள் அரசுக்கு ஆதரவு தரும் பட்சத்தில் அரச தரப்பில் 121 பேர் இருப்பர் (116-11+16). அதேநேரம் எதிர்க்கட்சி மேலும் வலுவிழக்கும் (109+11-16=104). இந்நிலை ஏற்பட்டால் பொ.ஐ.முன்னணி மற்றும் ஜே.வி.பியினரின் கனவு பகல் கனவாகவேமுடியும்.

அரசு அதிகாரத்தை இழந்தால் தற்போதைய சமாதான முயற்சிகள் சீரழிந்துபோகும் என்ற அச்சம் தமிழர் கூட்டமைப்புக்கு உள்ளது. எனவே, அவர்கள் அரசுக்கு ஒத்துழைப்பை வழங்கி அரசைக் காப்பாற்றுவார்கள் என்பது திண்ணம். அவ்வாறு ஒரு நிலைமை உருவானால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்த ஒத்துழைப்பை ஏற்றுக்கொள்வார் என்பதில் சந்தேகமில்லை.

தமிழர் கூட்டமைப்பின் ஆதரவில் அரசு தங்கியிருக்குமே ஆனால் அந்தக் காரணத்தைக்காட்டி எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபட வாய்ப்புகள் உள்ளன. முஸ்லிம் காங்கிரஸில் உட்கட்சி மோதல் உருவாகி இருப்பதால் அக்கட்சியின் ஆதரவை இழக்கக்கூடும் என்ற காரணத்திற்காக அரசு

**ஆக்கம்: ஆகாஷ்**

சமாதான முயற்சிகளை நிறுத்தமாட்டாது. அந்த முயற்சிகள் தொடரும் என்றே கூறலாம்.

முஸ்லிம் காங்கிரஸில் நிலவும் பிரச்சினைகள் உச்சக் கட்டத்தை அடையுமாயின் சமாதானப் பேச்சுக்களின்போது கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரதிநிதியாக சமாதானப் பேச்சுக்களில் யாரை அனுமதிப்பது என்ற பிரச்சினை அரசுக்கு உருவாகக்கூடும். அவ்வாறான நிலைமையில் கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதிநிதியாக சமாதானப் பேச்சில் வேறு ஒருவர் பங்குபற்ற நேர்ந்தால் அவ்வாறு நியமிக்கப்படுபவருக்கு கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் சார்பில் பங்குபற்ற உரிமை உள்ளதா என்ற வினாவை விடுதலைப் புலிகள் எழுப்பக்கூடும்.

தாய்லாந்தில் 2வது சுற்று சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஸ்ரீலங்காவில் பிரதமர் ரணில் . விக்கிரமசிங்க கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களுக்கு தனி ஆட்சி அலகு வழங்கப்படும் என உறுதியளிக்கவேண்டும் எனக் கோரி முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தையும் பகிஷ்கரித்தனர். புரையோடிப்போன சிக்கலுக்குப் பரிகாரம் காண முயன்று கொண்டிருந்த வேளையில் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்து புதிய சிக்கலை உருவாக்க முயன்றனர். வேறு விதத்தில் கூறுவதாயின் தமிழ் மக்களின் குறிப்பாக விடுதலைப் புலிகளின் தியாகங்கள், அர்ப்பணிப்புகளை வெறும் நாடாளுமன்றப பகிஷ்கரிப்புக்குச் சமனாக்க முயன்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்படாத ஒன்றிணைந்த அலகாகவே இருக்கவேண்டும் என்பதே விடுதலைப் புலிகளினதும் தமிழ் மக்களினதும் கோரிக்கையாகும். கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் வடக்கும் கிழக்கும் இணைக்கப்படுவதை விரும்பவில்லை. எனவேதான் இந்தக் கோரிக்கையை ஏற்கமுடியாது என இதுவரை ஆட்சியிலிருந்த அரசுகள் பிரச்சினையில் இருந்து தப்பமுயன்றன.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதை தவிர்ப்பதற்காகவே கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்குத் தனிஅலகு வழங்கப்படவேண்டும் என முஸ்லிம் தலைவர்கள் விடுத்த கோரிக்கைக்கு பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பியும் ஆதரவை வழங்கின.

சமாதானப் பேச்சுக்களின்போது அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பான விடயங்கள் ஆராயப்படும்போது அதில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் பங்குபற்ற வேண்டிய தேவை எழுகிறது.

அதிகாரப்பகிர்வு தொடர்பான விடயங்கள் ஆராயப்படும்போது முஸ்லிம்கள் சார்பில் பிரதிநிதி ஒருவர் பங்குபற்றாவிடின் அந்த வெற்றிடத்தை அதாவது முஸ்லிம்கள் சார்பில் கோரிக்கைகளை முன்வைக்கும் பணியை அரச பிரதிநிதிகளே முன்வைக்க நேரிடலாம். அவ்வாறான ஒரு நிலைமை உருவானால் அதாவது சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நேரடியாக தொடர்பில்லாத விடயத்தில் ஒருதரப்பினர் ஆர்வங்காட்ட முற்பட்டால் பேச்சுக்கள் ஆட்டங்காண நேரிடலாம்.

எவ்வாறாயினும், அரசமைப்பிலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி ஜனாதிபதி அரசைக்கலைத்தாலன்றி பொ.ஐ.முன்னணி , ஜே.வி.பி. மற்றும் அதாவுல்லா குழுவினர் நினைக்கும் விதத்தில் அரசு வீழ்ச்சியடையும் சாத்தியங்கள் தற்போது இல்லை என்றே கூறலாம். ☆

# இலங்கைக்கு உலக வங்கி ரூபா 150 கோடி கடனுதவி

கொழும்பு,டிசெ.15

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக சுமார் 150 கோடி ரூபாவை (ஒன்றரைக் கோடி டொலர்கள்) உலக வங்கி கடனாக வழங்கியிருக்கின்றது.

40 ஆண்டு கால தவணையில் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படும் இப்பணம் இலங்கையின் போக்குவரத்து, தொலைத்தொடர்பு, அரச வங்கிகள் ஆகியவற்றின் சீரமைப்புக்குப் பயன்படுத்தப்படும் என்று உலக வங்கி தெரிவித்திருக்கிறது.

வறுமை ஒழிப்பு, சமூக பொருளாதார வேறுபாட்டைக் களைதல் போன்றவற்றை மேற்கொள்வதற்குத் தேவையான நீடித்த பொருளாதார வளர்ச்சியை அடைய இச்சீரமைப்பு நடவடிக்கைகள் வழிவகுக்கும் எனவும் உலக வங்கி தெரிவித்திருக்கின்றது. (எ)

### ஒளிவிழா

நல்லூர் றோட்டறக்ட் கழகம் ஏற்பாடுசெய்துள்ள ஒளிவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 18ஆம் திகதி புதன் கிழமை காலை 9மணிக்கு யாழ்4ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள சமூகசெயற்பாட்டு மையத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சமூக செயற்பாட்டுமையத்துடன் இணைந்து இது நடத்தப்படவுள்ளது. (எ-12)

## பியகமையில் உள்ள 'கொக்கோ கோலா' தொழிற்சாலையில் பட்டப்பகலில் ஆயுதக்குழு கொள்ளை

கொழும்பு,டிசெ.15

பியகமையில் உள்ள 'கொக்கோ கோலா' தொழிற்சாலையில் நேற்று முன்தினம் பட்டப்பகலில் - முற்பகல் 10.30 மணியளவில் - ஐவரைக் கொண்ட ஆயுதக் குழுவொன்று பன்னிரண்டரை லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளயடித்துச் சென்றது.

பல நூற்றுக்கணக்கான ஊழியர்கள் தொழில்புரியும் இந்தத் தொழிற்சாலைக்குள் போலி அடையாள அட்டைகளை வாசலில் இருந்த காவலர்களிடம் காட்டிவிட்டு கொள்ளையர்கள் உட்புகுந்துள்ளனர்.

'கொக்கோ கோலா' நிரப்பும் சிலிண்டர்களுடன் இவர்கள் சென்றதால் காவலர்கள் இவர்கள் மேல் சந்தேகம் கொள்ளவில்லை.

சிலிண்டர்களுக்குள் மறைத்துக் கொண்டுசென்ற ரி-56 ரகத் துப்பாக்கிகளைக் காட்டி, அங்கிருந்த ஊழியர்களை அப்புறப்படுத்திவிட்டு கொள்ளையர்கள் பணத்தை அள்ளிச் சென்றனர்.

ஊழியர்களுக்கு வழங்குவதற்கு எடுத்து வரப்பட்ட சம்பளப் பணமே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (எ)

## இராணுவ சிப்பாய் குத்திக் கொலை

பொரலஸ்கமுவப் பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த புதனன்று இரவு அப்பகுதியில் உள்ள ஓட்டோ தரிப்பிடமொன்றில் நடந்த மோதலொன்றில் சரத் சந்திரகுமார என்ற இந்தச் சிப்பாய் கத்திக் குத்துக்கு இலக்காகி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

ஓட்டோத் தரிப்பிடத்தில் வைத்து ஓட்டோ சாரதியுடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே கொலையில் முடிந்ததாகத் தெரியவருகிறது. சந்தேகத்தின் பேரில் சுகத்குமார போத்தேஜ் என்ற ஓட்டோச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

**பஸ் நிறுவனங்கள் விற்பனை:**

## ஜனாதிபதி சிபாரிசுகளை தெரிவிக்க ஒருவார அவகாசம்

பிரிட்டிஷ் ஐ.பி.ஜ.எஸ். பஸ் நிறுவனத்துடனான கொத்தணி பஸ் நிறுவனங்கள் பங்கு விற்பனை தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது சிபாரிசுகளைத் தெரிவிக்க அமைச்சரவை கடந்த வியாழக்கிழமை ஒருவாரகால அவகாசம் வழங்கியிருக்கிறது.

தனது சிபாரிசுகளைத் தெரிவிக்க ஜனாதிபதி இருவாரகால அவகாசம் கோரியிருந்தார்.

ஆயினும், ஜனாதிபதியின் கோரிக்கையை நிராகரித்த அமைச்சரவை, இவ்வாண்டு முடிவடைவதற்குள் அமைச்சரவை ஒரு தடவை மட்டுமே கூட்டுவதற்கு கால அவகாசம் இருப்பதால் ஒருவாரத்துக்குள் ஜனாதிபதி தனது சிபாரிசுகளைத் தெரிவிக்க வேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறது. (எ)




சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தால் அண்மையில் ஜீ.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்குப் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இராமநாதன் கல்லூரியில் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் ஆசிரியர் ஒருவர் கருத்துரை நிகழ்த்துவதையும் அதில் கலந்துகொண்ட ஒரு பகுதி மாணவரையும் படத்தில் காணலாம். (ஐ)

## 1. சமாதானப் பாதையில் மைல் கற்கள்

- ஏ9 வீதியைத் திறப்பதற்கு அனுசரணையாக இருந்து அதன் மூலம் வட பகுதிக்கும் அங்கிருந்தும் பெருமக்களினதும் பண்டங்களினதும் போக்குவரத்துக்கு வழிகோலியமை.
- வன்னிப் பிரதேசத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையின் நீக்கத்திற்கு அனுசரணை புரிந்து அதன் பலனாக அங்கு அத்தியாவசிய எரிபொருள், மருந்துப் பொருட்கள் தாராளமாகக் கிடைக்க வழிகோலியமை.
- யாழ்ப்பாணம் நாகவிகாரையின் கோபுரக்கலசம் பிரதிஷ்டையை ஒட்டியதாக யாழ்ப்பாணத்திற்கு கதிர்காமம் கிரி விகாரையிலிருந்து சுமார் 1000 பௌத்த பிக்குகள் பங்குபற்றிய சமாதான யாத்திரையை ஏற்பாடு செய்தமை.

## 2. பாரிய சாதனைகள்

- வடபகுதியில் மீன்பிடித்தலுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்த அனுசரணை புரிந்து அதன் மூலம் அங்கு மீன்பிடிக் கைத் தொழில் மீட்சியடைய வழிகோலியமை.
- வடபகுதியில் அபிவிருத்தி செயற்பாடுகளை ஒருங்கிணைத்தமை. 22 அமைச்சுக்களின் அனுசரணையுடன் அபிவிருத்திச் செயல்திட்டமொன்று உருவாக்கப்பட்டது.
- உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் பற்றி UNHCR மற்றும் குடிசனத் தொகை, புள்ளிவிபரத் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஒரு தேசிய ஆய்வு நடத்தியமை.
- இடம்பெயர்ந்தோர் 217,030 பேருக்கு 3 ஆண்டு காலம் நிவாரணம் வழங்குவதற்கு WFP அமைப்புடன் ஒப்பந்தம் செய்துகொண்டமை.
- இந்தியா சென்ற அகதிகள் திரும்பி வருவதற்கு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம், தேசியப் பதிவுத் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் தேவையான ஆவணங்களைத் தயாரித்து வழிகோலியமை.

## 3. ஆரம்பித்து நிறைவேற்றிய திட்டங்கள்

- ஏ9 வீதியில் ஓமந்தையிலிருந்து பரந்தன் வரை ரூ. 2 கோடி 40 இலட்சம் செலவில் அவசர திருத்த வேலைகள் செய்தமை.
- வன்னியிலுள்ள வாகனப் போக்குவரத்து பாதைகளுக்கு ரூபா 1 கோடி 45 இலட்சம் செலவில் திருத்த வேலைகள்.
- ஓமந்தை சோதனைச் சாவடியில் பொருட்களை மீள ஏற்றுவதற்கான வசதிகளை ரூபா 1 கோடி 40 இலட்சம் செலவில் அமைத்தமை.
- யாழ்ப்பாணம் பொதுநூலகத்தை மொத்தம் ரூ. 12 கோடி 10 இலட்சம் செலவில் புனரமைத்தமை.



வவுனியாவில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபோது



அகதிகளுடன் பேராசிரியர் ஜயலத் ஜயவர்தன அவர்கள்

யாழ்ப்பாண மணிக்கூண்டு கோபுரம்



- யாழ்ப்பாணம் மணிக்கூண்டுக் கோபுர புனரமைப்பு வேலை.
- மன்னாரில் தகவல் தொழில்நுட்ப மையமொன்றை நிறுவியமை.
- யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ரூ. 2 கோடி செலவில் (Sewerage System) திட்டத்தை அமைத்து ஆரம்பித்து வைத்தமை.
- யாழ்ப்பாணத்தில் ஹோட்டல் முகாமைத்துவ பாடசாலையொன்றை திறந்து வைத்தல்.

## 4. மேற்கொண்ட விசேட வேலைத் திட்டங்கள்

### அ) சுகாதாரம்

- யாழ்ப்பாணத்தில் 2002 பெப்ரவரி 13 ஆந் திகதி முதல் 27 ஆந் திகதி வரையும் ஜூலையில் 15 ஆந் திகதி முதல் 21 ஆந் திகதி வரையும் நடமாடும் சுகாதார சிகிச்சை நிலையங்களை நடத்தியமை.
- யாழ்ப்பாணம், மடு, வன்னிப் பகுதிகளில் பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை, கண் சிகிச்சை முதலானவை மேற்கொண்டமை.
- வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் தேவைப்பட்டோருக்கு 3000 க்கு மேற்பட்ட மூக்குக் கண்ணாடிகளை விநியோகித்தமை.
- ஜெர்மன் உதவி பவுண்டேசன் உதவியுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 4 மருத்துவ முகாம்களை ஏற்படுத்தியமை.
- யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேதச் சாலையில் ஆறு சடலங்களை வைக்கும் இடவசதியுள்ள இரண்டு குளிரூட்டிகளை வழங்கியமை.
- தீவுப்பகுதிகளுக்கென அம்புலன்ஸ் இயந்திரப்படகு வழங்கியமை.

### ஆ) கலாசார விளையாட்டு இளைஞர் விவகார செயற்பாடுகள்

- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வளாகத்தில் இந்தியக் கலைஞர்களும் உள்ளூர் கலைஞர்களும் பங்குபற்றிய பழுலருட் கலாசார கதம்ப நிகழ்வை ஒழுங்கு செய்தமை.

# புனர்வாழ்வு, மீள் மற்றும் அகதிகள் வி பிரதானசெய

- வவுனியாவில் 2002 மார்ச் 23 ஆந் திகதி கலாசார நிகழ்வை நடத்தியமை.
- யாழ்ப்பாணத்தில் இலங்கை தேசிய கால்பந்தாட்டக் குழுவுக்கும் மாலைதீவு கால்பந்தாட்டக் குழுவுக்குமிடையில் கால்பந்தாட்டப் போட்டியொன்றை ஒழுங்கு செய்தது.
- இந்தியப் பாடகர்களும் உள்ளூர் கலைஞர்களும் பங்குபற்றிய சின்மயா கீதம் என்ற சமாதான இசை நிகழ்வை நடத்தியமை.
- இலங்கை வர்த்தக சம்மேளனத்துடனும் யாழ்ப்பாணம் வர்த்தக சம்மேளத்துடனும் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் வர்த்தகச் சந்தையை நடத்தியமை.

### இ) விவசாயம்

- யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் தலா 5000 தென்னங்கன்றுகள் விநியோகம்.
- விவசாயிகள் அமைப்புகளுக்கு 97 நீரிறைக்கும் இயந்திரங்கள் விநியோகம்.

### ஈ) சமூக அபிவிருத்தி

- திருநெல்வேலி சந்தை-இரண்டாம் கட்ட நிருமாணம்
- கொக்குவில் சந்தை.
- யாழ்ப்பாணம் மாநகர சபைக்கும் ஆறு பிரதேச சபைகளுக்கும் அவற்றின் சமூக அபிவிருத்தித் திட்டங்களுக்காக பண உதவி செய்தமை.
- சாவகச்சேரி மாதிரிச் சந்தை
- சாவகச்சேரியில் மரக்கறிச் சந்தைக் கடைகள்.
- கைதடி முதியோர் இல்லம் (பூர்த்தியாக்கப்பட்டது)

### உ) வழிபாட்டுத் தலங்கள்

- யாழ்ப்பாணம் நாகவிகாரை புனரமைப்பு



உலக உணவுத் திட்டம்



சிங்கப்பூரில் முதலீட்டாளர் மாநாடு



யாழ்ப்பாண நூலகம்

- நல்லை ஆதீனத்தின் புனரமைப்பு
- கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தின் புனரமைப்பு
- மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தின் புனரமைப்பு
- சின்னமடு தேவாலயத்தின் புனரமைப்பு
- திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் திருப்பணி
- மடு தேவாலயத்தில் யாத்திரிகர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தியமை.

### ஊ) கல்வி

- பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்க 500 சைக்கிள்கள் விநியோகம்.
- கிளிநொச்சியிலுள்ள பாடசாலைகளுக்கு அவசர திருத்த வேலைகள்.

### எ) வீடமைப்பு

- சேமநல நிலையங்களிலுள்ள குடும்பங்களுக்கென 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ் ஓரளவு நிரந்தரமான 250 வீடுகளை அமைத்துக்கொடுத்தல்.

### ஏ) வீதிகள்

- முருங்கன் நானாட்டான் வீதி
- மன்னார் மாவட்டத்திலுள்ள வாகனப் போக்குவரத்து வீதிகள்- 45.8 கிலோ மீட்டர்கள்.

### ஐ) மீள் குடியேற்றம்

- உள்ளூர் இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்றம் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 1298 குடும்பங்களின் மீள் குடியமர்வுக்கென ரூ. 8 கோடி 30 இலட்சம் பயன்படுத்தப்பட்டது.

# ள்குடியமர்த்தல், விவகார அமைச்சின் செயற்பாடுகள்

## 5. அபிவிருத்தி ஆலோசனைத் திட்டங்கள்

- வடபகுதியின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வுக்கென 5 வருட முதலீட்டுத் திட்டம் (2003-2007) தயாரிப்பு. 5 வருடங்களுக்கென எதிர்பார்க்கப் படும் மொத்த மூலதனத்தொகை ரூ. 4650 கோடி.
- நிதி வழங்குவதற்கான துரித செயற்பாட்டுத் திட்டங்கள்- மீளக் குடிய மரும் குடும்பங்களின் அவசரத் தேவைகளை நிறைவேற்று வதற்கான திட்டங்கள்.
- அபிவிருத்திக்கான துறைகளின் அடிப்படையில் குறுகிய கால,நடுத்தர கால, நீண்டகாலத் திட்டங்களை விளக்கும் வடபகுதிக்கான அபிவிருத்தித் திட்டம்.
- இனம் காணப்பட்ட 69 திட்டங்களுக்கான விளக்க அறிக்கைகள்

## 6. வெளிநாட்டு நிதியுதவியில் அமைந்த திட்டங்கள்

- ஓமந்தை, புளியங்குளம் சோதனைச் சாவடிகளின் மின்வசதி, ஐரோப் பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் ரூ. 2 கோடி 40 இலட்சம்செலவில் நிறைவேற்றப்பட்டது.
- ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ரூ. 23 கோடி 40 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டது.
- ஏ9 வீதி, புளியங்குளத்திலிருந்து முகமாலை வரை ஆசிய அபிவி ருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ரூ. 50 கோடி செலவில் புனரமைப்பு.
- முன்னர் பாதுகாப்புப்படையினர் தங்கியிருந்த 132 பாடசாலைகள் நோர்வே அரசாங்க ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியுடன் ரூ. 19 கோடியே 80 இலட்சம் செலவில் புனரமைப்பு.


...நாடு


ஜப்பான் உதவி தொடர்பான கூட்டம்


அகதிமுகாமைப் பரீட்சித்தல்-இந்தியா


மடுமாதா கோயில்


சமாதான யாத்திரை கதிர்காமத் திலிருந்து நாகவிகாரைக்கு




அகதிகள் மீள் குடியமர்த்தலுக்காக UNHCR உடன் கூட்டம்


யாழ் தொழில்நுட்ப பூங்கா


யாழ் மருத்துவ முகாம்


யாழ் புத்தாண்டு கலாசார விழா

- பிரிட்டிஷ் அரசு வழங்கிய நிதியுதவியுடன் ரூ. 495 கோடி செலவில் வடபகுதியிலுள்ள பாலங்கள் புனரமைப்பு.
- UNESCO நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்கு ஒன்ற ரைக் கோடி செலவில் தளபாடங்கள் விநியோகம். உலக வங்கி NEIAP திட்டத்தினால் ரூ. 2 கோடியே 50 இலட்சம் செலவில் பாரிய குளத்திற்கு அவசர திருத்த வேலைகள் மேற்கொண்டமை.
- JBIC/JICA நிதியுதவியுடன் வடபகுதியிலுள்ள வைத்தியசாலைகள் புனரமைப்பு.
- வடபகுதியில் (உப்பாறு, வலக்கையாறு நீர் ஏரிகள்) நீரைச்சேகரிப்ப தற்கான ஆய்வுகள் NORAD மேற்கொண்டிருத்தல்.

## 7. வருகைகள்/தூதுக்குழுக்கள் ஒழுங்கு செய்தமை

- 14.03.2002 அன்று மாண்புமிகு பிரதம மந்திரி யாழ்ப்பாணம் வருகை.
- 28.03.2002 அன்று 49 வெளிநாட்டுத் தூதரகங்களின் தலைவர்கள் யாழ்ப்பாணம் வருகை.
- 19.06.2002 அன்று பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் யாழ்ப்பாணம் வருகை.
- 05.07.2002 UNESCO தூதுக்குழு யாழ்ப்பாணம் வருகை.
- 30.05.2002 ஆந் திகதி இலங்கை பல்கலைக்கழகங்களின் சகல உபவேந்தர்களினதும் யாழ்ப்பாண வருகை.
- 19.09.2002 ஆந் திகதி சீனக் குடியரசுத் தூதுவரின் யாழ்ப்பாண வருகை.

## 8. விஜயங்கள்/ வருகை தந்த குழுக்கள்

- UNDP இல் இருந்து வந்த குழு மதிப்பீடு செய்தது.
- ஐரோப்பிய யூனியனிலிருந்து வந்த குழு மதிப்பீடு செய்தது.
- JICA இலிருந்து வந்த குழு 02.10.2002 மற்றும் 04.10.2002 ஆந் திகதியில் மதிப்பீடு செய்தது.

## 9. நிவாரண விநியோகம்

- அத்தியாவசிய சேவைகள் பிரிவினால் வழங்கப்படும் நிதியைக் கொண் டு நாட்டிலுள்ள 346 சேமநல நிலையங்கள் நடத்தப்படுகின்றன. அமைச்சினால் அளிக்கப்படும் நிதியைக்கொண்டு மேற்படி சேமநல நிலையங்களில் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகள் நிறை வேற்றப்படுகின்றன. வன்னிப்பகுதியில் 26000 குடும்பங்களுக்கு முன்னர் மறுக்கப்பட்டிருந்த பங்கீட்டு உலர் உணவு மீள வழங்கப் பட்டது. தற்போது 800,400 மக்கள் உலர் உணவைப் பெறுகின் றார்கள்.
- உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த வதிவிடங்களுக்கு திரும்புவதற்கு போக்குவரத்து வசதி அளிக்கப்படுகின்றது.
- உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கு 2002 செப்டம்பர் இறுதிவரை வழங்கப்பட்ட உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் மொத்த அளவு 38,309 மெற். தொன் (அரிசி, மா, சீனி, பருப்பு, பால் உணவு) பெறுமதி ரூ. 114 கோடி 15 இலட்சம்.

## 10. நஷ்டஈடு வழங்கல்

- சொத்துக்கள், வழிபாட்டுத்தலங்கள், பாடசாலைகள் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட சேதங்கள், மரணம், காயம் ஆகியவை தொடர்பாக இவ்வரு டம் ஆகஸ்ட் மாதம் வரை 197 பேருக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டது.

## 11. பயிற்சி வேலைத்திட்டங்கள் ஒழுங்குசெய்தமை

- தந்திரிமலை, மடு, எருக்கலம்பிட்டி ஆகிய பகுதிகளில் 240 இளைஞர் களுக்கு சுயதொழில் செய்வதற்கான தொழிற்பயிற்சி.
- வடக்கு, கிழக்கிலுள்ள 26 நிலையங்களில் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உதவியுடன் அபிவிருத்தித் தொண்டர்களுக்கு கட்டிட நிருமாணத் தொழில்நுட்பம், மின்வேலை தொழில்நுட்பம், பனையை மூலப்பொருட்களாகக் கொண்ட உற்பத்திகள், ஆடைத் தொழில்நுட்பம், தொழில்நுட்பம் தொழில்நுட்பவியல் ஆகியவற்றில் தொழிற்பயிற்சி. 2914 இளைஞர்கள் இவற்றினால் பயனடைந்தனர்.
- பனையை மூலப்பொருட்களாகக் கொண்ட உற்பத்திகள், ஆடை தயா ரித்தல், பழம்-மரக்கறி பதனிடுதல், இயந்திரத் தொழில்நுட்பம், மர வேலைத் தொழில்நுட்பம் ஆகியவற்றில் தொழிற்பயிற்சி பெற்றவர் களுக்கு உற்பத்தி/சேவை சார்ந்த வேலைத் திட்டம். வடக்கு, கிழக்கில் 22 நிலையங்களில் 335 இளைஞர்கள் பயிற்சியளிக்கப் பட்டனர்.
- கணனிப் பயிற்சி:- இவ்வேலைத்திட்டத்தினால் 5 நிலையங்களில் 180 இளைஞர்கள் பயனடைந்தனர்.
- வாழ்க்கைத் தர விருத்தி

  (i) கிளி நொச்சியிலும் அக்கராயன்குளத்திலும் இலவச வைத்திய சிகிச்சை முகாம்கள். சுமார் 2000 பேர் பயனடைந்தனர்.
  (ii) கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும் பின்வரும் தொனிப்பொருளில்

  * சூழல் பாதுகாப்பும் டெங்கு நோய்த் தடுப்பும்
  * போதைப் பொருட்கள் பாவனையைத் தடுத்தல்
  * தொழிற்பயிற்சி

  அம்பாறை மாவட்டத்திலுள்ள காரைதீவில் நடத்தப்பட்டன. சுமார் 1500 பேர் பயனடைந்தனர்.

**புனர்வாழ்வு, மீள்குடியமர்த்தல், அகதிகள் விவகார அமைச்சு**

இல. 14, சேர் பாரொன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 382060, 543735, 382061, 382067, 384319
தொலைமடல்: 424109, 382066, 386594
Web: www.rehabsrilanka.org, www.drjj.org, www.drjayalath.com

Heritage House

# ஆலயங்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய நடமாடும் சேவை

## இந்து விவகார அமைச்சின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,டிசெ.15

இந்துசமய விவகார அலுவல்கள அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் 17 ஆம் திகதிமுதல் ஆறு தினங் களுக்கு யாழ்.செயலகத்தில் இயங் கும் பிராந்திய நிலையத்தில் நடமா டும் சேவை நடைபெறவுள்ளது.

அமைச்சர் தி.மகேஸ்வரன் தலை மையில் நடைபெறவுள்ள இந்த நடமாடும் சேவையில் அமைச்சின் உயரதிகாரிகள், இந்துசமய கலா சார அலுவல்கள் திணைக்களத் தின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொள்வர்.

மேற்படி நடமாடும் சேவையில் நடைபெறவுள்ள வேலைத்திட்டங்கள பற்றிய விவரம் வருமாறு:-

★ யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆலயங்கள், இந்துசமய நிறுவனங் கள், அறநெறிப்பாடசாலைகள், அநா தைச் சிறுவர் இல்லங்கள் ஆகிய வற்றைப் பற்றிய பூரணமான தரவு களைப் பெறுதலும், பதிவுசெய்தலும்.

★ ஆலயங்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்கள் ஆகிய வற்றின் பிரச்சினைகள் பற்றியும் அவை களின் தேவைகள் பற்றியும் அறிந்து கொள்ளல்.

★ பாதிக்கப்பட்ட ஆலயங்கள் பற்றிய பூரணமான தகவல்களைப் பெறுதல்.

★ இந்து மயானங்கள் பற்றிய தகவலும் அவற்றிற்கான புனரமைப் புப் பற்றிய விவரமும்.

மேற்படி நடமாடும் சேவையில் கலந்துகொள்ளவதன்மூலம் இந்து ஆலயங்கள், இந்துசமய நிறுவனங் கள், அறநெறிப் பாடசாலைகள் தத்தமது தேவைகளை நிறைவுசெய்து கொள்ளலாம் என அமைச்சின் யாழ்.பிராந்திய உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம அறிவித்துள்ளார். (எ-5-12)

## உணவு முத்திரை விநியோகம்

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் உலர் உணவு நிவாரணம் பெற்றுவரும் குடும்பங்களுக்குரிய புதிய உணவு முத்திரைகள் அந் தந்த கிராம அலுவலர்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. (எ-30)

# திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் முன்பள்ளி கற்கையை ஆரம்பிக்குக!

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.15

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய நிலையத்தின் ஊடாக அடிப்படை முன்பள்ளி கல்விச் சான் றிதழ் வழங்கக்கூடிய வகையில் கற்கைநெறி ஒன்றை ஆரம்பிக்க நட வடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ண சாமி திறந்த பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் இந்த வேண்டு கோளை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் துணை வேந்தருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்திலுள்ள 15 உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் முன்பள்ளிகளில் 890இற்கும அதிகமான ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் அனைவரும ஜி.சீ.ஈ.சாதாரண, உயர்தரம் ஆகிய தகுதிகளுடனும் அரசசார்பற்ற நிறு வனங்களால் வழங்கப்பட்ட பயிற்சி களுடனும் முன்பள்ளி சிறார்களுக்கு கல்வி கற்பித்து வருகின்றனர்.

மேற்படி ஆசிரியர்களிடம் உரிய கல்வித்தகைமை, பயிற்சிச் சான்றி தழ்கள் உள்ளன. எனினும், அவர் களிடம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத தின் குறிப்பாக திறந்த பல்கலைக் கழகம் போன்றவற்றின் சான்றிதழ்கள இல்லை. எனவே, இதனால் மேற்படி முன்பள்ளி ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் பெறும் வாய்ப்பை வருடந் தோறும் இழந்து வருகின்றனர்.

அண்மையில் முன்பள்ளி ஆசிரி யர்களுக்கு நிரந்தர நியமனம் வழங் குவதற்கென நேர்முகப் பரீட்சை ஒன்று திருகோணமலையில் நடத் தப்பட்டது. அந்த நேர்முகப பரீட் சைப் பெறுபேற்றின் அடிப்படையில் நியமனமும் வழங்கப்பட்டது.

எனினும், இத்தகைய அங்கீகரிக்கப பட்ட நிறுவனத்தின் சான்றிதழ்கள் இல்லாமையால் யாழ்.மாவட்ட முன் பள்ளி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை.

இலங்கையில் உள்ள் திறந்த பல்கலைக் கழகத்தின் ஏனைய பிராந் திய நிலையங்களில் இக்கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதுடன், அக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்தோருக்கு தகுதியான சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வரு கின்றன.

எனவே, எதிர்வரும் கல்வி ஆண்டிலாவது தங்கள் பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலை யத்தில் இந்த கற்கை நெறியை ஆரம்பித்து யாழ்.முன்பள்ளி ஆசிரி யர்களுக்கு உதவுமாறு தங்களை விநயத்துடன் கேட்டுக்கொள்கின் றோம் - என்று அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடித்தின் பிரதிகள் வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந் திய இயக்குநர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.(எ-5)


"அஷ்டலக்ஷ்மி" கலண்டர் விற்பனையில் 2002இல்
தங்கப்பதக்கம் பெற்றோர் விவரம்
★ சிதம்பரப்பிள்ளை புத்தக சாலை, நெல்லியடி.
★ பூபாலசிங்கம் புத்தகசாலை, வெள்ளவத்தை.
★ கிப்ற் ஹவுஸ், கல்முனை.
★ K.P.K. சென்ரர், வவுனியா.
அஷ்டலக்ஷமி பதிப்பகம்
320, செட்டியார் தெரு,
(11373) கொழும்பு - 11.

இலவச ஆங்கில பாடநெறி
தபால்மூலம்
சரளமாக எழுத, பேச, வாசிக்க 90 நாள்கள் பாடநெறி
Diploma/Basic English
இப்பாடநெறியானது குறுகிய காலத் தில விரிவான ஆங்கில அறிவை வீட் டில் இருந்தவாறே கற்றுக்கொள்ள முடி யும். இப்பாடநெறியைக் கற்றுக்கொள்ள வயதுக் கட்டுப்பாடோ ஆங்கில முன் னறிவோ தேவையில்லை.
பாடநெறிக் கட்டணம் இலவசம்
பாடநெறி முடிவில் Diploma In English சான்றிதழ் வழங்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு 3/-ரூபா பெறுமதியான (4) நான்கு முத்திரைகள் அனுப்பி பெற்றுக் கொள்க.
The English Language Institute
P.O.Box 083 Kandy
Tel. 077-802849 (11219)

இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்
ஸ்ரீ சோடாறிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாகசுப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழில் பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம்மூலம் தீர்வுகாணலாம்.
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!
மணிசாமி P.T.R.
யாழ்.உல்லாசப் பயணிகள் விடுதி.
இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).
பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.
(வியாழக்கிழமைகளில் விடுமுறை) (11727)

LIONS CLUB OF MANIPAY PARISH
We Serve
HELP TO SAVE THE LIFE OF A SCHOOL GIRL
Miss Thamini Thavamohan is suffering from heart disease. She needs anurgent surgical operation. It will cost nearly Rs. 400 000 to do it at Apollo hospital, Colombo. She is a student at Manipay Memorial English School, Manipay reading in Standard 8. Her father is a watcher at Manipay Ladies' College, Manipay. He doesn't have funds to get his daughter operated. In order to collect funds for the operation. The Lions Club of Manipay Parish has opened a saving account No: 8060004425 at Commercial Bank of Ceylon Ltd., Jaffna. You can send mony to the account from any part of the world. We have also opened a savings account No 174,96 at Bank of Ceylon, Manipay. Please contribute liberally for a humanitarian cause. Tiny drops make a mighty ocean.
Lion M.Thiagarajh, President    Lion C.Kesavarajan, Secretaery    (11650)

சிவமயம்
ஜோதிடம்
இந்திய பரம்பரை சாஸ்திரியார் அருள்வாக்கு அம்பிகா அம்மா அவர்கள் முதல்முறையாக யாழ்.மாநகருக்கு வருகை தந்துள்ளார்கள். கைரேகை, ஜாதகம் தெளிவாகப் பார்த்துக் கூறப் படும். ஜாதகம் எழுதிக்கொடுக்கப்படும். எந்தப் பிரச்சினை களானாலும் ஜோதிட ரீதியாகச் சரிசெய்து கொடுக்கப்படும்.
அம்மாவிடம் வாக்குக்கேட்டு நன்மை அடைந்தோர் கொழும்பு மாநகரிலும் வவுனியா நகரிலும் பல்லாயிரக்கணக்கானோர். நீங்களும் நன்மையடைந்து, உங்கள் வாழ்வை சீருஞ்சிறப்புமாக்க இன்றே அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் சந்திக்கவும்.
சந்திக்கும் இடம்: அருள்வாக்கு அம்பிகா அம்மா, மடோனா லொட்ஜ் (லிங்கன் கிறீம் ஹவுஸ் அருகில்) 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு: ஒவ்வொரு நாளும் காலை 8 மணி தொடக்கம் பகல் ஒரு மணிவரை. மேலும் பி.ப.2.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பார்க்கப்படும். (11715)

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி
ஒருமுறை விரையுங்கள்
உண்மை புரியும்
கிறிஸ்மஸ் புதுவருடத்தை முன்னிட்டு
மெக்ஸ் புடைவை மாளிகை

நிறுவனத்தாரின் அதிரடி மலிவு விற்பனை 06.12.2002முதல் 31.12.2002வரை
* சுபமுகூர்த்தப் பட்டுப்புடைவைகள் உட்பட இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன சாறி வகைகளும் பிளவுஸ் தினிசுகளும்.
* நங்கையர் விரும்பும் ஸ்கேட் அன் பிளவுஸ், புறொக்ஸ், பினபோம், சல்வார்கமிஸ்.
* ஆடவர் விரும்பும் சேட், Tசேட், ஜீன்ஸ், சூட்டிங்.
* சிறுவர், சிறுமியர்களுக்கான நவீன ஆடைத் தெரிவுகளுக்கும் இன்றே நாடுங்கள்:
மெக்ஸ் புடைவை மாளிகை
இல.34, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(11460)

எமது ஈழமண்ணின் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள பல நோ.கூ.சங்கங்களின் தலைவர் முதல் முகாமையாளர், களஞ்சியப் பொறுப்பாளர், கிளை முகாமையாளர், உதவியாளர் கொள்முதல் பொறுப்பாளர், உதவியாளர் ஆகியவர்கள் முகங்கோணாமல், தட்டிக் கழிக்காமல், சாக்குப் போக்குச் சொல்லாமல் அன்பு கலந்த இதய சுத்தியோடு முழுமனதுடன் தரும் ஆதரவுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டவர்கள்.
லாலா சோப் எமது தயாரிப்பான சன்சயின் சோப் உற்பத்திக்கு இவர்கள் காட்டும் கரிசனையும் ஆதரவும் ஊக்கமும் எமக்கு என்றென்றும் தேவை. தொடர்ந்து எமக்கு ஆதரவளித்தால்தான் கைத்தொழில் வளத்தைப் பெருக்கி பலருக்கு நாம் வேலை வாய்ப்புக்களை வழங்கமுடியும். அதன்மூலமே எமது உற்பத்திகளும் ஈழமண்ணில்
நல்ல வளம் பெறும்
என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
ஈழ வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழும் மக்களுக்கும் எமது இதய நன்றிகள்.
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.
(சி-25359)


## அரியாலை அபிவிருத்திச் சங்கம்
## தரம் 5 இற்கான புலமைப்பரிசில் - 2003
## மாணவர்கள் தெரிவு

மேற்படி பரிசில் திட்டத்திற்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற் கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் (22.12.2002) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிமுதல் பி.ப.2.00 மணிவரை இலக்கம் 435, கண்டி வீதி, அரியாலை எனும் முகவரியில் அமைந்துள்ள எமது சங்கப் பணிமனையில் நடைபெறும்.

நேர்முகப் பரீட்சைக்கு மாணவர்களை அழைத்துவரும்போது கீழ்வருவனவற்றைப் பெற்றோர் அல்லது பாதுகாவலர் தவறாது எடுத்துவரல்வேண்டும்.

1. குடும்ப நிவாரண அட்டை
2. 2002ஆம் ஆண்டிற்குரிய பாடசாலை மாணவர் தேர்ச்சி அறிக்கை.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான தகைமைகள்:

1. அரியாலைப் பிரதேசத்தை உள்ளடக்கும் J/91, 92, 93, 94, 95, 96 இலக்க கி.சே.பிரிவுகளை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்கள். மற்றும் J/62, 63, 76, 77, 109 இலக்க கி.சே. பிரிவுகளின் அரியாலைப பிரதேசத்துள் அடங்கும் பகுதிகளை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்கள்.
2. மேற்படி பகுதிகளை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட தற்போது இடம்பெயர்ந்து வசிப்பவர்கள்.
3. ரூபா 3000இற்குக் குறைந்த மொத்த மாத குடும்ப வருமானத் தைக் கொண்ட குடும்ப அங்கத்தவர்கள்.

*குறிப்பு:-* புலமைப் பரிசிலுக்குத் தெரிவுசெய்யப்படும் மாணவர்களின் பட்டியல் நேர்முகப் பரீட்சையன்று பூர்த்திசெய்யப்படும்.

*435, கண்டி வீதி,*
*அரியாலை.*

- நிர்வாகம்

(11642)

# கடும் கடற்கொந்தளிப்பினால் வடமராட்சியில் மீன்பிடி பாதிப்பு

வடமராட்சி,டிசெ.15

வடமராட்சிக் கடற்பகுதியில் கடந்த ஒருவாரகாலத்துக்கு மேலாக கடுமையான கடற்கொந்தளிப்பும் கடும் மழையும் இருந்து வருவதனால் மீன்பிடித் தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடற்கொந்தளிப்புக் காரணமாகப் பெரும் எண்ணிக்கையான மீனவர்கள் கடந்த ஒருவாரகாலமாகக் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை. இதனால், அவர்களது வருமானம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மீன் வகைகளுக்கு வடமராட்சியில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை -

ஒரு தொகுதி சிமெந்தினை தனியார் வர்த்தகர்களுக்கென ஏற்றி வந்த 'ஹந்தல' கப்பலிலிருந்து சிமெந்தினை இறக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதனால், மூன்று நாள்களில் சிமெந்தினை இறக்கி முடிக்கவேண்டிய 'ஹந்தல' கப்பல் கடந்த ஒரு வாரகாலத்துக்கு மேலாக காத்து நிற்கின்றது.

இக்கப்பலில் இருந்து இன்னமும் 40 லொறி பாரம் சிமெந்து இறக்கப்பட வேண்டியுள்ளது. (ஐ-173)

## தபாலகம் புதிய இடத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.15

வண்ணார்பண்ணை தபால் நிலையம் நாளை திங்கட்கிழமை தொடக்கம் 'இலக்கம் 40, நாவலர் வீதியில்' (கீரிப்பிள்ளையார் கோவிலுக்கருகில்) உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் செயற்படவுள்ளது.

அன்றையதினம் காலை 8.30 மணிக்கு பதில் அஞ்சல் அதிபர் நாயகம் என்.ஜெயரட்ணம் அங்கு வைபவ ரீதியாகப் பணிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார். இந்தத் தபாலகம் இதுவரைகாலமும் யாழ்.ஐந்து சந்திக்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்கிவந்தது. (ஐ-10)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.15

நல்லூர் ரோட்டறக்ட் கழகத்தினால் நடத்தப்படும் ரோட்டறக்ட் குடும்பம் பற்றிய கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கழகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழகத்தின் திட்ட இயக்குநர் என். கமலவேணி தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் ரோட்டறக்ட் கழக அங்கத்தவர்கள் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-12)

## நீதிபதியின் மனு உயர் நீதிமன்று ஏற்பு

கொழும்பு,டிசெ.15

பிரதம நீதியரசர் உட்பட நீதிச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்களான மூன்று நீதியரசர்கள் ஆணைக்குழுச் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோருக்கு எதிராக நீதிபதிகள் சங்கத்தின் தலைவரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதி மன்றம் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது.

மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்று நேற்றுமுன்தினம் இம்மனு மீது பூர்வாங்க விசாரணைகளை நடத்திய பின்னர் அதனை அடுத்த மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (எ)

## 71 இலங்கையர்கள் சவூதிக் கடலில் மீட்பு!

சவூதி அரேபியாவுக்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த கப்பல் ஒன்றிலிருந்து இலங்கையர்கள் 71பேரை சவூதி அரேபிய கரையோரக் காவற்படை மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செங்கடலுக்குச் செல்வதற்கு முன்னர் சர்வதேச கடற்பரப்பில் கடந்த எட்டு நாள்களாக இந்தக் கப்பல் தத்தளித்துக்கொண்டிருந்தது என செய்தி ஏஜென்சிகள் தெரிவித்துள்ளன. (ஒ-12-4)

### மல்லாகம் சோடாக்கம்பனி அருகே

# தனிமையில் சென்ற பெண்ணிடம் வழிப்பறி செய்தவர் பிணையில் விடுதலை

வலி.வடக்கு,டிசெ.15

மல்லாகம் சோடாக்கம்பனி ஒழுங்கையில் தனிமையில் சென்ற பெண்ணிடமிருந்து சுமார் இரண்டரை லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தை வழிப்பறி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேகநபர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இடம்பெயர்ந்து தெல்லிப்பழையில் வசித்துவரும் தம்பிராசா பொன்னம்மா என்பவர் சுன்னாகம் இலங்கை வங்கியிலிருந்து பெற்ற 2 லட்சத்து 62 ஆயிரத்து 485ரூபா அறுபத்தாறு சதத்துடன் வீதியில் சென்றவேளை அவரிடமிருந்து கைப்பையைப் பறித்துச் சென்றதாகக் கூறி இரத்தினசிங்கம் ஜெயபாலன் என்பவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த இவர், கடந்த 28 ஆம் திகதி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் சாட்சியினால் அடையாளங்காட்டப்பட்டார்.

நேற்றுமுன்தினம் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் மேற்படி நபர் ஆஜர்செய்யப்பட்ட போது எதிரியின் கோரிக்கையை ஏற்ற நீதிபதி அவரை 30 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் 50 ஆயிரம் ரூபா, இரண்டு அரச உத்தியோகத்தர்களின் பிணையிலும் செல்லும்படி கூறி உத்தரவு பிறப்பித்தார். (எ-86)

### துணைநிலை மருத்துவ அலுவலர் போராட்டம்:

# நான்காம் கந்தாயத்துக்குரிய மருந்து எடுத்துவரப்படவில்லை

சண்டிலிப்பாய்,டிசெ.15

கொழும்பில் பணியாற்றும் துணை மருத்துவ சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளதால் யாழ்.சுகாதார திணைக்களத்துக்கு வந்துசேரவேண்டிய இவ்வருட 4ஆம் கந்தாயத்திற்கான மருந்து வகைகள் இதுவரை யாழ்.எடுத்துவரப்படவில்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேற்படி 4ஆம் கந்தாயத்திற்கான ஒரு பகுதி மருந்துவகைகளை யாழ். எடுத்து வருவதற்காக கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் மத்திய மருந்துக் களஞ்சியத்திற்கு இங்கிருந்து இருலொறிகள் சென்றதாகவும் -

எனினும், அங்கு களஞ்சிய மருந்தாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதால் மருந்துகளை யாழ். எடுத்துவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

இதனால் யாழ்.மாவட்டத்தில் அரச வைத்தியசாலைகளுக்கு இவ்வருடத்திற்கான 4ஆம் கந்தாயத்திற்கான மருந்துகள் இதுவரை விநியோகம் செய்யப்படவில்லை. (எ-135)

### நள்ளிரவுவேளையில்

# கொழும்புத்துறை கிழக்கில் வர்த்தக நிலையத்தில் திருட்டு

கொழும்புத்துறை,டிசெ.15

கொழும்புத்துறை கிழக்கு 3ஆம் குறுக்கு வீதியில் உள்ள பலசரக்கு கடையொன்றிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் பொருள்களும் திருட்டுப் போயுள்ளன.

இத்திருட்டுச் சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

இப்பகுதியில் உள்ள இரண்டு வீடுகளுள் முன்னிரவு இனந்தெரியாதோர் சிலர் உட்புகுந்தனர் என்றும்-

வீட்டு உரிமையாளர்கள் விழித்துக்கொண்டதையடுத்து அவர்கள் அங்கிருந்து அகன்றுவிட்டனர் என்றும் - கூறப்பட்டது.

பின்னர் நள்ளிரவுவேளையில் பலசரக்குக் கடை ஒன்றினுள் பின்பக்கமாக உள்நுழைந்த திருடர்கள் இந்தத் திருட்டை மேற்கொண்டனர் என்றும் - கூறப்பட்டது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்ந்துவரும் இப்பகுதியில் இவ்வாறான திருட்டுக்கள் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-30)

# தவறணையில் கசிப்பா? மறுக்கின்றது கூட்.சங்கம்

'தவறணையில் கசிப்பு விற்பனை: நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை' என்ற தலைப்பில் கடந்த மாதம் 18 ஆம் திகதிய உதயனில் வெளியாகிய செய்தி தொடர்பாக -

கோண்டாவில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் விளக்கக் குறிப்பு ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது.

18.11.2002 ஆம் திகதி திங்கட்கிழமை வெளிவந்த 'உதயன்' பத்திரிகையின் 5ஆம் பக்கத்தில் 'தவறணையில் கசிப்பு விற்பனை: நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை' என்ற தலைப்பில் வந்த செய்திக்குப் பின்வரும் காரணங்களுக்காக மறுப்புத் தெரிவிக்கின்றோம்.

எமது சங்கத்திற்கு சொந்தமான கள் விற்பனை நிலையங்களில் சில கள் ளுத்தவறணைகள் வலிகாமம் தெற்கு, உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் அடங்குகின்றன. இப் பிரதேச தவறணை ஒன்றில் கள்ளைத் தவிர கசிப்பு விற்பனை செய்வதாகக் கூறப்படுவதாகவும் - இதனைத் தடுக்க வலி.தெற்குப் பிரதேச செயலர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகை பிரிவில் எமது சங்கத்தின்கீழ் இயங்கும் எந்தக் கள்ளுத் தவறணைகளிலும் கசிப்பு விற்கப்படுவதில்லை என்பதைத் தங்களுக்குத் தெரியப்படுத்துவதுடன் இதனைத் தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கோப்பாயில் கைதான இளைஞர்கள் காவலரணை தாக்க வந்தவர்களாம்

## இராணுவத் தரப்பு விளக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

கோப்பாய் பாலத்துக்கு அருகே நீர் நிலையில் குளித்துவிட்டுத் திரும்பிய சமயம் இளைஞர்கள் 11 பேர் படையினரால் கைதுசெய்யப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பலாலி இராணுவத் தலைமையகம் பத்திரிகைக் குறிப்பு ஒன்றை உதயனுக்கு அனுப்பிவைத்திருக்கிறது.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் கோப்பாய் - கைதடி வீதியில் அமைந்திருந்த இராணுவக் காவலரணைத் தாக்கி அழிக்க முயன்ற வேளையே கைதுசெய்யப்பட்டனர் என்றும் -

12 இளைஞர்களில் 10 பேர் மட்டுமே கைதுசெய்யப்பட்டனர். அவர்களுடன் வந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரும் மற்றொருவரும் தப்பிவிட்டனர் என்றும்-

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# தொழில்நுட்பக் கல்லூரியில் 3 புதிய பயிற்சிநெறிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் அடுத்த ஆண்டில் 3 புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர் ந. யோகராஜன் தெரிவித்துள்ளார்.

கடந்த பல வருடங்களாக இங்கு பழைய பயிற்சி நெறிகளே இடம்பெற்று வருவதனால் மாணவர்களின் வரவு மிகவும் குறைவாக இருப்பதை அடுத்து புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன்படி தேசிய சான்றிதழுக்கான ஜப்பானிய கற்கைநெறி (ஒரு வருடம் - முழுநேரம்), தேசிய சான்றிதழுக்கான செயலாளர் பயிற்சி (ஒரு வருடம் - முழுநேரம் - ஆங்கிலம்), கணனிப் பயிற்சி (6 மாதம் - முழுநேரம் - ஆங்கிலம்) ஆகிய பயிற்சிநெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஜப்பானிய கற்கைநெறிக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் ஜப்பானிய தரத்துக்கு அமைவாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-10)

# தென்மராட்சி குடும்பங்களுக்கு 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.15

குடாநாட்டில் 95ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக வழங்குவது என்ற திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக தென்மராட்சிப் பகுதியில் அண்மையில் மீளக்குடியமர்ந்துள்ள 134 குடும்பங்களுக்கான உதவு தொகை 15 ஆயிரம் ரூபா அடுத்த வாரமளவில் வழங்கப்படவுள்ளது.

இதற்கென 20 லட்சம் ரூபாவை யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு ஒதுக்கியுள்ளார்.

இதேவேளை -

தென்மராட்சியில் ஏற்கனவே மீளக்குடியமர்ந்துள்ள 666 குடும்பங்களுக்கு உதவிக் கொடுப்பனவாக மொத்தம் ஒரு கோடி ரூபா வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-8)

# வலி. மேற்கு, தென்மேற்கில் வைரஸ் காய்ச்சல், பலர் பாதிப்பு

சண்டிலிப்பாய்,டிசெ.15

வலி.தென்மேற்கு, வலி.மேற்கு ஆகிய பகுதிகளில் "வைரஸ் காய்ச்சல்" நோய் வேகமாகப் பரவிவருகின்றது.

ஒரு வீட்டில் ஒருவருக்கு இந்த வைரஸ் காய்ச்சல் நோய் ஏற்பட்டால் அவ்வீட்டிலுள்ள ஏனையோருக்கும் இது எளிதாகத் தொற்றிக்கொள்கின்றது எனச் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

இதற்கிடையில், சங்கானை அரசினர் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை, வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றில் இக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பலர் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

சங்கானை அரசினர் வைத்தியசாலை ஆண், பெண் வார்ட்டுக்களில் மட்டும் இக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பலர் சிகிச்சைக்காகத் தொடர்ந்தும் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் -

வார்ட்டுக்களில் தங்கி நிற்பதற்கு இடமில்லாத காரணத்தினால் வெளிநோயாளர் பிரிவில் பலருக்கு மருந்துகள் வழங்கப்பட்டு அவர்கள் வீட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர் எனவும் கூறப்பட்டது. (எ-135)

## தென்னிந்தியத் திருச்சபை பால்மா விநியோகம்

அராலி,டிசெ.15

காட்டுப்புலம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து சுழிபுரம், கம்பளை முகாமில் வசித்துவரும் பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோருக்கு பால்மா விநியோகிக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியத் திருச்சபை இந்த பால்மா பைக்கற்றுக்களை விநியோகித்தது. (எரி)

# கிறிஸ்து பிறப்புக் காலத்தில் நற்பண்புகளுடன் வாழ முயல்வோம்!

மனுக்குலத்தை தூயதாக்கி முடிவில்லா விடுதலை வழங்கவே இறைமகன் இயேசு மனுவுருவானார். அவரது வாழ்வும், சீரிய போதனைகளும், செயற்பாடுகளும் வெளிப்படையானதாகவும், நேரிய, தூய சத்தியத்தின் பிரதிபலிப்பாகவும் அமைந்திருந்தன.

இன்று நாம் இயேசுவின் திருவருகைக்கு எம்மை ஆயத்தம்செய்யும் காலமாகிய திருவருகைக் காலத்தில் பயணித்துக்கொண்டிருக்கிறோம்.

### ஞாயிறு நற்பிரசாரம்

இவ்வேளையில், இயேசுவின் பிறப்பை முன்னிட்டு செய்யவேண்டியது என்ன? எவ்வாறு அவரை எமது மனக்குடிலில் பிறக்கவைக்கலாம்? எனச் சிந்தித்து திட்டமிட அழைக்கப்பட்டுள்ளோம். எம்மை நாமே உள்ளார்ந்த ஆய்வு செய்யவேண்டிய காலமிதாகும்.

திருச்சட்டங்களை நிறைவேற்றுகிறோம். தவறாது ஆலயம் சென்று வழிபடுகிறோம். காணிக்கை செலுத்துகிறோம். திருவிழாக்களை சிறப்பாகக் கொண்டாடுகிறோம். எனவே, நாம் ஆண்டவரின் வழியில் செல்கிறோம் என எண்ணுகிறோம். இதற்கு மேலாக எமது அன்றாட வாழ்வும் பணிகளும் இயேசுவில் கட்டி எழுப்பப்பட்டதாக அமையவேண்டும். எந்நேரமும் இயேசுவை அறிக்கையிட்டு சாட்சியம் பகருவதாக இருக்கவேண்டும்.

எமது கடந்தகால கசப்பான, தவறான, சுயநலம் சார்ந்த வாழ்வுப் பாதைகள் புனரமைக்கப்படவேண்டும். ஆன்மீகத்துக்கு எதிரான செயற்பாடுகளைத் தவிர்த்து மனமாற்றம் பெறவேண்டும். அவ்வாறு உளமீட்சி அடைந்த நல்லுள்ளங்களையே இறைமகன் யேசு தாம் பிறக்க உகந்த குடில்களாக தெரிந்தெடுப்பார்.

'மனந்திரும்புங்கள் ஏனெனில், விண்ணரசு நெருங்கிவிட்டது. ஆண்டவரது வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவர் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள்' (மத்;3:2-3). எனவே, எமது நிலையை மாற்றி ஆன்மீக விழிப்புடன் இருக்க வேண்டியதாகும்; அதுவே

### எஸ்.யேசுதாஸ்

எமக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள இடைவெளியை விரிசலாக்கி அன்புப் பிணைப்பை துண்டிப்பதாக மாறிவிடும்.

ஆகவே, இன்றே நாம் புதிய இலட்சியங்களையும், பண்புகளையும் எமது வாழ்வில் கைக்கொண்டு வாழ முற்படுவோம். இறை தன்மையில் உள்ள யேசு தம்மையே தாழ்த்தி மனுவுருவாகி நண்பனாக, ஆசானாக, குருவாக, ஒளியாக எம்மை வழிநடத்தி விடுதலை வாழ்வுக்கு இட்டுச் சென்றதை கிறிஸ்து பிறப்புக் காலத்தில் நினைவு கூருவோம். ★

## வலிகாமம் தென்மேற்கில்
# மீளக்குடியமர்ந்தவர்களுக்கு பல அமைப்புக்களும் உதவி

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் ஏ-9 பாதையூடாக வந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களால் பல உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் இப்பகுதியில் மீளக்குடியமர்ந்த 600 குடும்பங்களுக்கு உலர் உணவு அல்லாத பல பொருள்களை வழங்கியுள்ளது. சமையலுக்கு தேவையான பாத்திரங்கள், வாளிகள், பாய்கள், லாம்புகள் என்பனவே இவ்வாறு வழங்கப்பட்டவையாகும்.

பட்டினிக்கெதிரான நிறுவனம் மீனவகுடும்பங்களுக்கு தேவையான மீன்பிடி உபகரணங்கள், வலைகள் என்பவற்றையும் விவசாயிகளுக்கு தேவையான உபகரணங்கள், மண்வெட்டிகள் மற்றும் விதைதானியங்களையும் வழங்கியுள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம இப்பகுதியில் உள்ள ஆறு பொதுக் கிணறுகளை புனரமைப்புச் செய்து கொடுத்துள்ளதுடன், 50 குடிசைகளையும் அமைத்துக்கொடுத்துள்ளது.(எ-152)


மங்களகரமான திறப்புவிழா

**ஒளியருவி வீடியோ அன் போட்டோ**

விசுவமடு, மல்லாவி, கரவெட்டியில் இயங்கிவந்த எமது நிறுவனம் வீரகாளியம்மன் கோயிலடி, யாழ்ப்பாணத்திலும், வல்வெட்டியிலும் இன்று (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை தனது சேவையை ஆரம்பிக்கின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

NOTE:- வீடியோ, போட்டோகமராக்கள் திருத்திக்கொடுக்கப்படும்.
T.P: 0777-241958

*உரிமையாளர்*
A.பிரபாகரன்

(11781)


கந்தவனநாதன்துணை

## பொலிகண்டி அருள்மிகு
## கந்தவனம் சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்
# யந்திரபூஜை விஞ்ஞாபனம்

இன்று (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை (கார்த்திகை மாதம் 29 ஆம் நாள்) காலை 10 மணிமுதல் 11.15 மணிவரை (பழையநேரம்) உள்ள சுபவேளையில் ஆரம்பமாகும்.

**குறிப்பு:- 48 நாள்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கும் யந்திரபூஜைக்குரிய உபயம் செய்யவிரும்புவோர் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

ஆலயசேவையில்
செல்வி பா.செல்லையாபிள்ளை
ஆதீனகர்த்தாவும், திருப்பணிச்சபையினரும்.

(11780)




# கண்ணீர் அஞ்சலி
## வீரவாகு கணபதிப்பிள்ளை
*(புலோலி கிழக்கு)*

எமது பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராகக் கடமையாற்றும் திரு.கணபதிப்பிள்ளை சண்முகநாதன் அவர்களின் அன்புத் தந்தையார் வீரவாகு கணபதிப்பிள்ளை அவர்களின் மரணச்செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலகம்,*
*வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.*

பிரதேச செயலரும்,
நலன்புரிச்சங்க,
உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.

(11793)

# கண்ணீர் அஞ்சலி
## தம்பு அமிர்தலிங்கம்
*(வடக்குத் தெரு, தொண்டமனாறு)*

எமது பிரதேச செயலகத்தில் எழுதுநராகக் கடமையாற்றும் திருமதி கதிரமலை அருந்தவரெத்தினம அவர்களின் அன்புத் தந்தையாரும், எமது பிரதேச செயலகத்தில் எழுதுநராகக் கடமையாற்றும் திரு.சின்னத்தம்பி கதிரமலை அவர்களின் அன்பு மாமனாருமாகிய **தம்பு அமிர்தலிங்கம்** அவர்களின் மரணச்செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறோம். அவரின பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலகம்,*
*வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.*

பிரதேச செயலரும்,
நலன்புரிச்சங்க,
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.

(11791)

## தையல் பயிற்சி விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் நடத்தப்படுகின்ற தையல் பயிற்சிக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும இப்பயிற்சிக்கு கீழ்க்காணும் தகுதிகளை உடையோர் எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம் என்று உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் அறிவித்துள்ளார்.

ஜி.சீ.ஈ.சாதாரணதர வகுப்பில் கற்ற, 15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிக்கின்றவர்கள் தமது கிராம அலுவலரால் சிபாரிசு செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)

## சின்னமடு பாடசாலை ஜனவரி முதல் இயங்கும்

ஊர்காவற்றுறை,டிசெ.15

பன்னிரெண்டு வருட இடைவெளிகளுக்குப் பின்னர் சின்னமடு றோ.க.த.கலவன் பாடசாலை எதிர்வரும் ஜனவரி முதல் மீண்டும் இயங்கவுள்ளது.

இங்கு ஆண்டு ஒன்று தொடக்கம் ஐந்து வரையிலான மாணவர்கள அனுமதிக்கப்படுவர் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

மேற்படி பாடசாலையை மீள ஆரம்பிக்குமாறு இப்பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் கடந்த பல வருடங்களாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்து வந்தமை தெரிந்ததே. (எ-16)

## ஜயந்தி தின விழா

யாழ்ப்பாணம்,டிசெ.15

இலங்கையின் முதலாவது இந்து மத குரு பீடாதிபதி அருள்ஜோதி சிவஸ்ரீ கலாநிதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியாரின் 80 ஆவது ஜயந்தி தினவிழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மாவை ஆதீனகர்த்தா து.ஷண்முகநாதக்குருக்கள் தலைமையில் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அருளாசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும் ஆசியுரைகளை மு.பரமசாமிக்குருக்கள், இந்து மத குரு பீடாதிபதி ஐ.மகேஸ்வரக் குருக்கள் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். நிகழ்வில் ஜயந்தி மலர் வெளியீடும், ஆத்ம பஞ்சகம் ஒலி இறுவட்டு (CD) வெளியீடும் இடம்பெறவுள்ளன. மலரின் மதிப்புரையை நா.சர்வேஸ்வரக் குருக்கள் நிகழ்த்தவுள்ளார். (ஐ-10)

## அடிக்கல் நடும் வைபவம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபையின் பயிற்சிக கல்லூரிக்கும் அதனுடன் இணைந்த சிவலோகநாதக் குருக்கள் நூலகத்திற்கும் நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று முற்பகல் 11.30 மணிக்கு க.கிருபானந்தக் குருக்கள் தலைமையில் திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோயிலடியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு அடிக்கல்லினை நடவுள்ளனர். (ஐ-10)

## ஆசிரியர் ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.15

தீவகக் கல்வி வலயத்தில் ஆரம்பக் கல்வி, கணிதம், சித்திரம், சங்கீதம், வர்த்தகம், முறைசாராக் கல்வி, விசேட கல்வி வழிகாட்டலும் ஆலோசனைகளும், 2 ஆம் மொழி சிங்களம் ஆகிய பாடத்துறைகளுக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (எ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சோமசுந்தரம் சின்னமணி

இல.9/7, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம் என்ற முகவரியில் வசித்துவந்தவரான திருமதி சோமசுந்தரம் சின்னமணி அவர்கள் நேற்று (14.12.2002) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் (இளைப்பாறிய ஆய்வுகூட உதவியாளர், யாழ்.இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் மாலினிதேவி, சந்திரமோகன் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற கோடீஸ்வரன் மற்றும் மங்களேஸ்வரன் (லண்டன்), சிறீதரன், கமலேஸ்வரன், கௌசல்யாதேவி, சிவரஞ்சினி, ஜெயகௌரி ஆகியோரின் அருமைத் தாயாரும் இந்திராணி, கமலாதேவி, மகேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரியும் விமலேந்திரன், மீனா, வசுமதி (லண்டன்), தவமலர் (கனடா), விமலேஸ்வரன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் முரளிதரன், கிருஸ்ணப்பிரியா, கோபிநாத், தர்மிலா, ரதீசன், மதிவதனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2002) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.9/7, அன்னசத்திர ஒழுங்கை,*
*கந்தர்மடம்.* (11765)

தகவல்:
மக்கள், மருமக்கள்

## முத்தையா கந்தையா
*(ஓய்வுபெற்ற சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்)*

சிங்கராஜர் ஒழுங்கை, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா கந்தையா நேற்று (14-12-2002) சனிக் கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் இலட்சுமியின் அன்புக் கணவரும், அரியரட்ணம் (முன்னாள் பல்கலைக்கழக உத்தியோகத்தர்), விஜயரட்ணம் (பிராந்திய முகாமையாளர், அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்), கமலாதேவி (ஜேர்மனி), நகுலேஸ்வரி (லண்டன்), பஞ்சரட்ணம் (நில அளவையாளர்- திருகோணமலை), பரமேஸ்வரி (ஜேர்மனி), கனகரட்ணம் (ஜேர்மனி), இராசரட்ணம் (லண்டன்), மகேஸ்வரி, ஜீவரட்ணம் (பொறியியலாளர் - குவைத்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சௌந்தரி, ரஞ்சிதமலர், ஜெகதீஸ்வரன், செல்லத்துரை, கௌரி, லிங்கம், யூத்தா, வாசுகி, மகேந்திரன், பிரேமிலா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*சிங்கராஜர் ஒழுங்கை,*
*கல்வியங்காடு,*
*யாழ்ப்பாணம்.*
T.P:2223757 (11765)

தகவல்:
லயன் க.விஜயரட்ணம் (மகன்)
(பிராந்திய முகாமையாளர்
அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்)

## கிருஷ்ணபிள்ளை .செல்லத்துரை

அல்வாய் வடக்கு, மகாத்மா வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணபிள்ளை செல்லத்துரை 12.12.2002 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி விஸ்வலிங்கம் ஜெயராணி(கனடா) அவர்களின் அன்புத் தந்தையும் ஜெபிதா, கவிதா, விஜயப்பிரகாஷ், விதுஷின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-12-2002) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00மணிக்கு, அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மட இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*மகாத்மா வீதி,*
*அல்வாய் வடக்கு, அல்வாய்.* (11772)

தகவல்:-
க.வெற்றிவேல் (மைத்துனன்)

## பொன்னையா பத்மநாதன் *(சைவம்)*
*(காரைநகர்)*

காரைநகர், தங்கோடையைச் சேர்ந்த பொன்னையா பத்மநாதன் (சைவம்) அவர்கள் நேற்று(14.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - பார்பதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற டாக்டர் கணபதிப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகபூஷணி அம்மா அவர்களின் அன்புக் கணவரும் மகேந்திரன், பாலேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மேனகை, இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், பரதன், கவிதா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.12.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேம்படி,*
*காரைநகர்.* (11788)

தகவல்:
ப.மகேந்திரன்(ஞானம்ஸ்),
ப.பாலேந்திரன் (பிள்ளைகள்)

## ஆறுமுகம் பொன்னம்பலம் *(சேவியர்)*

காரைநகர், புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பரமு.ஆறுமுகம் பொன்னம்பலம் அவர்கள் (ஓய்வு பெற்ற இலங்கை நிலஅளவைத் திணைக்கள உதவி அத்தியட்சகர்) கடந்த 12-12-2002 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தம்பதிகளின் மகனும் (சம்பந்தர் கண்டி) நாகலிங்கம் தம்பதிகளின் மருமகனும் ஆவார். இவர் ராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பேராசிரியர் இரகுபதி (Utkal University, Orrisa - India), திருப்பதி (Telecom Govt of Canada), செந்தூர்பதி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், திலகமலர், சைலஜா, மீனாட்சி ஆகியோரின் அன்பு மாமனாரும், இளங்கோ, சித்திரச்சேயோன், லாவண்யா, வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னார் கணபதிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான கந்தையா, கனகசபாபதி, இராசம்மா, பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் குமாரசாமி(மலேசியா), சுந்தரராஜன் (ஓய்வுபெற்ற இலங்கை வியாபாரமட உத்தியோகத்தர், மாவிட்டபுரம்), சுந்தரலிங்கம்(சித்துப்பாத்தி, ஒட்டிசுட்டான்), குஞ்சிதபாதம்(கனடா), பாலகிருஷ்ணன் (புனர்வாழ்வு அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்), அமரர் திருமதி ஜெ.விஜயலட்சுமி(ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 14.12.2002இல் Ontario, Canada வில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**Canada**
**T.P. No:** 001416.7522545 (11783)

தகவல்:
நா.பாலகிருஷ்ணன்
சம்பந்தர்கண்டி, காரைநகர்.

### உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின்

# கல்வி ஆய்வுக் கருத்தரங்கு வைபவரீதியாக ஆரம்பம்

## இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று இடம்பெறும்

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடம் நடத்தும் 'கல்வி ஆய்வில் முழு உளக் காட்சி' என்ற தொனிப் பொருளிலான இரண்டு நாள் கருத்தரங்குத் தொடரின் முதல் நாள் நிகழ்வுகள் வைபவ ரீதியாக நேற்று ஆரம்பமாகின.

பதில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.இராசதுரை தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் யாழ்பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து வாழ்நாள் பேராசிரியர் வ.ஆறுமுகம் தலைமையில் ஆரம்பமான முதல் அமர்வில் கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் பீடத்தைச் சேர்ந்த தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலைய இயக்குநர் பேராசிரியர் லால் பெரேரா கருத்துரை வழங்கினார்.

யாழ்பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் இடம்பெற்ற இரண்டாம் அமர்வில் கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் பீடத்தைச் சேர்ந்த கல்வி உளவியல்துறைத் தலைவர் பேராசிரியர் ராஜ குணவர்த்தன கருத்துரை வழங்கினார்.

இந்தக் கருத்தரங்கில் முது கல்விமாணி, பண்பாட்டியல் முது கலைமாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா மாணவர்கள், யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்கள், யாழ. பல்கலைக்கழக ஏனைய துறை விரிவுரையாளர்கள் மற்றும் பீடாதிபதிகள், பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இரண்டாம் நாள் நிகழ்வின் முதல அமர்வுக்கு யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அசண்முகதாஸ் தலைமை வகிப்பார்.

கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் பீடத்தைச் சேர்ந்தவர்களான கலாநிதி டபிள்யூ.ஜீ.குலரட்ண, எச்.எம்.செனவிரத்ன ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் செல்வி வ.அரசரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இரண்டாவது அமர்வில் எச்.எம்.செனிவிரட்ண, கலாநிதி டபிள்யூ. ஜீ.குலரட்ண, பேராசிரியர் லால் பெரேரா ஆகிய மூவரும் இணைந்து கருத்துரை வழங்குவர்.

இந்தக் கருத்தரங்குக்கான இணைப்பாளராக கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ்.சந்திரசேகரம் கடமையாற்றி வருகின்றார்.

(எ-ரி-8)



யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடம் ஏற்பாடு செய்த 'சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான கல்வி' என்ற இலக்கிலான இரண்டு நாள் கருத்தரங்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று ஆரம்பமாகியது. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் முதல் அமர்வுக்குத் தலைமை வகித்த வாழ்நாள் பேராசிரியர் வ.ஆறுமுகம், கருத்துரை வழங்கிய கொழும்பு பல்கலைக் கழக கல்வியியற் பீடத்தைச்சேர்ந்த பேராசிரியர் லால் பெரேரா ஆகியோரை முறையே முதல் இரண்டு படங்களிலும் -

கருத்தரங்கில் கலந்துகொண்ட யாழ்.கல்விப்புலம் சார்ந்தோரை மூன்றாம், நான்காம் படங்களிலும் காணலாம்.

*(படங்கள்:- தேவராஜன்)*

# அச்சுவேலியில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீளஇயக்குக!

## வலயக் கல்விப்பணிப்பாளரிடம் கோரிக்கை

அச்சுவேலி,டிசெ.15

அச்சுவேலிப்பகுதியில் மூடப்பட்டிருக்கும் மூன்று பாடசாலைகளையும் மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அச்சுவேலி பிரதேச அபிவிருத்திக் குழு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அச்சுவேலிப்பகுதியில் 1995 ஆம ஆண்டுவரை 10 பாடசாலைகள் இயங்கி வந்தன என்றும் - பின்னர் 1995 ஆம் ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற இடம்பெயர்வு மற்றும் 1996 ஆம் ஆண்டு இடம்பெற்ற மீள் குடியமர்வை அடுத்து மூன்று பாடசாலைகள் மூடப்பட்டன என்றும் - கூறப்பட்டது.

வளலாய் அமெரிக்கன் மிசன் பாடசாலை, பத்தமேனி விபசி வித்தியாலயம், அச்சுவேலி வடக்கு றோமன கத்தோலிக்க பாடசாலை என்பனவே இவ்வாறு மூடப்பட்டுள்ள பாடசாலைகளாகும்.

வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை, பத்தமேனி விபசி வித்தியாலயம் ஆகிய இரண்டும் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்புக்களைக்கொண்ட பாடசாலைகள். அச்சுவேலி வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை தரம் 1 தொடக்கம் தரம் 5வரையான வகுப்புக்கள் கொண்டது.

மேற்படி மூன்று பாடசாலைகளும் குடாநாட்டிலிருந்து மக்கள் இடம்பெயரும்வரை செயற்பட்டு அந்தப்பிரதேச மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் பெரும்பங்களிப்புச் செய்த பாடசாலைகள் என அச்சுவேலி அபிவிருத்திக் குழு வலயக் கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை முற்றாக சேதமடைந்த நிலையில் பற்றைகள் மூடிய நிலையில் காணப்படுவதாகவும்-

பத்தமேனி விபசி வித்தியாலயம், அச்சுவேலி வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகியவற்றின கட்டடங்கள் சேதமடைந்த நிலையில் பராமரிப்பு இன்றியும் பாடசாலைச் சொத்துக்கள், கூரை ஓடுகள், மரங்கள் களவாடப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன என்றும்- அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-11)

## குடும்பஸ்தர் படுகாயம்

கைதடி,டிசெ.15

வளவைத் துப்புரவு செய்யும் நோக்குடன் அங்கிருந்த பெரிய கல் ஒன்றை ஆப்பு வைத்து அடிக்க முயன்ற ஒருவர் அது வேகமாகத் திரும்பித் தாக்கியதில் வலது காலில் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த இவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் கைதடி நவபுரத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னவன் மகாலிங்கம் (வயது 37) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார்.

(எ-75)

## புனர்வாழ்வு குறித்த ஆய்வுப் பட்டறை

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்மாவட்டத்தின் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான வரைபு தயாரித்தல் தொடர்பான ஆய்வுப் பட்டறை நாளை திங்கட்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் காலை 9.30 மணிமுதல் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

'யாழ்ப்பாணத் திட்டம் 2002' எனபடும் இந்த ஆய்வுப் பட்டறையில் செயலக அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர்கள், பல்கலைக்கழகப் பிரமுகர்கள், சமூக நலன் விரும்பிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-10)

# மானிப்பாய் வர்த்தகரின் மரணம்: சந்தேக நபர்கள் விளக்கமறியலில்!

வலிவடக்கு,டிசெ.15

மானிப்பாய் சந்தைக்கு அருகில் கிணற்றுக்கப்பியில் தூங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டவரின் மரணத்துக்கான சூத்திரதாரிகள் எனச் சந்தேகிக்கப்படும் இருவரை மானிப்பாய் பொலீஸார் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்தனர்.

இவர்களை இம்மாதம் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மானிப்பாய் சந்தையில் கடை நடத்தி வந்த வர்த்தகரான சிவலிங்கம் சிவகுமார் என்ற இளைஞனின் சடலம் கடந்த மே மாதத்தில் ஒரு நாள் கிணற்றுக்கப்பியில் தூங்கிய நிலையில் பொலீஸாரால் மீட்கப்பட்டது. இது தொடர்பான மரண விசாரணைகள் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் முடிவடைந்திருந்த நிலையில், யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பொலீஸாரின் மனுவின் பேரில் அங்கு மீள விசாரணைகள் இடம்பெற்றன. இதன் போதே இக்கொலையுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறி குமாரவேலு பத்மநாதன், கதிரவேலு புஸ்பகாந்தன் ஆகிய இருவரும் நீதிபதி முன் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(எ-9-86)

# கசிப்பு விற்ற வழக்கில் குற்றப்பணமாக ரூ.2 லட்சம்

கசிப்பு உற்பத்தி செய்தமை மற்றும் கசிப்பு வைத்திருந்தமை, விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பெயரில் கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றினால் குற்றப்பணமாக 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா விதிக்கப்பட்டது.

குற்றப்பணமாக விதிக்கப்பட்ட தொகையில் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா உடனடியாக நீதிமன்றத்தில செலுத்தப்பட்டது.

மல்லாகம் மாவட்ட பதில் நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்யப்பட்டவர்களுக்கே இத்தொகை தண்டப்பணமாக விதிக்கப்பட்டது.

அவர்களின் விவரம் வருமாறு:-

சுன்னாகம் மயிலங்காட்டைச் சேர்ந்த இராஜரட்ணம் அன்னலட்சுமி 15 ஆயிரம் ரூபா, புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்தவர்களான நாகமுத்து ரஞ்சன் 40 ஆயிரம் ரூபா, அருளப்பு ஜோசேப் 40 ஆயிரம் ரூபா, மயிலங்காட்டைச் சேர்ந்த சற்குணம் இந்திரா 20 ஆயிரம் ரூபா, புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த இராசேந்திரம் அகிலன் 30 ஆயிரம் ரூபா, குப்பிளானைச் சேர்ந்த ஜெயம் நாகேஸ 8 ஆயிரம் ரூபா, உடுவிலைச் சேர்ந்த நவரட்ணம் 20 ஆயிரம் ரூபா, புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த மகேந்திரன் மல்லிகாதேவி 15 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணமாக செலுத்த வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு பெரும் தொகைப்பணம் தண்டனையாக ஒரே நாளில் மேற்படி நீதிமன்றத்தில் விதிக்கப்பட்டது இதுவே முதல் தடவை எனக் கூறப்பட்டது.

ஏற்கனவே கசிப்பு உற்பத்தி, விற்பனையில் ஈடுபட்டமை போன்ற காரணங்களுக்காக தண்டனை விதிக்கப்பட்டவர்களும் இதில் அடங்குகின்றனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

(எ-86)

# பலாலி அம்மன் ஆலயத்தில் பூசை,வழிபாடுகள் ஆரம்பம்

அச்சுவேலி,டிசெ.15

பலாலி கிழக்கு இராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தினசரி பூசை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினரிடம் முன்அனுமதி பெற்றவர்கள் பூசை வழிபாடுகளில் கலந்துகொள்கின்றனர்.

பலாலி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாகிகள் மேற்கொண்ட முயற்சியை அடுத்து இராணுவத்தினர் அனுமதியுடன் தினசரி பூசை வழிபாடுகள் நடைபெற்று வருவதாக கழகத் தலைவர் எஸ்.கந்தையா தெரிவித்துள்ளார்.

பூசை வழிபாடுகளில் கலந்து கொள்ள விரும்பும் பலாலியைச் சொந்த முகவரியாகக் கொண்ட குடும்பத்தினர் தமது விவரங்களை அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக பலாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்து அதற்கான முன்அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

(எ-11)

## அகதி முகாமினுள் வெள்ளம் புகுந்தது

அராலி,டிசெ.15

அண்மையில் பெய்த கடும்மழை யால் சுழிபுரம் கப்பனை இடம்பெயர்ந் தோர் முகாமினுள் வெள்ளம் புகுந்தது. இதனால் அங்கு தங்கியிருந்த மக் கள் அருகிலுள்ள தென்னிந்திய திருச சபை சிறுவர் பாடசாலை மற்றும் வாசிகசாலை கட்டடங்களில் தற் காலிகமாக தஞ்சம் புகுந்துள்ளனர்.

காட்டுப்புலம் பகுதியிலிருந்து 11 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந் தவர்களே மேற்படி முகாமில் தங்கி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)


## கடற்கல வெற்றிடங்கள் - டுபாய்

| இல. | பதவி | | சம்பளம் |
|---|---|---|---|
| 01. | கடற்கல மெக்கானிக் (Marine Mechanics) | 50 | 1000 DHS |
| 02. | கடற்கல மின்னியலாளர் (Marine Electrician) | 50 | 1000 DHS |
| 03. | உருக்கி இணைப்பவர் (Welders) (6G, 4G, X-Ray, TIG) உருக்கி இணைப்பு அனுபவம் | 50 | 700 DHS |
| 04. | சான்ட் பிளாஸ்ரர்கள் பெயின்ரர்கள் (Sand Plasters & Painters) எயர்லெஸ் ஸ்பிறே மற்றும் கடற்கலத்துறை அனுபவம் | 50 | 800 DHS |
| 05. | உருக்கில் கட்டி இணைப்பவர்கள் (Steel Fabricators) | 50 | 800 DHS |
| 06. | தாங்கி கிளினர்கள் (Tank Cleaners) | 25 | 450 DHS |

பணிக்கள நிபந்தனைகள்:

இலவச உணவு, மருத்துவ வசதி, தங்குமிடம், ஒரு வழி விமானச் சீட்டு என்பவற்றுடன் 2 வருட ஒப்பந்த காலம் அனுமதிக்கப்படும். அத்துடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டின் தொழிற்சட்டங்களுக்கு அமைவான சலுகைகள் வழங்கப்படும். கடவுச்சீட்டு, மூன்று போட்டோ பிரதிகள், அனுபவத்தை குறித்துக்காட்டும் சான்றிதழ்கள் என்பவற்றுடன் சமுகமளிக்கவும்.

ஓரியன்ற் லிங்க் (தனி) நிறுவனம்

இல.12, டிக்ஸியோட் றோட்,
(பம்பலப்பிட்டி தொடர் மாடிக்கு எதிராக
பான் ஏசியா வங்கிக்கு அடுத்ததாக)
கொழும்பு - 4.
தொலைபேசி: 01-505669

உரிம இலக்கம்: 1176 (சி-25408) அங்கீகாரம் இல. AL/1176/ADVT/02


## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

நல்லூர்,டிசெ.15

வலிகாமம் கிழக்குப் பகுதி முன் பள்ளி ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந் துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வலி.கிழக்கு முன் பள்ளி ஆசிரியர் சங்கச் செயலாளர் வெ.அமிர்தாம்பிகை கேட்டுள்ளார்.

(ஐ-ரி)

## ஓட்டோ சாரதி தலையில் படுகாயம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

நீண்டநாள்களாக இருந்து வந்த பகை இரும்புக்கம்பி அடியில் முடிந் தது. அடிக்கிலக்காகி ஒருவர் தலை யில் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் பிரதான வீதிப்பகுதி யில் நேற்றுக்காலை இடம்பெற்ற இச சம்பவத்தில் ஓட்டோச்சாரதியான கல்வி யங்காட்டை சேர்ந்த ஆறுமுகம் கார் வண்ணன்(வயது 35) என்பவரே படு காயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

ஓட்டோ வாடகைக்கு செலுத்தும் இவர் வழமையான இடத்தில் (தரிப் பிடத்தில்)ஓட்டோவை நிறுத்திவிட்டு அதனுள் இருந்தபோதே தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-15-88)

## வீர தீரச் செயல் ஒத்திவைப்பு

கைதடி,டிசெ.15

கைதடி தெற்கு சனசமூக நிலை யத்தின் கட்டட நிதிக்கென இன்று நடைபெறவிருந்த வீரதீரச் செயல் கள் நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத் தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வும் -

நிகழ்வு இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - நிலையச் செயலாளர் அறிவித்துள் ளார்.

(எ-75)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 12 - 04 - 1916

விண்ணில் 15 - 11 - 2002

### அமரர் தம்பிப்பிள்ளை சபாரட்ணம்

*அன்புக்கோர் அகிலனாய் பண்புக்கோர் இலக்கணமாய்*
*அவனியில் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!*
*முப்பத்தொரு நாளும் ஆயிறறோ முழு நிலவு மறைந்து!*
*எப்போதும் உங்கள் முகம் எம்முன்னே தோன்றுதப்பா!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக! ஓம் சாந்தி!*

*20, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.* (11797) பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 09 - 07 - 1950

இறப்பு 14 - 12 - 2002

### அமரர் சின்னக்குட்டி துரைசிங்கம்

அன்புக்கோர் அணிகலமாய், பண்புக்கோர் இருப்பிடமாய்த் திகழ்ந்த அமரர் சின்னக்குட்டி துரைசிங்கம் அவர்களுக்கு எமது கண்ணீர்க் காணிக்கை.

இவரது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.* சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.ச. பணிப்பாளர், பணியாளர், அங்கத்தவர்கள். (11799)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

(15-11-2002 இல் லொறி விபத்திற்குள்ளாகியவர்)



உறவுகள் மகிழ 12-10-1995

உறவுகள் தவிக்க 15-11-2002

### செல்வன் வைகுந்தநாதன் அர்ஜன்

### (அர்ச்சுனன்)

தரம் 2 மாணவன்
(யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை),
(யாழ்.கல்வி நிலையம் - ஆறுகால்மடம்)

பாசமுள்ள அர்ச்சுனனே! நீ அறிவின் சிகரமடா! பேரழகனடா!
பொழுது புலருமுன் துயிலெழுந்து பொழுது சாய்ந்தாலும் உறக்கங் கொள்ளாயடா!
உறக்கத்திற்குச் செல்லும் வரை நீ காட்டிடும் லீலைகள் ஒன்றா இரண்டா?
அவற்றை வடித்திட வார்த்தைகளோ நம் அகராதியில் இல்லையடா.

வில்வித்தையின் சிறந்தவன் விஜயன் என்று சொன்னால் இல்லையில்லை நான்தான் என்பாய்!
விளையாடாதே படியடா என்று சொன்னால் உன் பால் வடியும் வாயால்
காலை எழுந்தவுடன் படிப்பு மாலையில் விளையாட்டு என்று (பாரதியின் பாடலை) பாடிக்காட்டிடுவாய்!
5 இல் 3 போனால் எத்தனை என்று கேட்டால் 'பாபா' என்று விரல் பிடித்துக் காட்டிடுவாய்!

காலையில் இணுவைப் பரராசசேகரப் பிள்ளையார் கோயில் அபிஷேகம் முடித்து வந்தாய்!
மாலையில் யாழ்.கல்வி நிலையமதில் 3 ஆம் தவணைப் பரீட்சை எழுதி 99 புள்ளி பெற்று வந்தாய்!
லெவின் ஸ்ரார் மைதானத்தில் கிரிக்கெட் பார்த்திருந்த வேளையில் வீதியில் அண்ணனைக் கண்டு ஓடி வந்தாய்!
லொறி வடிவில் வந்திட்ட காலனுடன் செல்லுமிட முகவரியை தருவதற்கும் அவகாசமின்றிச் சென்று விட்டாய்!

அண்ணா! என்று நீ ஓடிவரும் வேளையிலே அண்ணனவன் உனைக் கண்டிருந்தால்
அவன் தன்னுயிர் மாய்த்தேனும் நின்னுயிர் காத்திருப்பான்! காலனவன் செய்திட்ட சதியினைப்பார்!
அண்ணன் கண்ணில் தம்பி நீ அகப்படவில்லையடா உன்கண்ணில் லொறியும் அகப்படவில்லையடா!
கண்ணிமைக்கும் நேரத்திற்குள் அந்தப் பரராச சேகரனும் கண்மூடி இருந்திட்டான்!

உன் ஆத்மா என்றும் அமைதிபெற்று வாழட்டும்! இதற்காக நாம் இறைவனை இறைஞ்சவில்லை!
ஏனெனில் இறைவன் என்று ஒருவன் இருந்திருந்தால் லொறிவடிவில் வந்த அவலமதை நிச்சயம் போக்கிருப்பான்
எத்தனையோ கனிந்த பழம் விழுகின்ற நிலையில் எம் அயலில் இருந்திட்ட போதிலும்
அவற்றைப் பறிக்காது பிஞ்சு உன்னைக் காலனவன் பறித்துச் சென்ற லீலை தான் என்னவோ?

சிவனுக்கு முருகன் உபதேசம் செய்தது போல் எமக்கெல்லாம் நீ அறிவுரை கூறியிருந்தாய்
உனது குறும்புச் செயல்களையெல்லாம் எம் மனதில் பசுமரத்தாணி போல் பதித்து விட்டாய்
உன்னைத் தேடி வந்திட நீ சென்றிட்ட முகவரியை அறிந்திடாது துடிக்கின்றோம்!
உன் திருவடி சேரும்வரை உன்நினைவால் உருகி உருகி நாள்களைக் கழிக்கின்றோம்.

*பொன்னையாலேன், ஆனைக்கோட்டை.* (11794)

என்றும் உன் பாசமுள்ள அண்ணன் சுபநாதன், மற்றும் பாசமுள்ள உறவுகள்.

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

விதையாய்
1929
07
24



வீத்தாய்
1993
11
25

## அமரர் சின்னத்தம்பி சந்திரசேகரம்

*(ஓய்வுபெற்ற P.W.D. ஓவசியர், R.M.C.R.D.A.)*

எங்கள் குலவிளக்கே! ஊருக்கு ஒரு நிழலாக வாழ்ந்த,
நிறைகுணக் குன்றே! எங்களை உங்கள்
பூதவுடல் விட்டுப்பிரிந்து ஆண்டுகள் ஒன்பது
கடந்தென்ன? எம்முள் நாமாய் எம்
உயிருள் உயிராய்க் கலந்து நின்று இன்றும்
எம்மை வழிநடத்துகின்றீர்கள்! உங்கள்
ஆன்மீக நெறியில், சால்பு நெறியில் நிதானமாக
ஒவ்வோர் அடியையும் வைத்து முன்நகர்கின்றோம்
உங்கள் ஒளி எம்மில் என்றும் மங்காதிருக்க
இணுவில் செகராச சேகர விநாயகனை வேண்டிநிற்கின்றோம்.

*"அன்பகம்",*
*இணுவில் மேற்கு, இணுவில்.*

- குடும்பத்தினர்.

(11763)

# துயர் பகிர்ந்தோருக்கு நன்றி

## செல்வி தமிழினி வீரசிங்கம் B.Sc.

எங்கள் முதல் மகள், தமிழாய் இனித்த எங்கள் செல்வம், கல்வியால், கலையால் உயர்ந்த கலைச் செல்வி, திரும்பக் கிடைக்காத எங்கள் மாமணி **செல்வி தமிழினி** என்ற எங்கள் தவக்கொழுந்து, கடந்த 23.11.2002இல் எம்மைவிட்டு, இந்த உலகத்தைவிட்டே பிரிந்துவிட்ட ஆறாத்துயரக்கடலில் நாங்கள் கரைதெரியாமல் தத்தளித்தவேளையில் ஓடோடிவந்து வேண்டிய உதவிகளைச் செய்த எம் உடன்பிறவாச் சகோ தரர்களாகிய அயலவர் ஜெயக்குமார், பிரேம்குமார் சகோதரர்களும் அந் தனிஸ் - திரு.தங்கத்துரை அவர்களும், HUEGIN GROUP உரிமை யாளர் சஞ்சீவ்மோகன் அவர்களும், நியாஸ் அவர்களும் குடும்பத்தினர் களும் என்றும் எம் அன்புக்கும் பெருநன்றிக்கும் உரியவர்கள்.

எமது குடும்ப நண்பர்கள் உறவோடு உறவான உற்றதுணைகள் "தினக்குரல்" அதிபர் குடும்பத்தினரும் நிர்வாகிகளும், BRIGHTEN-REST அதிபர் குடும்பத்தினரும் நிர்வாகிகளும், மகாராஜா FOOD PRODUCT அதிபர் குடும்பத்தினர் நிர்வாகிகளும் தந்த ஆதரவும் உதவிகளும் எம் துன்பச் சுமையைத் தூக்க உதவின. இவர்களுக்கு நன்றிகூற எம்மிடம் வார்த்தைகள் இல்லை. திருவாளர்கள் வரதர், தில்லைச்சிவன், மயூரகிரிநாதன், வேலணை வேணியன், சிவம் இன்டஸ்றீஸ் குடும்பத்தினர் கவிதையில் அஞ்சலிசெய்து எம் ஆறாத்துயரை ஆற்ற முயன்றனர்.

திருவாளர்கள் வரதர், சிவா நறுமணப்பூங்கா குருநாதசிவம், இராசமலர் களஞ்சியம் மலர் அக்கா 'உதயன்' பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி பிரசுரம்செய்து எம் கண்ணீரில் கலந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.விநாயகமூர்த்தி, திரு.கஜேந்திரகுமார், திரு.ராதாகிருஷ்ணன், திரு.யோகராஜன், நகரசபை உறுப்பினர்கள் திரு.குருசாமி, திரு.திருக்கேஸ் மற்றும் திருமதி குமார்பொன்னம்பலம் முதலியோர் எம் துயரில் பங்குகொண்டு ஆறுதல்கூறியமை எம் நெஞ்சை நெகிழவைத்தது.

கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் அரசினர் தமிழ் வித்தியாலய புதிய, பழைய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், BRILLIANT TUTION CENTRE ஆசிரியர்கள், மாணவர்கள், சென்னை S.R.M. விஞ்ஞான கலைக் கல்லூரி மாணவர்கள், கொழும்பு விவேகானந்தசபை நிர்வாகத்தினர், நடனப்பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள், நடன ஆசிரியர்கள், SINGAPORE - INFORMATICS ஆசிரியர்கள், மாணவர்கள், நில் -கமால் TEXT - CENTRICE TECHNOLOGIES, EAP - TECHNOLOGIES அலுவலர்கள், ஸ்ரீநாராயண குருசமாசம், கொட்டாஞ் சேனை கல்லூரி வீதி முச்சக்கரவண்டி உறுப்பினர்கள், கொட்டாஞ்சேனை பொலீஸார், கொழும்பு தமிழ்ச் சங்கம், கம்பன் கழகத்தலைவர்களும் நிர்வாகிகளும், கனடா தமிழன் வழிகாட்டி, செந்திகொழும்பு முத்தமிழ் மன்றச் செயலாளர் கம்பளைதாசனும் நிர்வாகிகளும், தமிழ் இளைஞர் கலாசாரபேரவை இராசரத்தினமும் நிர்வாகத்தினரும், வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கம், வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம், திராவிட கழகத் தலைவர் திரு.வீரமணி அவர்கள், செய்திவெளியிட்ட சென்னை விடுதலைப் பத்திரிகை, சென்னை மணவைத்தம்பி குடும்பத் தினர், புகழேந்தி குடும்பத்தினர், உள்நாட்டு வெளிநாட்டுச் செய்தி ஊடகங்கள், வெளிநாட்டிலிருந்து வருகைதந்த உறவினர்கள், தொலைபேசி, தொலைநகல் (FAX) மூலம் அனுதாபந் தெரிவித்தோர், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர், இறுதிக்கடமைகளை வழிநடத்திச் செய்வித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எம் நெஞ்சுநெகிழ்ந்த நன்றிகளைக் கண்ணீருடன் கலந்து கரம்கூப்பிச் சொல்லுகின்றோம்.

*பெற்றோர்:*

**வேலணை நா.வீரசிங்கம்** (BROWNSON INDUSTRIES) -
*திருமதி வீ.அன்னலட்சுமி*

*சகோதரர்கள்:*

**குறளரசு** (AERONAUTICAL Eng.), **வேழவேந்தன்** (TELECOM Eng.), **ஈழகாந்தன்** (MECHANICAL Eng.), **இளங்கோவன்** (SOFT WARE Eng.), **இளவரசி** (A-SOFT WARE Eng.)

**மற்றும் உயிருக்குயிரான உறவுகளும் நண்பர்களும்.**

*8/1, கல்லூரி வீதி,*
*கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13.*
*"தமிழ்மனை", வேலணை - 05.*

தொலைபேசி இல.: 437097, 339984

(C/25406)

## நல்லிணக்க குழுக்கள்

சாவகச்சேரி,டிசெ.15

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமசேவை அலுவலர் பிரிவுகள்தோறும் நல்லிணக்கக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

இக்குழுவினர் கிராமங்கள் தோறும் தேவைகளை அறிந்து அபிவிருத்திகளை முன்னெடுக்கும் பணியில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஜ-31)

## பரிபாலனசபை புனரமைப்பு

அரியாலை,டிசெ.15

ஈச்சமோட்டை, கலட்டிப்புலம் ஞானவைரவர் தேவஸ்தானத்தின் பரிபாலனசபை புனரமைப்பட்டுள்ளது.

அண்மையில் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பரிபாலனசபை புனரமைக்கப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது.

(ஜ-17)

## விடைத்தாள் மதிப்பிடும் பணி

கொழும்பு,டிசெ.15

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் விடைத்தாள்கள் மதிப்பிடும் பணிகள் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஜனவரி 5ஆம் திகதிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்டோர் தோற்றிய இந்தப் பரீட்சையின் பெறுபேறு இன்னும் மூன்று மாத காலத்தினுள் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஜ-12)

## தேவை

லாண்ட் மாஸ்ரர் செலுத்தக்கூடிய அனுபவமுள்ள, கண்ணியமான ஒருவர் உடன்தேவை. சம்பளம் நேரில் பேசி முடிவுசெய்யலாம்.

*தொடர்பு:* 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(11776)

## கணனி வகுப்புகள்

O/L பரீட்சை எழுதிமுடித்த மாணவர்களுக்கான விசேஷ கணனி வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

*தொடர்பு:*
சென்.ஆன்ஸ் சேச் முன்பாக,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

(11755)

## ஒத்திவைக்கப்பட்டுள்ளது

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் கட்டட நிதிக்காக இன்று (15.12.2002) ஞாயிறு நடைபெறவிருந்த வீரதீரச் செயல்கள் நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

- செயலாளர் -

(11784) கைதடி தெற்கு சனசமூக நிலையம்.

## விசேட சலுகை

யாழ்நகரிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் உங்கள் உற்றார், உறவினர்கள், அன்புச் சகோதரர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கு இன்றே நாடுங்கள். குறைந்த கட்டணத்தில் -

| | | |
|---|---|---|
| கனடா, அமெரிக்கா | - | 1 நிமிடம் 8/= |
| லண்டன், சுவிஸ் | - | 1 நிமிடம் 10/= |
| சிங்கப்பூர், மலேசியா | - | 1 நிமிடம் 10/= |
| மற்றும் நாடுகள் | - | 1 நிமிடம் 10/= |
| சவூதி, டுபாய், கட்டார் | - | 1 நிமிடம் 40/= |
| கையடக்கத்தொலைபேசி | - | 1 நிமிடம் 30/= |

**மேலும் விவரங்களுக்கு :-**

யாழ்நகரில்:

**கண்ணன் தொலைத்தொடர்பகம் (S.M.S.)**
புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.
T.P: 021222-5232

**மணியம் தொலைத்தொடர்பகம்**
92A, சிறி கதிரேசன் வீதி,
கொழும்பு - 13.
T.P: 074-610445,
074-610446

விசேடமாகத் தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு எம்மிடம் தொடர்புகொள்ளலாம்.

(11759)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் திலகவதி

உரும்பிராய் தெற்கு, சிவகுல வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் திலகவதி (13.12.2002) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் (கோப்பாய்) அன்பு மனைவியும் பொன்னையாவின் (கனடா) அன்புச் சகோதரியும் தனபாக்கியம் (கனடா), புனிதவதி (உரும்பிராய்), மகேஸ்வரன் (நிலஅளவையாளர், டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகசபாபதி (கனடா), தவராசா (உரும்பிராய்), அருணா (டென் மார்க்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கனடாவிலுள்ள வியா சன், நந்தன், யசோதா, சாருமதி, சுஜாதா (ஜேர்மனி), குறிஞ்சிக் குமரன் (மொறட்டுவ பல்கலைக்கழகம், பொறியியல் மாணவன்), காந்திகா (பழைய மாணவி, வடமராட்சி மத்திய மகாவித்தி யாலயம்), மாதுரி, பிரசன்னா, மதுரா ஆகியோரின் அன்புப் பேர்த்தி யும் நிலா, லக்ஸ்மி, நிகிதா, யோகான், ஜெயந் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*இ.தவராசா (மருமகன்),*
*த.புனிதவதி (மகள்).*

*பலாலி வீதி,*
*உரும்பிராய் தெற்கு.*

(11762)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும்

## நினைவு முன்பள்ளித் திறப்புவிழாவும்



## செல்வி விக்கினேஸ்வரன் திவ்யா

பிறப்பு 25-09-1986

ஏகாதசி 15.12.2002

இறப்பு 07-12.2000

கண்ணே திவ்யா!
நீ மறையவில்லை
மாதாவின் கருவறை நீங்கி
மண்ணின் கருவறையில் வளர்ந்தாலும்
மீண்டும் உன் பிறப்பிற்காய்
கண்ணீர் மல்கக் காத்திருக்கின்றோம்.

செல்வி வி.திவ்யா அவர்களின் நினைவாக இன்று காலை 9.21மணிமுதல் 10.51மணிவரை வரும் நல்வேளையில் முன்பள்ளி கட்டடத் திறப்புவிழா நடைபெறுகின்றது. இந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ஏழாலை வடக்கு, ஏழாலை.*

அன்பு அப்பா, அம்மா, அண்ணன்மார்.

(11757)

## நத்தார் ,புதுவருடத்திற்கான சிறப்பு தள்ளுபடியில் Computer விற்பனை

AMD 950 Mhz
Gigabyte Mother Board
32MB VGA / 32Bit Sound
128 MB Memory
20.0 GB Hard Disk
1.44MB Floppy Drive
ATX P4 Tower Casing
Key Board & Mouse
440W Speaker


**29,500/= மட்டும்**

**ஒரு வருட உத்தரவாதம்**

- கையிருப்பில் இருக்கும் வரை மட்டுமே...
- இலகு கொடுப்பனவு வசதிகள்
- விரைவான விற்பனைக்குப் பிந்திய சேவை

**FREE**
உங்கள் தேவைக்கேற்ப அனைத்து software களும் Install செய்து தரப்படும்.

Programe எழுதுவதற்கு, Packegeas படிப்பதற்கு
Multimedia படங்கள், பாடல்கள்
InterNet,E-Mail பார்ப்பதற்கு
New Software போடுவதற்கு
இன்னும் பல...
Game விளையாடுவதற்கு



இவ் வருடத்திற்கான இறுதிச் சலுகை தவறவிடாதீர்கள்

எமது மேலதிக சேவைகள்

SALES :- Computer, Accessories, Printers, Scanners
UPS , Photocopier, & All Other Electronic Equipments
REPAIRS & MAINTENANCE :-
Installations, Network Maintenance,
Computer repairs & Upgrading
SOFTWARE DEVELOPING :-
Financial, Communication, Multimedia
& Web Designing

**SDS Computer Services**
No 178(114), Arasady Road , Kandarmadam Jaffna
Hotline : 077- 7726292 Tel : 021 - 2223251


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**வளர்மதி கல்விக் கழகம் - மட்டுவில் தெற்கு**

எமது கல்விக் கழகத்தில் கல்வி பயின்று 2002ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன்

**செல்வன் சின்னத்துரை தனுசனை**யும்

இவரோடு சித்திக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (11754) ***வளர்மதி கல்விக்கழகம்.***


## CHRISTMAS NEW YEAR SALE

நத்தார் - புதுவருடத்தை முன்னிட்டு
05.12.2002 முதல் 31.12.2002 வரை
சகல ஆடைத் தெரிவுகளுக்கும்
**விசேட கழிவு வழங்கப்படும்**

*குறிப்பு:- நத்தார் - புதுவருடத்தை முன்னிட்டு இன்று (15.12.2002) ஞாயிறு முழுநேரமும் விற்பனை நடைபெறும்*

(R-25410)

**லைடன் புடைவை நிலையம்**
(பஸ் நிலையம் முன்பாக)
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 2381


## 31 ஆம் நாள் நினைவில்...

தோற்றம் 07 - 12 - 1927



மறைவு 15 - 11 - 2002

சரவணையூர்

**அமரர் கந்தையா விசுவலிங்கம்**

(பொதுச் சுகாதார பரிசோதகர் - **PHI**)

இன்று (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

456, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி அமிர்தசுரபி விசுவலிங்கம்
*(மனைவி)*

(11778)


NEW SCIENCE HALL - NEW SCIENCE HALL - NEW SCIENCE HALL - NEW SCIENCE HALL

# NEW SCIENCE HALL

**கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.**

# 2005 A/L

**கணித, உயிரியல் பிரிவு**

(11790)

**எமது வழமையான ஆசிரியர் குழு**

**ஆரம்பம்: 19-12-2002**

***வியாழன் காலை 8.30 மணி***

NEW SCIENCE HALL - NEW SCIENCE HALL - NEW SCIENCE HALL - NEW SCIENCE HALL

# அர்த்தமற்ற யுத்தமா?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தது. 1946ஆம் ஆண்டிலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் முன்வைக்கப்பட்டன. தமிழ்த் தலைவர்கள், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள், கல்வி, மொழி, கலாசாரம் எனபன அங்கீகரிக்கப்படவேண்டும் என்றனர். இக்கோரிக்கைகள் அப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஆனால், 1956ஆம் ஆண்டில் பண்டாரநாயக்காவினால் ஏற்படுத்தப்பட்ட தனிச்சிங்களச் சட்டம் டி.எஸ். சேனநாயக்காவின் திட்டங்களை தூக்கி எறிந்துவிட்டது.

பின்பு தமிழ் மொழிக்கும் அரச கருமமொழி அந்தஸ்து என்று கூறப்பட்டது. அதைத் தொடர்ந்து மாவட்ட அபிவிருத்திச் சபைகள் ஏற்படுத்தப்பட்டபோதும் அதற்கான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.

தமிழ்த் தலைவர்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்தனர். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளும் சிங்களத் தலைவர்களையும் அரசாங்கத்தையும் நாடாளுமன்றத்தையும் நம்பத் தயாராக இல்லை.

இதன் எதிரொலியாகவே கடந்த 19வருடகால யுத்தம் நாட்டை அதல பாதாளத்திற்கு தள்ளிவிட்டது.

இப்படியான ஒரு நிலையிலேயே நாம மக்கள் முன் சென்றோம். கத்தியின்றி இரத்தமின்றி சமாதானத்தை ஏற்படுத்த மக்கள் ஆணை வழங்கினர்.

மக்களின் ஆணையின் பேரிலேயே நான் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்தேன். அப்போது இதனைப் பலரும் எதிர்த்தனர்; என்மீது குற்றஞ்சுமத்தினர்.

ஆனால் இன்று அதன் பலனைக் கண்டு வியக்கின்றனர். தமிழ், சிங்கள மக்கள் அமைதியாக வாழ்கின்றனர். குண்டுவெடிப்புக்கள் ஓய்ந்துவிட்டன.

புலிகளின் மீதான தடையை நீக்கியபோது காட்டுக்கூச்சல் போட்டார்கள். உலக நாடுகளின் எதிர்ப்பை எதிர்கொள்ளவேண்டுமென்று அச்சுறுத்தினார்கள். ஆனால், இதற்கு நேர்மாறாக இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் வளர்ச்சி அடைந்த நாடுகள் இலங்கையின் அபிவிருத்திக்கு உதவ முன்வந்துள்ளன.

தனிநாட்டை தவிர வேறு தீர்வு இல்லையென்ற புலிகளின் அரசியல ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டோம் என்று வெளிப்படையாகக் கூறினார். இதே கருத்தை புலிகளின் தலைவர் பிரபாகரனும் மாவீரர் தின உரையில் வலியுறுத்தியுள்ளார்.

முன்பு உலக நாடுகளில் இலங்கைக்கு உதவி வழங்கவேண்டாம் என்று ஆர்ப்பாட்டம் செய்த புலிகள் இன்று எம்முடன் சேர்ந்து உதவி கேட்கின்றனர். இது ஒரு பாரிய திருப்பமாகும்.

அன்று டி.எஸ்.சேனநாயக்காவினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளை நீண்டகாலத்தின் பின் இப்போது நடைமுறைப்படுத்தும் பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பிரச்சினைகளை மறந்து தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாக இருக்கின்றனர்.

**ஈ.பி.டி.பி. விவகாரம்**

இது ஓர் அரிய சந்தர்ப்பம் இதைப் பயன்படுத்தி இரண்டாக பிரிந்திருந்த நாட்டை ஒன்றாக்குவோம். ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து இன மக்களும் சமத்துவத்துடன் வாழ வழிசெய்வோம்.

அதேவேளை வடக்கில் புலிகளுக்கும் ஈ.பி.டி.பியினருக்கும் கருத்து மோதல்கள் காணப்படுகின்றன. இவற்றை ஆயுதமின்றி சமாதானமான முறையில் தீர்த்துக்கொள்ள இரு சாராரும் முன்வரவேண்டும்.

சமாதான பேச்சுக்கள் பல நன்மை

(18ஆம் பக்கம் பார்க்க)


## நன்றி தெரிவிப்பு

11.12.2002 அன்று முகமாலையிலிருந்து யாழ்.வந்த பஸ்ஸில் என்னால் தவறவிடப்பட்ட பிரயாணப்பையை கண்டெடுத்து மீண்டும் எனக்கு கிடைக்க செய்தமைக்காக 30-4070 இலக்க பஸ் உரிமையாளரிற்கும், சிற்றூர்தி சங்கத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(11815) *பிரயாணப்பை உரிமையாளர்*



**லக்சுமி** இணுவில்.

சூர்யா, லைலா, ஸ்நேகா நடித்த

**உன்னை நினைத்து** (ரீல்ஸ்)

காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (11740)



**ராஜா** யாழ்ப்பாணம்.

சில தினங்கள் மட்டும்

அஜித் (இருவேடங்களில்), மீனா நடித்த





**வில்லன்** (ரீல்ஸ்)

கா.நே.: 10.30, 2.30, 6.30 (C/25290)



சங்கானை

முரளி, பிரதியுக்ஷா, மனோஜ், உமா நடித்த

17 ஆம் திகதி முதல் AIR FORSE ONE

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00, (பு.நே) (C/25291)



**நாகம்ஸ்** சுன்னாகம்

இன்று முதல் குதூகல ஆரம்பம்

விஜய், கௌசல்யா, சூர்யா, மணிவண்ணன் நடித்த

**நேருக்கு நேர்** (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 3.00

விசேட காட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (பு.நே.) (11850)



## பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு பரிகாரம் தேடல்

சம்பளமற்ற லீவில் வெளிநாடு சென்று ஆசிரியர் உள்ளீர்ப்பில் பாதிக்கப்பட்ட அங்கத்தவர்களான ஆசிரியர்கள் அக்காலத்திற்கான சம்பள ஏற்றங்கள், நிலுவைகள் பெறாத ஆசிரியர்கள் 15.12.2002 அன்று கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், 16.12.2002 வேம்படி மகளிர் கல்லூரியிலும் மு.ப. 10.00 - பி.ப. 2.00 மணிக்குள் சமுகந்தந்து விவரங்களைத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*கே.கே.எஸ்.வீதி,*
*கொக்குவில் சந்தி,*
*கொக்குவில்.* (11809)

அ.பாலசந்திரன்.
இலங்கை ஆசிரியர் சங்க
யாழ்.மாவட்டச் செயலாளர்.



## பாதிக்கப்பட்ட மாணவர்களின் கவனத்திற்கு

**யாழ்.கல்வியியற் கல்லூரியின் 2003ஆம் ஆண்டு அனுமதிக்காக நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்து நாடகம் அரங்கியல் என்னும் பாடத்தில் தெரிவுசெய்யப்படாதுள்ள மாணவர்கள் அனைவரையும் நாளை (16.12.2002) திங்கட்கிழமை தமிழீழ சர்வதேச மாணவர் பேரவையில் காலை 10.00 மணியளவில் ஒன்று கூடும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.**

(11812) *- பாதிக்கப்பட்ட மாணவர்கள்.*





இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதி

## அருள்ஜோதி கலாநிதி சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்

அவர்களின்

## 60ஆவது ஜயந்தி தின விழா

**விழாவில் ஜயந்தி மலர் வெளியீடும் சாம்பசிவதாசன் சிவஸ்ரீ சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சாரியார் அவர்களின் உருவாக்கத்தில் வெளிவரும் "ஆத்ம பஞ்சகம்" என்னும் CD இறுவெட்டு இலங்கையில் முதன் முதலாக மந்திர CD வெளியிடுவது குறிப்பிடத்தக்கது.**

| | |
|---|---|
| காலம் | :இன்று (15.12.2002) ஞாயிறு பிற்பகல் 2.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை. |
| இடம் | :நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் |
| தலைவர் | :மஹாராஜஸ்ரீ து.ஷண்முகநாதக் குருக்கள் *(மாவை ஆதீனம்)* |
| மங்கள இசை | : வேதபாராயணம் |
| ஆசியுரை | : ☆வித்யாசாகரன் மு.பரமசாமிக் குருக்கள் ☆வடகோவை *(கோப்பாய்)* ☆இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள் *(சுதுமலை அம்மன் கோவில்)* ☆வைதீக சிரோன்மணி சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் *(சித்தி விநாயகர் ஆலயம், அரியாலை)* |
| வரவேற்புரை | : சிவாகம கிரியாரத்தினம் சிவஸ்ரீ சிவ நித்தியானந்தக்குருக்கள் *(முருகமூர்த்திகோவில் சங்கானை)* |
| மதிப்புரை | : சகலாகம சங்கிரகர் சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் *(கதிரமலை சுன்னாகம்)* |
| சிறப்புரை | : பேராசிரியர் பிரமஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் *(யாழ்.பல்கலை. வளாகம்)* விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ ஸ்ரீகிருஷ்ணானந்த சர்மா *(இந்து நாகரிகத்துறை யாழ்.பல்கலைக்கழக வளாகம்)* திரு.சி.சத்திக்கிரீவன் *(இந்து சமயப் பேரவை - செயலாளர்)* |
| பாராட்டுரை | : 1.சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் 2.சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் 3.பிரம்மஸ்ரீ ந.சதாசிவ ஐயர் *(நியந்த்ரீ)* |
| நன்றியுரை | : கலாநிதி சிவஸ்ரீ சாம் ஷண்முகநாதக் குருக்கள் *(லண்டன்)* |

குறிப்பு:- இந்த விழாவில் குருபீடாதிபதியின் ஜயந்திதின நினைவாக சமய, சமூக, கலைப் பணி செய்து, வளர்ந்து வரும் சிவாச்சாரியார்கள், கலைஞர்கள், சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

அனைவரும் வருகைதந்து குருவருள் பெற்று இந்த விழாவுக்கு ஆதரவை நல்கும்படி அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

கலாநிதி சாம் ஷண்முகநாதக்குருக்கள (லண்டன்)
சிவ நித்தியானந்தக் குருக்கள் (சாங்கானை)
துரை மணிவண்ணக் குருக்கள (மலேஷியா)
சாம் ஜெகதீஸ்வரக் குருக்கள (நாயன்மார்கட்டு)

(11813)



**Sri Lanka Festival of Music, Dance & Speech**

affiliated to the

British & International Federation of Festivals for

**Music, Dance & Speech,**

Patron Her Majesty The Queen

Associate Member of the Association of Festival Organisers UK

The above festival will be held All Island in

**April for Dance, May for Speech & Drama, June for Music** in 2003 (Entries open in December)

The British Youth Camp (Residential & Non Residential) for Musical Theatre, Orchestra, Drama & Dance will be held from April 27th to May 4th 2003 (Entries open in December)

*Inquiries :* **L.B.ANTON DIAS.** 49 Temple Road, Jaffna. 0777 788127, & Director **JOY FERDINANDO**

International Institute of Music, Speech & Drama Pvt. Ltd. No. 37, 5th Lane, Colombo 3. Tel.575053, Tel/Fax 074 513969

e-mail : jferdinando@mail.ewisl.net (11807)

சங்கீத, நடன, நாடக, ஆங்கில ஆசிரியர்கள் தமது மாணவர்களையும், உள்ளூர், லண்டன் பரீட்சைக்குத் தோற்றுவிக்கவும், மேற்படி விழாவில் பங்குபற்றவும் மேலதிக விவரங்கட்கு, *எல்.பி.அன்ரன்டயஸ். 49, கோயில் வீதி, யாழ்ப்பாணம். 0777 - 788127*



**INTERNATIONAL INSTITUTE OF MUSIC, SPEECH & DRAMA**

**Examinations:**

Local Practical Examinations in Music (Piano, Organ), Spoken English, Speech & Drama & Effective Speaking.

Local Written examinations in Theory of Music in all 3 Languages and Written English.

**Foreign Examinations.**

*Guildhall School of Music & Drama London in* Music - Piano, Organ, String & Wood Instruments, Speech & Drama, Verse Speaking, Prose Reading, Acting Studies, Speaking Skills.

Syllabuses & all details available at L.B.Anton Dias. 49 Temple Road, Jaffna. 0777 788127, & Director Joy Ferdinando

**International Institute of Music, Speech & Drama Pvt. Ltd.**

No. 37, 5th Lane, Colombo 3. Tel.575053, Tel./Fax 074 513969

e-mail : jferdinando@mail.ewisl.net (11808)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா துரைராஜா

சாவகச்சேரி, கோவில் குடியிருப்பைச் சேர்ந்த கந்தையா துரைராஜா அவர்கள் 13.12.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் மீனாட்சி அம்மாவின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன் (அரசாங்க ஒப்பந்தகாரர் - சாவகச்சேரி), காலஞ்சென்ற சர்வேஸ்வரன் மற்றும் ஜெகதீஸ்வரி (கனடா), நகுலேஸ்வரன் (கனடா), ராமேஸ்வரன் (சுவிஸ்), சர்வேஸ்வரி, நகுலேஸ்வரி (கனடா), சங்கரீசுஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சற்குணவதி, ரஞ்சன்சிவகுமார் (கனடா), ஜெசிந்தா (கனடா), மிலேனிசாந்தி (சுவிஸ்), பஞ்சாட்சரம் (ராசம் மில், சாவகச்சேரி), சிவகுமார் (கனடா), பிறேமினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெசிபன், சஜீபன், பிரசன்னா, சுலக்சனா, சாரங்கன், துளசி, ஜெசிந்தா, ஜோன், டயானா, ஷாலினி, பிரபாலினி, ஹபிசன், நிலானி, மிதுனா, அபினா, நினுஜன், நிலக்ஷன், நிதுரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் திரவியம், காந்திமதி, பவளராணி, ராமச்சந்திரன், செல்வராசா ஆகியோரின் ஆசை அண்ணரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2002) திங்கட்கிழமை 12மணியளவில் தாமோதரம்பிள்ளை வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாமோதரம்பிள்ளை வீதி,*
*சாவகச்சேரி.* (11811)

தகவல்:
து.ஜெகதீஸ்வரன் (மகன்)
(பெரியராசா)

## மா.க.பூபாலசிங்கம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பூபாலசிங்கம் அவர்கள் கடந்த வியாழக்கிழமை 12.12.2002இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி.கந்தையா ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் பாக்கியம் தம்பதிகளின் மூத்த மருமகனும் கண்மணியின் அன்புக் கணவரும் இரத்தினசிங்கம் (மலேஷியா), காலஞ்சென்றவர்களான இராசசிங்கம், கனகசிங்கம், ஆறுமுகம், செல்லமுத்து, தங்கரத்தினம், மற்றும் கரகரட்ணம் (இளைப்பாறிய தபாலதிபர், கொழும்பு) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற கெங்காதேவி, தர்மபாலன், கிருஷ்ணபாலன் (கனடா), ஞானதேவி, இரகுபாலன் (இத்தாலி), தர்மதேவி (ஆசிரியை, யா/வயாவிளான் ம.ம.வி), மல்லிகாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீகாந்தன் (ஓய்வு பெற்ற P.W.D. மெக்கானிக்), இராஜேஸ்வரி, இரஞ்சினிகுமாரி (கனடா), வெற்றிவேலாயுதம், பாலஸ்ரீ (இத்தாலி), மனோகரன் (சிவசக்தி ஸ்ரோர்ஸ் அன் கொமினிகேசன்), இரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்ரீயாந்தி ஜெகதீஸ்வரன் (கனடா), சுயந்தி சிவகுமார், நிசந்தி, சிரோசன் (கனடா), லக்ஸ்சினி, தர்சன், சுதர்சன், நிதர்சன், தர்ஷிகா, கௌசிகன், விதூசன், டக்சன் (கனடா), ரதீசன் (ஜேர்மனி), விதுசன், மலரவன் (இத்தாலி), சந்துரு, கௌரீசன், கவிமாறன், இராகுலன், கார்த்திகன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் கீர்த்திகா, பிரதீபன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2002), ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவகுல வீதி,*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.* (C/25416)

தகவல்:
பூ.கண்மணி (மனைவி)
மக்கள், மருமக்கள்.

## அல்லிக்குட்டி கந்தசாமி

யாழ்.சிறுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த அல்லிக்குட்டி கந்தசாமி அவர்கள் 13.12.2002 வெள்ளிக்கிழமை திருச்சியில் (இந்தியா) காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2002) திங்கட்கிழமை திருச்சியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி வடக்கு,*
*நீர்வேலி.* (11816)

தகவல்:
அ.சின்னத்துரை (சகோதரன்)

# ஈ.பி.டி.பியினரின் முகாம் மீது அச்சுவேலியில் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம்,டிசெ.15

அச்சுவேலியில் உள்ள ஈ.பி.டி.பி முகாம் மீது நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் குண்டுவீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதனால் முகாம் அமைந்திருந்த வீட்டின் கண்ணாடிகள் உடைந்து நொருங்கியதுடன் வீட்டுக்கும் சிறிய சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

முகாமை நோக்கி குண்டு வீசப்பட்டதைத் தொடர்ந்து அங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அச்சுவேலி இராணுவ முகாமுககு அண்மையிலேயே ஈ.பி.டி.பி முகாம் அமைந்துள்ளது. இரவு நேரம் இராணுவ முகாம் பக்கமிருந்து துப்பாககி சூட்டுச்சத்தங்கள் கேட்டதனால் அப்பகுதி மக்கள் பெரும் பீதிக்குள்ளாகினர்.

நேற்றுக் காலையில் ஈ.பி.டி.பி. முகாம் முன்பாக 50இற்கும் மேற்பட்ட பொலீஸாரும், படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர். (ம)

# வெளிநாடுகள் புலிகள் மீதான தடையை நீக்க ஆட்சேபமில்லை

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு,டிசெ.15

விடுதலைப் புலிகள் அமைப்பு மீது தடைவிதித்துள்ள வெளிநாடுகள் அத்தடையை நீக்குவது குறித்து இலங்கை எந்தவித ஆட்சேபனையையும் தெரிவிக்காது. எனினும் அத்தடையை நீக்குமாறும் இலங்கை அரசு வெளிநாடுகளிடம் கோரட்போவதுமில்லை.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து பரிசீலித்து வருகின்றன என்று வெளியாகும் செய்திகள் குறித்து அவரிடம் கேட்கப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புலிகள் தற்போது சமாதான பேச்சுக்களில் முழு மனதுடன் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் அவர்கள் மீதான தடையை வெளிநாடுகள் நீக்குவது என்பது அந்த நாடுகள் சம்பந்தப்பட்ட விடயம் அவ்வாறு தடை நீக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகளும் அதிகம் இருக்கின்றன.

புலிகள் மீதான தடையை நாம் நீக்கிவிட்டோம். எனவே வெளிநாடுகள் அவர்கள் மீதான தடையை நீக்குவதற்கு இலங்கை அரசு ஒருபோதும் ஆட்சேபம் தெரிவிக்காது. அதேசமயம் தடையை நீக்குமாறும் இலங்கை அரசு எந்த ஒரு நாட்டையும் கேட்டுக் கொள்ளாது.

- என்றார் பீரிஸ். (ம)

# புனர்வாழ்வு நடவடிக்கைக்கான உபகுழு செயலகம் இன்று திறப்பு

## கிளிநொச்சியில் நிகழ்வுகள்

கிளிநொச்சி,டிசெ.15

வடக்கு-கிழக்கு அவசர மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான உபகுழுவின் செயலகம் இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சியில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்படவிருக்கின்றது.

அதைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணி முதல் மாலை 6மணி வரை உப-குழுவின் கூட்டம் அங்கு நடைபெறும்.

நோர்வே தூதர் ஜோன் வெஸ்ட்பேர்க் தலைமையில் நடக்கவிருக்கும் இந்த நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகள் குழுவும் சமாதான செயலணிக் குழுவின் செயலாளர் பேர்னாட் குணதிலக தலைமையிலான அரச குழுவும் பங்குபற்றும்.

அத்துடன் நோர்வே மற்றும் ஜப்பான் நாடுகளின் பிரதிநிதிகளும் இக் கூட்டத்தில் பங்குபற்றுவர்.

செயலகத்துக்கான திட்டங்கள் அதற்கான வங்கிகணக்குகள் தொடர்பாக கூட்டத்தில் ஆராயப்படும். நாளையும் உபகுழுக்கூட்டம் இடம்பெறும். (ம-3)

## சாளம்பை வீதி பாவனைக்கு!

வரணி,டிசெ.15

வரணி பிரதேசத்தில் அமைந்துள்ள சாளம்பை பாதுகாப்புப் படையினர் முகாமூடான வீதி போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

கடந்த வாரம்முதல் பொது மக்களும், வாகனங்களும் இந்த வீதியூடாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள து. (எ-170)



நேற்று முகமாலையில் இடம்பெற்ற பாதுகாப்பு உப குழு கூட்டத்தின் இடையே ஓய்வுக்காக வெளியே வந்த நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்ட் பேர்க் (இடது) யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட தலைவர் ஒலே புரொண்டம் (மத்தி) யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் அளவளாவும் காட்சி.

## இருவேறு விபத்துக்களில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

இருவேறிடங்களில் கடந்த வியாழனன்றும், வெள்ளியன்றும் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், ஓட்டோ விபத்துக்களில் சிக்கி இருவர் படுகாயமடைந்தனர்.

வல்லைப் பாலத்தில் வெள்ளியன்று எதிரும் புதிருமாக வந்த சைக்கிளும் ஓட்டோவும் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து வந்த நெல்லியடியைச் சேர்ந்த வல்லிபுரம் சிவநேசன் (வயது-24) என்பவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இணுவிலில் ஓட்டோ ஒன்று புரண்டு விபத்துக்குள்ளானதில் ஓட்டோவின் பின் ஆசனத்தில் இருந்து சென்றவரான ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னத்துரை சசிகரன் (வயது-26) என்பவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-15)

## ஆசிரியர் சங்க விசேட கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்ட கிளையின் விசேட கூட்டம் இன்று காலை 10 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறும். (எ)

## பிரதம பரீட்சகர்கள் பயண ஒழுங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.15

ஜி.சீ.ஈ சாதாரணதர விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக யாழ். மாவட்டத்திலிருந்து பிரதம பரீட்சகர்களாக அழைக்கப்பட்டவர்களின் பயண ஒழுங்கு தொடர்பாக ஆராய்வதற்கென சம்பந்தப்பட்டவர்களை நாளை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் ஒன்றுகூடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ)

## வினைத்திறமை காண் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.15

நாடு முழுவதிலும் உள்ள ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் தாதிமார்களுக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறுகிறது. யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் தாதிகளுக்கான பரீட்சை யாழ்.தாதிய பயிற்சி பாடசாலையில் நடைபெறும். நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இந்தப் பரீட்சை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (எ-139)

# உயர் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு தனது அதிருப்தியை வெளியிட்டது.

கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசுகையில் பாதுகாப்புத் தொடர்பான உபகுழுவின் புலிகள் தரப்புத் தலைவர் கேணல் கருணா புலிகள் தரப்பின் அதிருப்தியை வெளியிட்டார். அவர் அங்கு தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் நடைமுறையிலுள்ள பாதுகாப்பு வலயம் தொடர்பாக இன்றைய கூட்டத்தில் நீண்டநேரம் ஆராய்ந்துள்ளோம். இது தொடர்பான பேச்சுக்கள் மிகவும் இறுக்கமான முறையில் நடந்தன.

உயர் பாதுகாப்பு வலயத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்த அனுமதிப்பதாகவும் அது தொடர்பாக விவரங்களை எமக்கு அறிவிப்பதாகவும் படைத்தரப்பு தெரிவித்திருக்கிறது.

முன்பு மக்கள் அடர்த்தியாக வசித்த ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக எதிர்வரும் 21ஆம் திகதி அறிவிப்பதாக எமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட படைத் தளபதி இந்த அறிவிப்பை விடுப்பார் என்று கூறப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்பின் பின்னர் எமது வடமுனைத் தளபதி கேணல் தீபன், வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, கண்காணிப்புக் குழுத் தலைவர் ஆகியோர் இணைந்து அந்தப் பிரதேசத்தில் மக்களை மீளக்குடியமர்த்தும் பணிகளை ஆரம்பிப்பார்.

இந்த மாதத்துக்குள் குறிப்பிட்ட அந்தப் பிரதேசத்தில் மக்கள் குடியமர்த்தப்படாத பட்சத்தில், அடுத்த மாதம் 20ஆம் திகதி இடம்பெறும் உபகுழுக் கூட்டத்தில் பங்குகொள்ளப்போவதில்லை என்று அவர்களிடம் தெரிவித்துவிட்டோம்.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் வெறுமனே இந்தக் கூட்டத்தில் நாம் பங்கேற்பதில் எந்த அர்த்தமும் இல்லை. குடாநாட்டு மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்கவேண்டும். குடாநாட்டில் இராணுவக் கெடுபிடிகள் தணியவேண்டும். இவற்றைத் நாங்கள் கூட்டங்களில் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

பாதுகாப்பு தொடர்பான உபகுழுவின் பல கூட்டங்கள் நடந்து முடிந்துள்ளன. இவற்றின் மூலம் எந்தவித முன்னேற்றகரமான முடிவுகளும் எட்டப்படவில்லை என்றே கூறவேண்டும்.

மாவட்ட ரீதியாக நடந்த கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் படி மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு தடையாக இருந்த சில விடயங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வீதித் தடைகள் பல அகற்றப்பட்டிருக்கின்றன. அம்பாறை மாவட்டத்திலும் நிலைமை ஓரளவு சீராகியுள்ளது. ஆனால் குடாநாட்டைப் பொறுத்தவரையில் உருப்படியான எந்த மாற்றத்தையும் காணவில்லை. இந்த மாத இறுதிக்குள் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் உபகுழுவின் அடுத்த கூட்டத்தில் பங்குபற்றப்போவதில்லை என்பதை நேற்றைய கூட்டத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டோம்.

இனி நாட்டுக்கு வெளியே நடக்கும் சமாதானப் பேச்சுக்களில் தான் இந்த விவகாரத்தை ஒரேயடியாகப் பேசுவோம் என்று அரசுத் தரப்பிடம் தெரிவித்துவிட்டோம்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் விடயத்தில் படைத்தரப்பினர் மத்தியில் சந்தேகங்கள், ஐயங்கள் காணப்படுகின்றன. இந்த நிலை நீடிக்கும் வரை பேச்சுக்களில் இணக்கம் ஏற்படப்போவதில்லை.

- இவ்வாறு கேணல் கருணா தெரிவித்தார். (ஐ-3-8)

# யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒஸ்லோவிலும் இந்த விடயங்கள் குறித்துப் பிரஸ்தாபித்தோம். அது பற்றி நடவடிக்கை எடுப்பதாக கூறப்பட்டது. இங்கும் இந்த விடயத்தில் என்ன செய்வது என்பதைப் பின்னர் தெரிவிப்பதாக கூறியுள்ளனர்.

இந்த விவகாரத்தில் அரசு உறுதியாக செயற்பட்டு முடிவு எடுக்கவேண்டும். ஏனெனில் இந்தப் பிரச்சினை இடையில் உருவான ஒன்றாகும்.

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 10 மாதங்கள் ஆகின்றன. இதுவரை நாட்டில் ஓர் அமைதியான சூழல் நிலவுகிறது. ஈபிடிபியினரின் பிரச்சினை இதற்கு இடையில் உருவான ஒன்றாகும். இதற்கு அரசு துணிந்து நடவடிக்கை எடுக்காவிட்டால் பேச்சுக்கள் குழம்பும் வாய்ப்பும் இருக்கிறது - என்றார். (ம-3)

# அர்த்தமற்ற...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை ஏற்படுத்தியுள்ளன. அடுத்த சுற்றுப் பேச்சுக்களின்போது வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் வாழும் சிங்கள முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் - இவ்வாறு பிரதமர் தெரிவித்தார். (ஐ)


வலம்புரி பட்டாசுகள்



பண்டிகைக் காலங்களில்
உங்கள் இல்லங்களில்
உங்களை மகிழ்விக்கும்
தரமான பட்டாசுகள் என்றால்
அது வலம்புரி பட்டாசுகளே!

பட்டாசுகள், வாண்வெடிகள்,
மத்தாப்புக்கள், சுழல் சக்கரங்கள்.

ஏக விநியோகஸ்தர்

Saraswathi Stores
12, Wolfendhal Street, Colombo 13. Tel : 348635, 432035
Fax : 471275 E-mail : saraswathy@sltnet.lk

இளமை மற்றும் அழகின் ரகசியம்



பயோட்டின் - H
உங்கள் கூந்தல், சருமம் மற்றும் நகங்களின் ஊட்டத்திற்கு...
தினம் இரண்டே கேப்ஸ்யூல்கள்

Biotin - H ஆசிய நாட்டவரின் வாழ்க்கை சூழலுக்கேற்ப பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே Biotin - H தலைமுடி உதிர்தலை முற்றாக தடுப்பதுடன் அடர்த்தியான கூந்தலுக்கும் வழிவகுக்கின்றது.

பயோட்டின் - H
விஞ்ஞான சான்று பெற்றது.
பக்க விளைவுகள் இல்லை.

ஏக விநியோகஸ்தர் :
ஜெகன் பார்மஸி, யாழ்ப்பாணம். T.P.: 021 2194
சந்தைப்படுத்துவோர் : ARKEM கொழும்பு. (C-25207)



வெளிவந்துவிட்டது!
"அஷ்டலக்ஷ்மி" தினத்தாள்
கலண்டருடன் 12 இராசிகளுக்குமான 2003 ஆம் ஆண்டு புத்தாண்டு பலன் புத்தகம் இலவசம்!
கலண்டர் விலை ரூபா 170/-
✦ மேசை தினக்குறிப்பு
✦ Pocket Diary
} தமிழில்
என்பனவும் கிடைக்கும்.
அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
கண்டி வீதி, கைதடி.
(1577)



புலமைப் பரிசில் திட்டம் - 2003
விண்ணப்ப முடிவு திகதி - 20.12.2002
O/L 2002 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி புலமைப்பரிசில் திட்டத்தின் முடிவு திகதி 20. 12. 2002 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.
இயக்குநர்
IIS யாழ்ப்பாணம்.
(11801)



தேவை
*ஒவ்செற் மெசின் மைண்டர் (Offset Machine Minder)
Solana ஒவ்செற் மெசின் இயக்கத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை.
*ரைப் செற்டெர்ஸ் - (Type Setters)
Desktop Publishing/ Word/ Page maker, Corel Draw & Photo Shop பயின்றவர்கள் Typing தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை.
இவ்விரு பதவிகளுக்கும் விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரம் மற்றும் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களுடன் 21.12.2002 அன்று அல்லது 22.12.2002 காலை 9.00 - 12.00 மணிக்குள் 701, K.K.S Road, Jaffna என்னும் முகவரிக்கு நேரில் சமூகம் தரவும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.



ஆய அலுவலர், ஆய உதவியாளர் பணி நிலைகளுக்கான
நேர்முகத் தேர்வு
நாளை (16.12.2002) திங்கள் காலை 10 மணி தொடக்கம் 1 மணி வரை
பளை ஆயப்பகுதிக் கண்காணிப்பு நிலையத்தில்
நடைபெறும்
நேர்முகத் தேர்வின் போது சுயவிவரம் உட்பட அனைத்து கல்வித் தகைமைச் சான்றுடனும் சமுகந்தரவும்.
மனிதவள அலகு,
ஆயப்பகுதி,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
விண்ணப்பித்த அனைவரும் சமுகம் தரவும்
(11792)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.